
தென்றல் வீசி
வரவேண்டும்
ரமணிசந்திரன்

# தென்றல் வீசி வர வேண்டும்



## 1

"நீ எங்காவது போய்விடுகிறாயா, வசு?"

சற்று நேரம், வசுமதிக்குச் சொல்வது, செய்வது அறியாத நிலை. அவளால் எங்கே போக முடியும்?

அவள் அறிந்த வரையில், அவளுடைய ஒரே போக்கிடம், இந்தப் பெரியம்மா வீடுதான். இதை விட்டு, எங்காவது போய்விடு என்று அந்தப் பெரியம்மாவே சொல்லும் நிலை ஆகி விட்டதே.

அதுவும், அவளாக ஒரு தப்புச் செய்யாதபோது.

அவளிடம் குற்றம் கிடையாது என்று, பெரியம்மாவுக்கும் நன்றாகவே தெரியும்.

அதனால்தான், முகத்தை நேராகப் பாராமலே சொல்லியாகிறது.

இன்று மட்டுமல்ல. எப்போதுமே இப்படித்தான். நியாயமற்ற ஒன்றைச் செயல்படுத்தும்போது, பெரியம்மாவின் பார்வை வேறெங்கோதான் இருக்கும்.

ஆனால், பெரியம்மாவையும் குறை கூறுவதற்கில்லை.

இந்தப் பதினெட்டு ஆண்டுகளாக, அவளுக்கு அடைக்கலம் கொடுத்து ஆதரித்து வந்திருக்கிறாள். அதிலும் கணவனின் ஒப்புதல் கிடையாது என்று நன்றாகத் தெரிந்த பிறகும், தங்கை மகளை ஏற்று, இத்தனை ஆண்டுகளாக எப்படியெப்படியோ சமாளித்து வந்திருக்கிறாள்.

எப்படித்தான் சமாளித்தாளோ, என்ன? எப்படித்தான் தாங்கினாளோ என்றுதான் சொல்ல வேண்டும்.

சின்ன வயதில், பெரியம்மாவுடைய மகள் அஞ்சலிக்கும் தனக்கும் காட்டப்படும் வித்தியாசம் குறித்து, வசுமதிக்கு ரொம்பவே ஆத்திரம் வரும்.

அவள் விதம் விதமாக உண்ணுகையில், அதுவும் அளவற்று விழுங்கும்போது, சில சமயம் வசுமதிக்கு எதுவுமே கிடைக்காமல் போவது உண்டு. கிடைத்தாலும், ஒன்று அல்லது இரண்டு வாய். சுவை பார்க்க மட்டும்தான் என்பது போல.

அஞ்சலிக்குப் பளபளவென்று பத்து உடைகள் என்றால், இவளுக்குச் சாதாரணமாக ஏதாவது வாங்குவார்கள். அதுவும் ஒன்றுமே வாங்கா விட்டால் நன்றாகத் தோன்றாது என்பதற்காகத்தான்.

இந்த அளவில் கிடைப்பதற்கே, பெரியம்மா பெரும் தியாகங்கள் செய்திருக்கிறாள் என்பது தெரியாமல், வசுமதி குமுறுவாள். தனிமையில்தான். வெளியே காட்டினால், அதற்கும் வாங்கிக் கட்ட வேண்டுமே.

அன்றாட உணவைக்கூடப் பெரியப்பா வீட்டில் இருக்கும்போது அஞ்சலியோடு சாப்பாட்டு மேஜையில் சேர்ந்து அமர்ந்து, வசுமதி சாப்பிட முடியாது.

தந்தையும் மகளும் உண்டு முடிக்கும் வரை, பசியோடு காத்திருக்க நேர்கையில், அவளுக்குக் கோபம் பற்றிக்கொண்டு வரும்.



ஆனால், செயலற்ற, பயனற்ற கோபம்.

அந்த ஆத்திரத்தை வெறும் பார்வையால் வெளிக் காட்டினால்கூட ஒன்றுமற்ற யாரும் பார்க்குமுன், பெரியம்மா, அவளை வெளியே இழுத்துப் போய் விட்டு விடுவாள். அல்லது பெரியப்பா சத்தம் உரத்துக் கேட்கும்.

பின்னது நேர்ந்தால், அதன் பின் இரண்டு நாட்கள் அவர் கண்ணில் படாமல், வசுமதி சமையல்கட்டிலேயே ஒளிந்து கிடக்க நேரும்.

கண்ணைப் பாராமல், பெரியம்மா கட்டளையிட்டு விடுவாள்.

பெரியம்மாவின் கட்டளையை அலட்சியம் செய்து வெளியே நடமாடியதில், பெரியப்பாவின் கையால் இரண்டு மூன்று முறை, வசுமதி குட்டு வாங்கியிருக்கிறாள். குட்டு என்றால், தலையில் கொழுக்கட்டையாகப் புடைத்து வீங்கிவிடும். தாங்க முடியாத வலியில், கண் கலங்கி முகம் கன்றிப் போய்விடும்.

இதிலிருந்து காப்பாற்றத்தான் பெரியம்மாவின் நியாயமற்றுத் தோன்றும் கட்டளைகள், பிறப்பிக்கப்பட்டன என்று புரிந்து கொண்ட பிறகு, அது போன்ற தருணங்களில், சமையலறை வாயிலுக்குக் கூட, வசுமதி வருவதில்லை.

இருவரையும் படிக்க வைத்ததில் வேறுபாடு இருந்தது. அஞ்சலி பள்ளி வேனில் கான்வென்டுக்குப் போனால், வசுமதி நடந்து, கார்ப்பரேஷன் பள்ளிக்குப் போனாள்.

படிக்கிற பெண் எங்கேயும் படிப்பாள் என்பதற்கிணங்க, ப்ளஸ் டூவில் அவளுக்கு நல்ல மதிப்பெண்கள் கிடைத்தன. ஆனால், அவள் ஆசைப்பட்ட மருத்துவப் படிப்பு, அவளுக்கு எட்டாக் கனியாகவே இருந்து போயிற்று.

ஆனால் இதற்குள் வசுமதி தன் நிலைமை பற்றித் தெளிவாகத் தெரிந்து கொண்டாள்.

அந்த வீட்டில் அவளது விருப்பங்களுக்கு மதிப்புக் கிடையாது. தலைக்கு மேல் கூரையும், உண்ண உண வும், உடுக்க உடையும் கிடைத்திருப்பதே பெரிய விஷ யம். அவைகளைத் தங்கை மகளுக்கு அளிப்பதற்கே, பெரியம்மா அரும் பாடு படுகிறாள்.

அதற்காகப் பெரியப்பா, அவருடைய தாயார் இரு வரிடமும் பெரியம்மா பெரிதும் சமாளிக்க வேண்டி யிருக்கிறது என்பதெல்லாம் புரிந்து விட்டிருந்தது.

அந்த இருவரிடமுமே வாதாடிப் பயன் இராது. நியாயத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் என்றால், இது சரி, இது தப்பு என்று வாதம் செய்து, புரிய வைக்கலாம். புரிய வைப்பதோடு பிரச்சினையும் தீர்ந்து போகும்.

ஆனால், தனக்குப் பிடித்ததுதான் நியாயம் என் கிறவர்களோடு பொறுத்துத்தான் போக வேண்டும்.

கோதை எத்தனை பொறுத்துப் போனாள் என்பது புரியத் தொடங்கியபோது, இந்தக் கஷ்டம் எதற்கு என்று, அவளை ஓர் அனாதை விடுதியில் கொண்டு போய்த் தள்ளாததே அதிசயம் என்றுகூட, வசுமதிக்குத் தோன்றும்.

எத்தனை வலிகள்! எத்தனை அவமதிப்புகள்!

எல்லாம் புரிந்ததால் அவளுக்குக் கோதை மீது மிகுந்த பிரியம் - பெற்ற தாய் இருந்திருந்தால், அவள் மீது இவ்வளவு பாசம் இருந்திருக்குமோ, என்னவோ, அந்த அளவு அன்பு பெருகி விட்டது. தன்னால், இனி அவள் வேதனைப் படக் கூடாது என்கிற உறுதி.

அதனாலேயே, தேவையான மதிப்பெண்கள் இருந்த போதும், ஆசைப்பட்ட டாக்டர் படிப்பு பற்றி, அவள் வாயே திறக்கவில்லை. ஏழைக்கேற்ற எள்ளுருண்டை யாக, 'நர்ஸிங் கோர்ஸ்' செய்தாள். மனித உடம்பின் துன்பம் தீர்க்கும் பணி செய்வதில், டாக்டர், நர்ஸ் என்று என்ன பெரிய வேறுபாடு! குறிக்கோள் நிறைவேறத் தானே செய்கிறது என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொள்வாள் வசுமதி.



ஆனால், அந்தச் செலவுக்கே, பெரியப்பாவிடம், பெரி யம்மா எப்படி யெல்லாம் கெஞ்சிக் கூத்தாடி ஏற்பாடு செய்தாளோ என்று எண்ணும்போது, அவளுக்குக் கூசும்.

ஆனால் ஒன்று. படிப்பு முடிந்து, வசுமதி சம்பாதிக்கத் தொடங்கி, அதையும் முழுவதாகப் பெரியம்மா - பெரி யப்பா கையில் கொடுத்து, அவர்கள் காலில் விழுந்து வணங்கவும், சிற்றம்பலத்துக்குச் சந்தோஷமாகி விட்டது.

''பரவாயில்லையே கோதை. நாம் பாடாய்ப் பட்டு வளர்த்ததற்கு, இந்தப் பெண்ணிடம் நன்றி இருக்கிறதே. இந்தப் பணத்தைத் தாம்தூம் பண்ணி விடாமல், ஏதாவது சீட்டுப் போட்டுச் சேர்த்து வை. சமயத்துக்கு உதவும்,'' என்று, ஏதோ தானும் சேர்ந்து, பல தியாகங்கள் புரிந்து, அவளை வளர்த்தது போலப் பேசினார்.

சேர்க்கும் பணம் எந்தச் சமயத்துக்கு உதவும் என்று அவரும் சொல்லவில்லை. அங்கிருந்த பெண்களும் கேட்கவில்லை.

கடைசியாக, வீட்டுப் பெண் அஞ்சலியின் திருமணச் செலவுக்கு அந்தப் பணத்தைப் பயன்படுத்தியபோது, பெரி யம்மாவின் முகம் சற்று வாடினாற் போலத் தோன்றிய போதும், வசுமதிக்கு வருத்தம் சிறிதும் இருக்கவில்லை.

முதல் காரணம், அவளுடைய பெரியம்மா பெற்ற பெண், அஞ்சலி என்பது.

அத்தோடு, இத்தனை காலம், பெரியப்பாவின் உழைப்பில் வந்த பணத்தில்தானே, அவளும் உண்டு

உடுத்து வளர்ந்திருக்கிறாள்! அதற்கான கைம்மாறை இப்படியன்றி வேறு எப்படிச் செய்ய முடியும் என்ற எண்ணம்தான் அவளுக்கு.

ஆனால், அந்தக் கைம்மாறை, அவர் இன்னும் வேறு விதமாகவும் எதிர்பார்த்ததுதான் அவளைக் கலங்கடித்து விட்டது. அவளையும், அவளுடைய பெரியன்னையையும்.

அஞ்சலியின் திருமணம்வரை, அந்த வீட்டில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை.

சொல்லப் போனால், பெரியன்னை வீட்டுக்கு வந்த பிறகு, இத்தனை ஆண்டுகளில், வசுமதி முதல் முறையாக மகிழ்ச்சியோடு இருந்தாள் எனலாம்.

பொதுவாக, அஞ்சலிக்கு எதிலும் முதலிடம் கொடுத்து விட்டால், அதற்கு மேல், அவளால் பிரச்சினை இராது.

வசுமதியால் செலவு இல்லை, வரவுதான் என்ற நிலை வந்த பின், பெரியப்பாவும் அவளிடம் முகம் சுழிப்ப தில்லை. கோதையின் முயற்சியில், துணிமணிகள்கூடச் சற்று உயர்ந்தவையாக, வசுமதிக்குக் கிடைக்கலாயின.

செய்த வேலையும், அவளுக்குப் பிடித்தமான பணி. துன்புறுகிறவர்களின் துயர் குறைக்கும் பணி. ஊக்கமும் கவனமுமாக அவள் பணி புரிந்த விதம், பல மருத்துவர்களின் மதிப்பைப் பெற்றுத் தந்தது. அதிலும், சில ஆண்டுகளே பெரியவளான டாக்டர் வந்தனாவின் தோழமை வசுமதிக்குப் பெரிய பொக்கிஷமாகத் தோன்றியது.

இப்படி வசுமதி மன நிறைவோடு இருக்கும்போது தான் அஞ்சலியின் திருமணப் பேச்சுத் தொடங்கியது.

அதிலும் எல்லாருக்கும் மகிழ்ச்சிதான்.

பசையுள்ள இடம். பார்வைக்கு நன்றாக இருந்த தோடு, படித்த மாப்பிள்ளை. எந்தக் காரியத்தையும் சாதித்துத் தரும் அரசியல் செல்வாக்கு உறவுகள். அதனால், தொழிலும் கொடி கட்டிப் பறந்தது.



பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் பிடித்துப் போகத் திருமண ஏற்பாடுகள் மளமளவென்று நடந்து, திருமணமும் நல்லபடியாக நிறைவேறியது.

சிற்றம்பலத்தின் கண்ணுக்கு மறைவாக இருக்க வேண்டிய அவசியம் இல்லாது போய்விடவே, வசுமதியும் திருமண வேலைகளில் உற்சாகத்துடன் பங்கெடுத்துக் கொண்டாள்.

அப்போதுதான், அந்தப் பொல்லாத அரசியல்வாதி இளம்பிறையனின் கண்ணில் அவள் பட்டது.

திருமணத்தின்போது, அவன் வசுவிடம் வந்து பேசினான்.

மாப்பிள்ளை வீட்டிற்கு முக்கியமான உறவினர் என்று, வசுமதியும் மரியாதை கொடுத்தாள். அத்தோடு, கிட்டத்தட்ட, அவளுடைய தந்தை வயது. பெரியப்பா சிற்றம்பலத்துக்குச் சில ஆண்டுகள்தான் சின்னவனாக இருப்பான். எனவே, சாதாரணமாகவே அவளும் அவனுடன் பேசினாள்.

ஆனால், திருமண ஆரவாரங்கள் முடிந்து, சில நாட்களுக்குப் பிறகு, சிற்றம்பலம் அவளை அழைத்து, இளம்பிறையன் அவளை விரும்புவதாகச் சொல்லவும், சற்று நேரம் வசுமதிக்கு ஒன்றுமே புரியவில்லை.

அது உண்மை யென்றும் எண்ணவில்லை. மகளின் திருமணம் என்கிற ஒரு பெரிய வேலை முடிந்த மிதப்பில், அவருக்குத் தெரிந்த அளவில் பெரியப்பா சற்று வேடிக்கையாகப் பேசுகிறார் என்றுதான் அவள் முதலில் நினைத்தாள்.



## 2

சிற்றம்பலத்தின் பேச்சை வசுமதி உண்மையென்று நம்பாததற்குப் பல காரணங்கள் இருந்தன.

முதல் காரணம் இளம்பிறையன் திருமணம் ஆகிக் குழந்தை குட்டிகளோடு வாழ்கிறவன். கல்லூரியில் படிக்கும் பெண் தொடங்கி, நாலைந்து பிள்ளைகளோடு, திருமண மண்டபத்திலிருந்து, திருமதி இளம்பிறையன் உறவினரிடம் விடைபெற்றுச் சென்றதை வசுமதியே பார்த்திருந்தாள்.

பெண் வீட்டுக்காரியாகச் சுற்றிச் சுழன்று வேலை செய்த அவளிடம் கூடத் தலையாட்டி விடைபெற்றாளே!

அடுத்தது, அவனது வயது. சிற்றம்பலத்தை விட, மிஞ்சி மிஞ்சி ஐந்தாறு வயதே குறைவாக இருக்கக் கூடும். என்னதான் தலைமுடிக்குச் சாயம் பூசியிருந்தாலும், வயது தெரியத்தான் செய்தது.

அத்தோடு, அவன் அரசியலில் செல்வாக்குடையவன் என்று சொன்னார்கள். ஒரு பெரிய மனிதன் என்ற பெயருக்கும், இந்த மாதிரிச் சின்னத்தனத்துக்கும் எப்படி ஒத்துப் போகும்? பத்திரிகைகள் நாறடித்து விடாவா?

இத்தகைய பல காரணங்கள் இருந்ததாலேயே, பெரியப்பா வேடிக்கை செய்வதாக வசுமதி எண்ணினாள்.

சற்று ரசனைக் குறைவான வேடிக்கை. அவ்வளவே.

அவருக்கு அது பழக்கம்தான். அசிங்கமான ஜோக் அடிப்பார். மனைவியை அனுசிதமான இடத்தில் கிள்ளி விடுவார். வலியிலும், அவமானத்திலும் கோதையின் முகம் கன்றிச் சிவந்து, கண்களும் கலங்கிவிடும்.

ஆனால்...



இப்போது சிற்றம்பலம் வேடிக்கை செய்யவில்லை, உண்மையாகவேதான் கேட்கிறார் என்று தெரிந்தபோது, அவளுக்கு மூச்சு முட்டிப் போயிற்று.

மனைவி தவிர, மற்றொரு பெண்ணின் சகவாசத்தால், அரசியல் செல்வாக்கு அழிந்து விடும் என்று அவள் சொன்னதுதான் வேடிக்கை என்று சிற்றம்பலம் அழுத்தம் திருத்தமாகக் கூறவும், வசுமதி அதிர்ந்தாள்.

அந்த இளம்பிறையனுக்கு, ஏற்கெனவே தாலி கட்டியும் கட்டாமலும் இன்னும் நாலைந்து தொடுப்புகள் உண்டு என்று பாராட்டாகவே கூறினார் சிற்றம்பலம்.

பழைய காலத்து ராஜாக்களைப் போல, பெண்டாட்டிகள் பெருகப் பெருக அரசியல்வாதிகளுக்குப் பெருமை தானாம். அத்தனை பெண்களைக் கட்டிக் காக்கப் பணமும் சக்தியும் இருக்கிறது என்றல்லவா காட்டுகிறார் என்றபோது, சிற்றம்பலத்தின் குரலில் சிறு பொறாமை கூடத் தெரிந்தது.

தன்னால் முடியவில்லையே என்று வருத்தம் போலும். என்ன மனிதர்கள்!

சிற்றம்பலத்தின் பேச்சைக் காது கொடுத்துக் கேட்கவே வசுமதிக்குப் பிடிக்கவில்லை. ஆனால், முகத்தில் அடித்தாற் போல, அங்கிருந்து விலகிச் செல்லவும் அவளுக்குத் தைரியம் வரவில்லை.

அவர் சொன்னது முழுவதும் அப்பட்டமான உண்மையே என்றதோடு, அருவருப்பான இந்த உறவை அவள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தலானார், உறவு முறையில் தகப்பன் நிலையில் இருந்த அவர்.

வற்புறுத்தல் என்றால், சும்மா அல்ல. பார்க்கும் போதெல்லாம், என்ன, சரியென்று சொல்லி விடுவோமா என்று, அவளைத் துளைத்து எடுத்தார்.

சும்மா சேர்ந்து வாழப் பிடிக்கா விட்டால், ஏதாவது கோயிலில் தாலி கட்டவும், இளம்பிறையன் தாராள மனதுடன் சம்மதித்திருக்கிறானாம்.

பொறுக்க மாட்டாமல், ''இந்த மாதிரி ஆண்களை நடுத் தெருவில் வைத்துச் சுட்டுக் கொல்ல வேண்டும்!'' என்று சுள்ளென்று சொல்லி விட்டாள் வசுமதி. ''இந்த மாதிரி அசிங்கத்தை நீங்களும் ஒத்துப் பேசுகிறீர்களே, பெரியப்பா. அதுதான் எனக்குத் தாங்கவில்லை. புரிய வும் இல்லை. எனக்கு இதுபற்றி நினைக்கக்கூடப் பிடிக்கவில்லை. இனி இந்த இளம்பிறையன் பற்றிய பேச்சையே என்னிடம் எடுக்காதீர்கள்.''

மனதில் இருப்பதைப் பெரிய தந்தையிடம் துணிந்து சொல்லி முடித்துவிட்ட திருப்தி அவளுக்கு.

அவளது மன நிலையைத் தெளிவாகத் தெரிவித்து விட்டதால், அவரது பேச்சைக் கேட்கவில்லை என்று கொஞ்சம் கோபப்பட்டாலும், இனிச் சிற்றம்பலம் அந்த இளம்பிறையன் பேச்சை எடுக்க மாட்டார் என்று நினைத்தாள் வசுமதி.

அவள் நினைத்தது போல எதுவும் நடக்காதபோதும், முன்னெல்லாம் ஓரளவுக்கேனும் ஊர் வாய்க்கு அஞ்சி வாழ்ந்த ஒரு சாதாரணக் குடும்பத் தலைவரான சிற்றம் பலத்தை இப்போது ஆட்டிப் படைப்பது எது என்று அவளுக்குத் தெரியவந்தது.

ஒன்றும் இல்லாதிருந்து, ஓர் அரசியல் தலைவனாகிப் பெரும் பொருளும் ஈட்டி விட்டிருந்த இளம்பிறை யனுக்கு, மனிதர்களை எங்கே சுண்டினால் எங்கே வலிக்கும் என்பது தெரிந்திருந்தது.

தனக்கிருக்கும் திறமைக்குச் சொந்தத் தொழில் செய்தால் பெரும் பணம் குவித்துவிட முடியும் என்பது



சிற்றம்பலத்தின் உறுதியான கருத்து. ஆனால், சொத்து பத்துக்களை விற்று, போதாக் குறைக்குக் கடனும் வாங்கித் தொழில் தொடங்க அவருக்குப் பயம். ஒரு வேளை தோற்றுவிட்டால், உள்ளதும் போய்விடுமே.

சரியானபடி பேச்சுக் கொடுத்து, அவரது உள் ஏக்கத்தை உணர்ந்த இளம்பிறையன் அதற்குச் சரியாகத் தூண்டில் போட்டான். தேவையான முதலை அவனே போடுவதாகவும், லாபத்தில் ஒரு பகுதியை அவனுக்குக் கொடுத்தால் போதும் என்பதும் தூண்டில்.

வசுமதியை அவனிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது, அதற்கான நிபந்தனை.

ஏறத்தாழ முப்பதாண்டுக் கனவு. சிற்றம்பலம் விடுவாரா?

மனைவியுடைய தங்கை மகள், எப்போதுமே அவ ருக்கு அநியாயமாய் அவர் தலையில் ஏற்றப்பட்ட சுமை. வேண்டாம் என்று வெளியே துரத்தினால், ஊர் உலகம் என்ன சொல்லுமோ என்ற ஒரே காரணத்தால்தான் இவ்வளவு காலமாய் அவளுக்குச் சோறு போட்டதே.

ஆனால், அந்த ஊர் உலகத்தின் பேச்சுக்கூட, இப் போது கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பின் முன் மதிப் பிழந்து போய்விட்டது. கணக்குப் பார்த்தால், அந்த அனாதைப் பெண்ணுக்குச் சோறு, துணிமணி கொடுத்து வளர்த்ததில், அவருக்கு எத்தனை ஆயிரங்கள் செலவாகி யிருக்கும்? லட்சத்தையே தாண்டி விட்டிருக்கும்! அந்தப் பணம் இருந்தாலே, அவரது தொழிலுக்குப் பாதி முதல் ஆகியிருக்குமே! இளம்பிறையனோ, அதற்குப் பல மடங்கே தருவதாகச் சொல்லுகிறான்.

முடிந்தால், வசுமதியின் கையைக் கட்டியேனும், அந்த இளம்பிறையன் வீட்டில் கொண்டு போட்டு விடுவார்.

ஆனால், சாது என்றாலும், வசுமதி படித்த பெண். சட்டம், போலீஸ் எல்லாம் என்ன என்று தெரியாதவள் அல்ல. கிறுக்குத்தனமாக என்னமாவது பண்ணித் தொலைத்தாள் என்றால் பிரச்சினையாகி விடக்கூடும்.

அதனால்தான், 'அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்ற பழமொழியில் நம்பிக்கை வைத்து, அவளை வற்புறுத்திக் கொண்டிருந்தார்.

கூடவே, அடுத்த முயற்சியாகத் தங்கை மகளிடம் எடுத்துச் சொல்லும்படி மனைவியையும் விரட்டினார்.

அப்போதுதான் கோதை, வசுமதியிடம் எங்காவது போய்விடும்படி கேட்டது. அதுவும், இந்தப் பெரியப்பா தேடிக் கண்டுபிடிக்க முடியாதபடி, ஏதேனும் கண் காணாத இடத்துக்குச் சொல்லாமல் கொள்ளாமல் வசுமதி செல்வதுதான் ஒரே தீர்வு என்பது அவளது அபிப்பிராயம்.

வீட்டை விட்டு வெளியேறி, ஏதாவது பெண்களுக்கான விடுதியில் வசுமதி தங்குவது கூடக் கோதைக்கு உசிதமாகப் படவில்லை. அப்புறம், தங்கை மகளை எப்படியாவது கூட்டி வருமாறு, சிற்றம்பலம் அவளைக் குடையத் தொடங்கி விடுவார்.

எனவே, அவருக்குத் தெரிய, எந்த இடத்துக்கு வசுமதி போனாலும், அதனால் ஒரு பயனும் இருப்பதற்கில்லை.

கணவனிடம் ஒரேயடியாக மறுத்துப் பேசிக் கோதைக்குப் பழக்கம் இல்லை. பேசினாலும், அதற்குப் பயன் இராது. அதுவும், இப்போது அவருக்கு இருக்கும் வெறிக்கு, மனைவியை ஒரு நெம்புகோலாகப் பயன்படுத்தவும் துணிந்திருந்தார். அவளை அடித்து, உதைத்தால், அதைத் தடுக்கவென்று, வசுமதியே தலையாட்டி விடுவாள்.



அத்தோடு, சிற்றம்பலத்துக்குச் சாவி கொடுக்கத்தான், அந்தப் பொல்லாத அரசியல்வாதி இருக்கிறானே.

அவனுக்கும் எங்கெங்கே, என்னென்ன மாதிரி ஆட்கள் இருக்கிறார்களோ! வருகிற திரைப்படங்கள், கதைகளைப் பார்க்கும்போது, போலீசை நம்பி அவர்களிடம் செல்லக்கூடப் பெண்ணுக்கும், பெரியன்னைக்கும் தைரியம் இல்லைதான்.

அதுமட்டுமல்ல, அந்த மாதிரி யெல்லாம் போனால், மதிப்புக்குரிய உறவினரை, அவளுடைய குடும்பம் கேவலப்படுத்தி விட்டதாகப் புதுப் பெண்ணான அஞ்சலி வாழ்விலும் ஏதாவது பிரச்சினை நேர்ந்து விடுமோ என்ற அச்சமும் கோதைக்கு இருந்தது. அதுவும் நடக்கக் கூடியதுதானே!

அதனால், பெரியன்னை சொல்வது போலக் கண் காணாமல் எங்காவது போய்விடுவதுதான் சரியென்று வசுமதிக்கும் தோன்றியது.

நல்லவர்களுக்கே, கண்ணிலிருந்து மறைவது, கருத்திலிருந்தும் மறந்து விடும் என்கிறார்கள். இந்த இளம்பிறையன் எத்தனை நாள் வசுமதிக்காக ஏங்கிக் கொண்டு இருக்கப் போகிறான்? சில மாதங்களில், அவளை அடியோடு மறந்துவிட்டு, இன்னொன்றின் பின்னே ஓடிவிடுவான்.

ஆனால் அதுவரை?

அதுவரையிலும், இங்கிருந்து வெளியேறி, அவள் எங்கே போவது? அதுதான் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. அதுவும், பெரியப்பா சிற்றம்பலமோ, இளம்பிறையனோ அறிய முடியாதபடியாக ஓர் இடத்துக்கு.

மூன்று வயதில் இங்கு வந்ததில் இருந்து, இந்த வீட்டை விட்டு, வசுமதி வெளியே எங்கேயும் சென்று தங்கியது இல்லை. நர்ஸ் பயிற்சியின் போதும், இதே

ஊரில்தான் இருந்தாள். இரவு நேர வேலை என்றாலும் அப்படித்தான். இதே ஊர்தான்.

சற்றும் முகம் கூட நினைவிராத பெற்றோரின் நினைவு வசுமதிக்கு வந்தது. அவளை விட்டுவிட்டு, அவர்கள் மட்டும் போய்விட்டார்களே.

அப்படி அற்பாயுளில் போகிறவர்கள், அவளை மட்டும் ஏன்தான் விட்டுவிட்டுப் போனார்களோ!

விட்டு விட்டு என்று கூடச் சொல்ல முடியாது. முழு முயற்சி செய்து, அவளைப் பிழைக்க வைத்துவிட்டுப் போனார்கள்.

தீவிரவாதிகள் எறிந்த பெட்ரோல் குண்டுகளால் அவர்கள் சென்று கொண்டிருந்த பஸ்ஸில் தீப்பற்றிக் கொண்டபோது, பெரியவர்களான அவர்களால் வெளியே வர முடியாது என்று புரிந்ததும், அரைத் தூக்கத்தில் இருந்த மூன்று வயதுச் சிறுமியான அவளைச் சட்டைப் பையில் விசிட்டிங் கார்டை வைத்துப் பக்கவாட்டு ஜன்னல் இடுக்கின் வழியே, திணித்து வெளியே எறிந்துவிட்டார்களாம்.

அவர்கள் விருப்பப்படி பெண் பிழைத்து விட்டாள் தான். பையில் வைக்கப்பட்டிருந்த கார்டின் மூலம் யார் என்று தெரிந்து, பெரியம்மா வீட்டுக்கும் வந்து சேர்ந்து விட்டாள். அவளுக்கே வீட்டில் எத்தனையோ பிரச்சினைகள் இருந்தபோதும், பெரியம்மாவும், அவளைக் கைவிடாமல், ஏற்றுக் கொண்டாள்.

ஆனால், அப்படி வசுமதி பிழைத்து வந்ததினாலே, அவளுக்கு எத்தனை எத்தனை துன்பங்கள்! முத்தாய்ப்பு வைத்தது போல, இப்போது இப்படி ஒன்று.

யோசிக்க யோசிக்க, வசுமதிக்கு ஒரே வெறுப்பாக இருந்தது. பேசாமல் பெற்றோரோடு சேர்ந்து செத்திருந்



தால், இன்றையப் பிரச்சினையே எழுந்திராது. எவ்வளவோ நிம்மதியாக இருந்துமிருக்கும்.

அவளை விடவும், அவளுடைய பெரிய தாயார் கோதைக்கு.

ஆனால்... உயிரை அவ்வளவு அலட்சியமாக நினைக்கக் கூடாதே.

வசுமதி இதே யோசனையாக இருந்தது, அவளது கவனத்தையும் மீறி. அவள் முகத்தில் பிரதிபலித்தது போலும்.

மதிய உணவின்போது, டாக்டர் வந்தனா அவளைத் தன்னிடத்துக்கு அழைத்துப் பேசினாள்.



3

வசுமதியின் பிரச்சினையைக் கேட்டறிந்ததும், வந்தனாவுக்கு மிகுந்த ஆத்திரமே.

ஆனால், 'வீட்டை விட்டு வெளியே என்னோடு வந்துவிடு!' என்று வீரப் பேச்செல்லாம் அவள் பேசவில்லை. வீட்டுப் பெரியவர்கள், கணவர் முதலியவர்களைக் கலந்து ஆலோசியாமல், தன்னிச்சையாக அவள் அப்படி அழைப்பது சரியல்ல என்று இருவருமே அறிந்திருந்தனர்.

ஒரு நல்ல தோழியின் வாழ்வில் வலியப் போய் நுழைந்து பிரச்சினை எழுப்ப, வசுமதியும் தயாரில்லை.

ஆனால், புருவம் சுருக்கி வந்தனா யோசித்தது சில கணங்களே.

சட்டென்று முகம் மலர எழுந்து, "அட, ஒரு கல்லில் இரு மாங்காய்களாக, இது ஏன் எனக்கு உடனே நினைவு வரவில்லை?" என்று வசுமதியிடம் விவரம் சொன்னாள்.

திவாகரன் பெரிய ஹாக்கி விளையாட்டு வீரர். பரம்பரையாகவே ரத்தத்தில் ஊறிய விளைய்ாட்டு எனலாம். திவாகரனுடைய தாத்தா, இந்த நாட்டுக்காக விளையாடித் தங்கம் வென்றவர்.

ஆனால், திவாகரனுடைய தந்தையைப் பொறுத்த வரை, ஏதோ அந்த விளையாட்டு தெரியும் என்பதற்கு மேல் அதிக ஈடுபாடு கிடையாது. அவரது கவனம் தொழிலில்தான். அவருடைய பிள்ளைகளில் பெரிய வன் பாட்டனாரைப் போல விளையாட்டில் வீரன். அடுத்தவன், தந்தையைப் போலத் தொழில் மன்னன். எப்படிப் பட்டவர்களையும் வளைத்து, அவனும் தொழிலை வளர்த்தான்.

''இரண்டு பேரும் ஆளுக்கு ஒரு வகையில் கெட்டிக் காரர்கள் என்கிறீர்கள். தாராளமாக இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால், இதில் என் பிரச்சினைக்கான தீர்வு எங்கே வருகிறது?'' என்று தன் கவலையிலேயே உழன் றாள் வசுமதி.

ஒற்றை விரலை விளையாட்டாய் உயர்த்திக் காட்டி, ''பொறுமை! பொறுமை!'' என்று புன்னகையோடு எச் சரித்தாள் வந்தனா. ''பொறுமையும் இல்லை, பத்திரிகை களில் விளையாட்டுப் பகுதியை நீ படிப்பதும் இல்லை என்று தெள்ளத் தெளிவாகக் காட்டி விட்டாயே.''

உண்மையாகவே தன் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கண்டுபிடிக்காமல், வந்தனா இப்படி வேடிக்கையாகப் பேச மாட்டாள் என்று புரியவும், வசுமதியும் லேசாகப் புன்னகை செய்தாள். ''பத்திரிகைகளில் ஆரோக்கியம் பற்றிய குறிப்புகள் தவிர வேறு எதையும் நான் படிப்பதில்லை, வந்தனா. என் கைக்குப் பத்திரிகை வரும்போது, அதற்கு மேல் படிக்க நேரமும் இருப்ப



தில்லை,'' என்று விளக்கமும் கொடுத்தாள். ''சரி, அப் புறம்? மிஸ்டர் திவாகரனின் விஷயத்துக்கு வாருங்கள்,'' என்று மேலே சொல்லுமாறு வந்தனாவை ஊக்கினாள்.

''சொல்கிறேன். நம் இந்திய ஹாக்கி டீமில், திவாகரன் ஒரு நிச்சயமான அங்கமாகத்தான் இதுவரை செயல் பட்டு வந்தார். நிறைய வெற்றிகளைக் குவித்ததிலும், தோல்வியிலும் கூடப் படு மோசமாக நம் அணி தோற்காததிலும் திவாகருக்கு நிச்சயமான பங்கு உண்டு. அப்படி ஒரு விளையாட்டு வீரன் இருந்தால், எதிர் அணிகள் இப்போதெல்லாம் என்ன செய்கின்றன, தெரி யுமா? அந்த வீரனைக் குறி வைத்து முற்றுகையிட்டுத் தாக்கி, விளையாட விடாமல் செய்து விடுகிறார்கள்.''

''என்ன அநியாயம்!'' என்றாள் வசுமதி ஆத்திரத் துடன். ''அவரவர் திறமையாக விளையாடி ஜெயிப்பதை விட்டுவிட்டு, இதென்ன கேவலமான குறுக்கு வழி?''

''நியாய அநியாயம் பற்றி, இப்போது யார் பார்க் கிறார்கள்? ஏன், உன்னையே எடுத்துக் கொள். எல் லோரும் நியாயமாக நடப்பதாலா, ஊரை விட்டு, ஓசைப் படாமல் ஓட வழி தேடிக் கொண்டு இருக்கிறாய்? பேரும், புகழும், பெரும் பணமும் வரும் என்கிறபோது, இந்த நியாயம் என்பதைப் பற்றி யாரும் நினைப்பதே இல்லை. போகட்டும். அதை விடு. இப்போது விஷயத் துக்கு வருவோம். இந்த மாதிரித் தடாலடி விளை யாட்டால், திவாகரனுக்கு இடுப்பில் பலத்த அடிபட்டு விட்டது. கால் எலும்பில் முறிவு. பத்திரிகைகளில் கண் டித்து எழுதினார்கள். விளையாட்டுத் துறை வருத்தம் தெரிவித்தது. அத்தோடு, திவாகர் இடத்துக்கு அடுத்து ஆளைப் போட்டுப் பயிற்சி கொடுக்கத் தொடங்கி விட்டார்கள். அவர்களைப் பொறுத்த வரையில் பிரச் சினை முடிந்தது. ஆனால்...''

''மிஸ்டர் திவாகரனுக்கு உடம்பு எப்படி இருக்கிறது, வந்தனா? இன்னமும் முழுமையாகக் குணம் ஆக வில்லை என்று புரிகிறது. ஆனால், ரொம்பவும் மோசமா?'' என்று பரிவுடன் விசாரித்தாள் மற்றவள்.

லேசாக முறுவலித்து, ''ஓரளவு பரவாயில்லை. ஆனால் துக்கம் விசாரிக்கிற மாதிரி நிறையப் பேர் வந்து போவது பிடிக்காமல்... அத்தோடு... ஆனால், அதைப் பற்றிப் பிறகு பேசலாம். முதலில் உன் பிரச்சினையை யோசி, வசு. திவாகருக்காகப் பரிதாபப் படுவதில், உன் பிரச்சினையை மறக்காதே,'' என்றாள் டாக்டர்.

''ஆ... மாம். அது வேறு இருக்கிறதே. வந்து... மிஸ்டர் திவாகருக்குப் பணிபுரிய என்னை அனுப்பலாம் என்று நினைக்கிறீர்கள். அவரும் வெளியூரில் இருக்கிறார் என்பதால், என் பிரச்சினையும் தீரும். அதுதானே, வந்தனா? மிஸ்டர் திவாகர் எந்த ஊரில் இருக்கிறார்? ஆனால்... வெளியூருக்கெல்லாம் இங்கே நம் மருத்துவ மனையில் இருந்து அனுப்புவார்களா? அத்தோடு, அப்படி நிர்வாகமே அனுப்பும்போது, அது பெரியப் பாவுக்கும் தெரிந்துவிடாதா? அவர் என்னைப் போகவே விடமாட்டாரே. அப்புறம்... அப்புறம் பழைய கதை தானே நடக்கும்?'' என்று மீண்டும் சோர்வில் தொய்ந்தாள் வசுமதி.

சற்று யோசித்துவிட்டு, ''சில பிரச்சினைகள் இருக்கத் தான் செய்கின்றன, வசு. ஆனால், முயன்றால் முடி யாதது இல்லை. உன் பெரியம்மாவின் பிரச்சினை மட்டும் இல்லை என்றால், துணிந்து, சில பெண்கள் அமைப்புகள், போலீஸ் என்று போய், அந்த இளம் பிறையனை ஒரு கை பார்த்து விடலாம். ஆனால், அவர்கள் கஷ்டப்படக் கூடாது என்றும் பார்க்கிறாயே,



சரி, அதைவிடு. இப்போது என்ன செய்யலாம் என்று...'' என்று இழுத்தவளின் முகம் மெல்ல மலர்ந்தது.

''என்ன வந்தனா?'' என்று ஆவலும் கவலையுமாகக் கேட்டாள் மற்றவள்.

''வசு, உன் நர்ஸ் வேலைக்கு எப்போதுமே தேவை அதிகம். ஓர் இடத்தில் வேலையை விட்டாலும், இன்னோர் இடத்தில் இலகுவாகவே கிடைத்துவிடும்.''

சட்டெனப் புரிந்து, ''இங்கே வேலையை விட்டுவிடச் சொல்கிறீர்கள். வேலையை விட்டு விட்டால், மிஸ்டர் திவாகரிடம் பணிபுரியச் செல்வதையே வெளியே தெரியா மல் நமக்குள்ளேயே வைத்துக் கொள்ளலாம். அதுதானே, வந்தனா?'' என்று வினவும்போதே வசுமதியின் முகமும் மலரலாயிற்று.

தீராதோ என்று அஞ்சிய சிக்கல் தீர்ந்துவிடும் போல இருக்கிறதே.

புன்னகையோடு வந்தனா தலையாட்டினாள். கூடவே, ''ஆனால், இந்த வேலைக்குச் சில மாதங்கள்தான் ஆயுசு, வசு. நாலு மாத ஒப்பந்தம் செய்யலாம். ஆனால் அதற்காக நீ கவலைப்பட வேண்டாம். உன் அடுத்த வேலை, என் பொறுப்பு,'' என்றாள்.

''அதுபற்றி என்ன, வந்தனா? எனக்கு இப்போதைக்கு இந்த இடத்தை விட்டுக் கண் காணாமல் எங்கேனும் போய் ஒரு சில மாதங்கள் இருக்க முடிந்தால் அதுவே போதும்,'' என்று வருத்தத்துடன் பெருமூச்செறிந்தாள் வசுமதி.

எந்த வகையிலும் சிற்றம்பலத்துக்குக்கூட விஷயம் தெரிந்துவிடக் கூடாது என்பதால், இரு பெண்களும் மேற்கொண்டு திட்டங்களைப் படு ரகசியமாகத் தீட் டினர். இவர்கள் இருவருமே டாக்டர், நர்ஸ் என்பதற்கு மேல் சந்திப்பதாகத் தோன்றாதபடிக்கு எச்சரிக்கை

யோடு நடந்து கொண்டு எல்லா வேலைகளையும் செய்து முடித்தனர்.

வெறுமனே வீட்டை விட்டுப் போவதாகக் கிளம்பும் போது, வசுமதி எழுதி வைத்த கடிதம் தவிரக் கோதை யிடம் கூட, எதுவும் சொல்லவில்லை.

தெரிந்து மறைப்பதை விடத் தெரியாமல் இருப்பது தானே அவளுக்கே நல்லது.

இவ்வளவு ரகசியமாக வேலை செய்து, கிளம்பும் போதுகூட, ஓர் அருவருப்பான சிக்கலில் இருந்து மீள்கிறோம் என்கிற உணர்வு மட்டும்தான் வசுமதிக்கு.

ஆனால், இங்கே வந்த பிறகுதான், எப்படிப்பட்ட இயற்கைச் சூழலுக்கு வரும் பேறு கிடைத்திருக்கிறது என்று அவளுக்குப் புரிந்தது.

மிதக் குளிருடன் இதமாக வீசும் தென்றல் காற்று. சுற்றிலும் பச்சைப் பசேல் என்று கண்ணோடு மனதுக்கும் சுகமளிக்கும் தாவர வகைகள். அள்ளித் தெளித்தாற் போல, அங்கங்கே பல வண்ணப் பூக்களும், அவற் றோடு போட்டி போடுவன போன்று பற்பல நிறங்களில் வண்ணத்துப் பூச்சிகளும் அவளுக்குப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை!

கொடைக்கானல் மலைச் சாரலைப் பற்றி வசுமதி கேள்விப்பட்டிருக்கிறாள். ஆனால், இது இவ்வளவு அழகாக இருக்கக் கூடும் என்று அவள் எதிர்பார்க்க வில்லை.

அதிலும் வறண்டு விட்ட சென்னையில், இரட்டைப் படுக்கையறை வீடு, பள்ளி, மருத்துவ மனை என்று சிறு வட்டத்துக்குள்ளேயே வளைய வந்தவளுக்கு, பெரிய பெரிய அறைகளுடன் கூடிய இந்த வீடும், பரந்து விரிந்திருந்த தோட்டமும், அதைச் சுற்றிலும் அமைந் திருந்த பழப் பண்ணையும், சும்மா பார்த்துக் கொண் டிருந்தாலே போதும் போல, உள்ளூர மகிழ்ச்சியூட்டின. ஊடே நடக்கும்போது, ஏதோ தேவலோகத்தில் இருப் பது போன்ற சந்தோஷம்!



இதை யெல்லாம் பாராமலே, பெற்றோர் தன்னையும் சாக விட்டிருக்கலாமே என்று எண்ணியது, எவ்வளவு பெரிய பைத்தியக்காரத்தனம்!

இந்த மாதிரி இடத்துக்கு வருவதற்கு உதவி செய்த வந்தனாவை நினைக்கையில், வசுமதியின் நெஞ்சு நன்றியால் நிறைந்தது.

வேலையும் வசுமதிக்குக் கடுமையானதாக இருக்க வில்லை. இரவு, பகல் என்றிராமல், வேலை நேரம் முழுவதும் வார்டு வார்டாகக் கால் வலிக்க ஓடி ஓடிப் பழக்கப்பட்டிருந்த வசுமதிக்கு, இப்படி ஒருவரை மட்டும் கவனிப்பது வேலை செய்வது போலவே தோன்ற வில்லை. ஏதோ ஓய்வு நாள் போலத்தான் தோன்றியது.

இதற்குப் போய், உணவு, உறைவிடம் போக, இவ் வளவு சம்பளம் வாங்குகிறோமே என்று லேசான குற்ற உணர்வுகூட அவ்வப்போது தலை நீட்டியது எனலாம்.

திவாகரனின் வெளிக் காயங்கள் சரியான சிகிச்சை இல்லாதது போல, சரியான அளவு குணமாகவில்லை. அத்தோடு, காயங்களினாலும், சிகிச்சையின் போதும், இறுகி விட்டிருந்த தசைகளையும் பயிற்சிகள் மூலம் பழைய நிலைக்குக் கொண்டு வர வேண்டியிருந்தது.

புண்ணுக்கு மருந்திடுவதும், பயிற்சிகளைச் செய்ய வைப்பதும், அங்கங்கே க்ரீம் தடவித் தசைகளை உருவி விடுவதும், வசுமதிக்குப் பெரிய வேலையாகத் தெரிய வில்லை.

ஆனால், வந்தனா கூறியது போல, இந்த வேலையிலும் சில பிரச்சினைகள் இருந்தன.

ஆனால், அந்தப் பிரச்சினைகள் மனதோடு சம்பந்தப்பட்டவை.

அது பற்றி வந்தனா ஓரளவு கோடி காட்டியிருந்தாளே தவிர, முழுமையாகச் சொல்லவில்லை. ஆனால், 'உன் சம்பளம், பாதிக்குப் பாதி, திவாகரின் மனதைக் குணப்படுத்துவதற்காகவும்தான்!' என்று டாக்டர் தோழி சொன்னபோதும், ஒரு விபத்தின் பின்னர் மனநிலையில் சிறு மாறுதலும், அதை வெளிப்படுத்துவதில் வேறுபாடும் ஏற்படுவது இயற்கையே. உடம்பு குணப்படக் குணப்பட அந்த மாறுபாடுகள் மறைவதும் அப்படியே என்று அனுபவத்தில் அறிந்திருந்ததால், அதைப்பற்றிப் பெரிதாக ஒன்றும் வசுமதி எண்ணவில்லை.

ஆனால், மருத்துவத் தோழி சொன்னதின் முழு அர்த்தம், இங்கு வந்த பிறகுதான் அவளுக்குப் புரிந்தது.

அந்த அளவுக்குத் திவாகரன் உலகை வெறுத்திருந்தான். அதைவிட அதிகமாக அவனுடைய மனைவியை வெறுத்ததாகவும் தோன்றியது. அவளைக் கண்ணிலேயே காண விடாமல் கரித்துக் கொட்டினான்.

அவனுடைய மனைவி... அவள் பெயர் சுபலா. பெயரைப் போலவே, ஆளும் அழகாக இருந்தாள். அவளுக்கும், விபத்துக்காளான கணவனுக்கு ஏதேனும் உதவி செய்யலாம் என்கிற எண்ணம் இருப்பதாகவே தெரியவில்லை.

அப்படி ஓர் எண்ணம் இருக்குமானால், அந்த வீட்டில் வசுமதிக்கு அதிக அவசியமும் இருந்திராது. ஏனெனில், கொஞ்சம் கற்றுக் கொண்டால், திவாகரனுக்குத் தேவைப்பட்ட பணியைச் சுபலாவேகூடச் செய்திருக்க முடியும்.



வந்தனா என்கிற பெயர் அவர்கள் இருவருக்குமே ஏற்புடையதாக இருந்தது. கணவன் மனைவி இருவருக்குமே பொதுவான நட்புக் குடும்பத்தைச் சேர்ந்தவள். அவள் மூலமாய் வந்தவள் என்பதால், திவாகரன், சுபலா இருவரும் அவளிடம் சாதாரணமாகப் பழகினார்கள் போலும்.

மற்றப்படி, கணவனும் மனைவியும், ஒருவரை ஒருவர் வெறுப்பதோடு, உலகத்தின் அத்தனை ஜீவராசிகளையுமே வெறுப்பவர்களாகத் தோன்றினார்கள்.



4

'உதயம்' பண்ணைக்கு வசுமதி வந்த முதல் நாள் கணவன் மனைவி இருவரில் ஒருவரையும் அவள் நேரில் சந்திக்கவில்லை.

எந்த விதத்திலும் சிற்றம்பலமோ, இளம்பிறையனோ மோப்பம் பிடித்து விடக் கூடாது என்பதால், இங்கும் அங்குமாகப் போக்குக் காட்டிச் சுற்றிக் கடைசியாகத் திவாகரனின் எஸ்டேட்டுக்கு வசுமதி வந்து சேர்ந்த போது, மாலை மங்கிவிட்டது.

தான் இன்னார் என்று அவள் வேலையாட்களிடம் தான் அறிமுகப்படுத்திக் கொள்ள நேர்ந்தது.

அன்றைய அவளது வரவை முன்கூட்டியே டாக்டர் வந்தனா அவர்களுக்குத் தெரிவித்திருந்தபோதும், அறிமுகம், மேற்கொண்டு உரையாடல் போன்றவை அப்போது வேண்டாம் என்று திவாகரன் தம்பதி எண்ணினர் போலும்.

காரியக்காரர் போலத் தோன்றிய ஒருவர், வசுமதியை உடனே அவளுக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்த அறைக்கு அழைத்துப் போனார்.

அடுத்திருந்த குளியலறை வசதியோடு, அறை நன்றாக இருந்தது.

சொல்லப் போனால், இவ்வளவு வசதியான அறையில், வசுமதி இதுவரை தங்கியதே இல்லை. பெரியப்பா வீட்டில், அஞ்சலியின் அறையை விடவும், வசதியாக, அழகாக இருந்தது.

அந்த அறைதான், அவளது முதல் சந்தோஷம்.

அன்றைய இரவு உணவு அறைக்கு வந்துவிடும் என்றும், மறுநாள் காலை ஏழு மணிக்கு எஜமானரைச் சந்திக்கத் தயாராக இருக்கும்படியும் சொல்லிவிட்டுப் போனார் அவர்.

அடுத்த நாள் காலை ஆறு மணிக்கு வழக்கம் போல எழுந்தவள், சுற்றுப்புறம் உணர்ந்து, யோசனையோடு மெல்லச் சென்று, ஜன்னல் வழியே வெளியே பார்த்த போது, அவளது இரண்டாவது சந்தோஷம் கிடைத்தது. எந்தப் பக்கம் திரும்பினாலும், கண்களைக் குளிர்வித்த பசுமை. லேசான பனிப் படலத்தினூடே அந்த மலைப் பகுதியைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை அவளுக்கு.

ஏழு மணிக்கு வசுமதி தயாராகி இருந்தபோது, மாரி என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட ஒரு பையன் வந்து, அவளை அழைத்துக் கொண்டு போனான்.

அப்போதுதான் ஹாக்கி வீரன் திவாகரனை வசுமதி நேரில் பார்த்தது.

வந்தனா காட்டியிருந்த படங்களில் உற்சாகமே உருவாகச் சிரித்துக் கொண்டிருந்த திவாகரனும் சக்கர நாற்காலியில் தொய்ந்து கிடந்த இந்த மனிதனும் ஒரே ஆள் என்றால், நம்புவது கடினமாக இருந்தது.

கண்கள் குழி விழுந்து, கன்னம் ஒட்டி, தோள்கள் சூம்பி, சுழித்த புருவத்துடன்...



நோய் நொடிகளின் வேதனை முகத்தில் பிரதிபலிப்பது இயல்புதான். ஆனால், இவன் ரொம்பவே உணர்கிறவனோ... என்று எண்ணும்போதே, திவாகரனும் தன்னைக் கூர்ந்து கவனிப்பதை வசுமதி உணர்ந்தாள்.

முகத்தில் எதையும் காட்டிக் கொள்ளாமல், வணக்கம் தெரிவித்துவிட்டுக் கையோடு கொண்டு போயிருந்த ஃபைலைத் திவாகரனிடம் வசுமதி கொடுத்தாள்.

ஒரு தலையசைவால் அவளது வணக்கத்தை ஏற்றுக் கொண்டு, ஃபைலைப் பிரித்தான் அவன்.

''படிப்பு பயிற்சி எல்லாம் சென்னையில் என்றிருக்கிறதே. இங்கே அது போலக் கேளிக்கைகளுக்கு வழியிராதே. பொழுதுபோக்க என்ன செய்யப் போகிறாய்?''

திவாகரனின் குற்றம் சாட்டும் குரல் வசுமதிக்குச் சற்று ஏமாற்றமளித்தது. பேச்சும்தான். ஃபைலில் படிப்பு, தகுதி பற்றித்தான் பார்க்க வேண்டும். அதை விட்டு, வேலை - சரியாகச் சொல்வதானால், நோயாளிகளுக்குச் சேவை - செய்ய வந்தவளிடம் கேளிக்கை பற்றி என்ன கேள்வி?

அவனை நேராகப் பார்த்து, ''உங்கள் கேள்வி புரியவில்லை, சார்,'' என்றாள் - அவள் - அமைதியான குரலில். ''நான் இங்கே வந்தது, சுகவீனமுற்றிருக்கும் உங்களுக்குத் தேவையான பணி புரிவதற்காகத்தான்!''

''தெரியும், தெரியும். ஆனால், இருபத்து நாலு மணி நேரமும் வேலை இருக்காதே. வேலை நேரம் போக, மற்றச் சமயங்கள்? சினிமா, ஷாப்பிங், ஊர் சுற்றுதல்... இதெல்லாம் இல்லாமல் உன்னால் எப்படி வாழ முடியும்? டீவி கூடச் சத்தமாக வைத்தால் எனக்குப் பிடிக்காது. எனக்குப் பிடிக்காததைச் செய்கிறவர்களைக்

கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விடுவேன்,''என்று குரலில் அழுத்தத்துடன் கூறினான் அவன்.

சிறு வியப்புடன் திவாகரனை நோக்கினாள் அவள். அவளது நேர்நோக்கில், அவன் முகம் லேசாகக் கன்றியது. உடனேயே ஆத்திரத்தோடு தலையை நிமிர்த்தி, ''சக்கர நாற்காலியில் இருந்து கொண்டு, எப்படித் தள்ளுவேன் என்று பார்க்கிறாயா? வேலையாட்களுக்குச் சம்பளம் கொடுக்கப் பணம் இருக்கிறதே. அதனால், என் வேலையாட்கள் நான் சொல்வதைச் செய்வார்கள்,'' என்றான், முசுட்டுக் குரலில், அவன்.

வைத்தியம் மனதிற்கும்தான் என்று வந்தனா சொன்னது நினைவு வர, ''ஆனால், அதற்கு அவசியம் இராது, சார். சென்னையிலும்கூடக் கேளிக்கைகளில் செலவழிக்க எனக்கு நேரம் இருந்ததில்லை. விருப்பமும் கிடையாது. விடுமுறை நாட்களில், ராமகிருஷ்ணா மிஷன் போல ஏதாவது தர்ம நிறுவனங்களில் இலவச உதவிதான் செய்வது!'' என்றாள் சாந்தமாகவே. ''அதற்கு வழியில்லாதபோது புத்தகங்கள் படிப்பேன்.''

''அப்படித்தான் வந்தனாவும் சொன்னது. இங்கே புத்தகங்கள் கூட நாங்கள் சேர்த்ததே நிறைய உண்டு. ஆனால், சென்னையை விட்டு, இவ்வளவு தூரத்தில் உள்ள, ஆள் நடமாட்டம் அதிகம் இராத தனிமையான இடத்துக்கு உன்னைப் போல ஓர் இளம் பெண் விரும்பி வருவது என்றால், என்னால் நம்ப முடியவில்லை. அங்கே ஏதாவது குற்றம் புரிந்திருந்தால், வந்தனாவுக்குத் தெரிந்திருக்கும். இங்கே... இங்கே ஏதாவது அடித்துப் போகலாம் என்று எண்ணி வந்திருந்தால், ஏமாந்துதான் போவாய். ஏனென்றால், நகை, தொகை என்று, இங்கே ஒன்றும் கிடையாது. எல்லாம் பாங்க்கில்



தான். என்ன? இங்கே வேலை செய்வது வீண் என்று தோன்றி விட்டதா?''

அதே எரிச்சலும் ஏளனமும் நிரம்பிய குரல்.

அவனுக்கு நேர்ந்திருப்பது பெரிய இழப்புதான். துடிப்புடன் ஓடி ஓடி விளையாடிக் கொண்டிருந்தவனைச் சக்கர நாற்காலியோடு கட்டிப் போட்டால் கஷ்டமாகத் தான் இருக்கும். அதுவும் வலியோடு. ஆனால், இவனது துன்பம் இதுதான் விதி என்று முடிந்துவிட்ட ஒன்றில்லையே. கொஞ்ச நாளில் குணமாகிவிடக் கூடியது தானே? வெற்றி தோல்விகளைச் சமமாக எடுத்துப் பழகிய ஒரு விளையாட்டு வீரன், இவ்வளவு தூரமா மனம் உடைந்து போவது?

திவாகரனின் அருகில் சென்று, அவனிடம் இருந்து ஃபைலை வாங்கி, அருகில் இருந்த மேஜை மீது வைத்தாள் வசுமதி.

''பாருங்கள், சார், நீங்கள் நகரத்தை விட்டு இங்கே வந்த மாதிரி, எனக்கும் எத்தனையோ காரணங்கள் இருக்கும். ஆனால், அதில் சட்டப்படியான குற்றம் சம்பந்தப்பட்டது எதுவும் இல்லை. அப்படி ஏதும் இருந்திருந்தால், வந்தனா என்னை இங்கே அனுப்பி இருப்பார்களா என்று ஒரு தரம் யோசித்துவிட்டு, மேலே பேசுங்கள். இப்போது நான் வேலையைப் பார்க்கட்டுமா? உங்கள் காயங்கள் இன்னமும் சரியாக ஆறவில்லை என்று வந்தனா சொன்னார்கள். கையை நீட்டுங்கள். காலை நீட்ட முடிகிறதா?'' என்று நிதானமாகக் கேட்டவள், அவன் அசையாது அமர்ந்திருக்கவும், ''ஏன் வாழ்க்கை முழுவதும் இந்தச் சக்கர நாற்காலிதான் கதி என்று முடிவு செய்து விட்டீர்களா, திவாகரன் சார்?'' என்று வினவினாள், அதே நிதானத்துடன்.

அவனை வெறுப்புடன் பார்த்துவிட்டு, "ஆனால், இடுப்புக் காயங்கள் இன்னும் ஆறவில்லை. ரத்தம், ரணம் பார்ப்பது, உனக்கு அருவருப்பாக இருக்குமே!" என்றான், திவாகரன், கசந்த குரலில்.

வியப்புடன் நோக்கினாள் வசுமதி. "இது என் வேலை, திவாகரன் சார். நான் விரும்பிப் பயின்ற பணி. பண வசதி இருந்திருந்தால் பட்டம் பெற்ற மருத்துவர் ஆகி யிருப்பேன். அது முடியாததால், அடுத்த பணி. ஏன், இப்போது வந்தனாவைப் பற்றிக்கூட நீங்கள் இப் படித்தான் எண்ணுவீர்களா? அநியாயம் அல்லவா?"

வசுமதியைத் திவாகரன் பார்த்த பார்வையில் பிரியம் இல்லாவிட்டாலும், சிறிதேனும் மரியாதை இருந்தது. சக்கர நாற்காலியின் பிரேக்கைத் தளர்த்தியவாறே, "இங்கே வேண்டாம். கீழே அந்தப் பக்கம் என் அறை இருக்கிறது. அங்கே வைத்துக் கொள்வோம்," என்று முன்னே வழிகாட்டிச் சென்றான்.

ஓசையற்ற ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன், அவனைப் பின் தொடர்ந்தாள் வசுமதி.

சில கணங்கள், அவளைத் திவாகரன் திரும்பிச் செல்லும் படி சொல்லி விடுவானோ என்றுகூட, அவள் பயந் திருந்தாள். அப்படிப் போகச் சொல்லியிருந்தால், அவள் கதி என்ன ஆகும்?

நல்ல வேளையாகப் பல தரப்பட்ட நோயாளிகளுடன் பேசிப் பழகிய அனுபவம் கை கொடுத்ததில், திவாகர னின் மனநிலையைப் புரிந்து கொண்டு நிலைமையைச் சமாளிக்க முடிந்தது.

தொடர்ந்து இது இயல வேண்டும்.



திவாகரனது தனியறைக்குள் சென்று, அவனது விருப்பப்படி கதவைத் தாழிட்டுவிட்டு, அவனது உடலை வசுமதி பரிசோதித்தாள்.

அவனது இடுப்பிலும் தொடையிலும் ஏற்பட்டிருந்த காயங்கள் அவளைத் திகைக்க வைத்தன. கூரிய பல ஆணிகளால் குத்திக் கிழித்த மாதிரியான காயங்கள்.

அதை விடவும், சில நாட்களாக அந்தக் காயங்கள் சரிவரச் சுத்தம் செய்யப் படவில்லை. அதனால், ஆறிவந்த புண்கள் சீழ் கோர்க்கத் தொடங்கியிருந்தன.

ஓரப் பார்வையால் அவளை நோக்கி, "அருவருப் பாக இருந்தால் விட்டுவிடு. மாரியும் நானுமா எப் படியோ சமாளித்துக் கொள்கிறோம்," என்றான் திவாகரன்.

"என்ன அருவருப்பு?" என்று வினவியவாறே, புண் களைச் சுத்தம் செய்வதற்குத் தேவையான பொருட் களைச் சரி பார்த்தாள் வசுமதி.

எல்லாம் இருக்கவே, மடமடவென்று வேலையைத் தொடங்கினாள்.

"நீங்களும் மாரியும் சேர்ந்து சமாளித்த விதத்தால், கொஞ்சம் அதிகமாக வலிக்கக் கூடும். பல்லைக்கடித்துப் பொறுத்துக் கொள்ளுங்கள்," என்றவள், "ஆனால், இந்த மாதிரி இத்தனை காயங்கள் எப்படி ஏற்பட்டன, திவாகர் சார்?" என்று பேச்சுக் கொடுத்தாள்.

"அதைப் பற்றி உனக்கென்ன?" என்று எடுத்தெறிந்து கேட்டுவிட்டு, கை முஷ்டி இறுக, வலியைப் பொறுத்த வனுக்கு, அன்றைய நிகழ்ச்சி படமாய் நினைவு வந்தது. வசுமதியின் நோக்கமும் புரிந்தது.

மனம் வேறு ஒன்றில் செல்லும்போது, இந்த வலி குறைவாகத் தோன்றும் அல்லவா?

"வேகமாக ஓடும்போது கால் வழுக்கிவிடாமல் இருப்பதற்காக, எங்கள் காலணியில் நிறைய இரும்பு ஆணிகள் இணைக்கப்பட்டிருக்கும். நான் கீழே விழுந்ததும், எதிர் அணியில் ஒருவன், விளையாட்டில் ஓடி வந்த மாதிரிக் காட்டிக் கொண்டே, என் மேல் அப்படியே குதித்துக் காலை அழுத்தி இழுத்துவிட்டான். வேகம் கனத்தோடு அவனது காலணி ஆணிகள்... அப்ப்பா!"

சொல்லிக் கொண்டே வந்தவன், அவள் அழுத்தித் துடைத்த வலி தாங்காமல் முனகினான்.

"இதோ, இப்போது முடிந்துவிடும். இரும்பு ஆணிகள் அல்லவா? நன்றாகச் சுத்தம் செய்தாக வேண்டும் என்பது தெரியாத சிறுபிள்ளை யில்லையே, நீங்கள்!" என்று இதமாகப் பேசியவாறே, காயங்களை மருந்திட்டு மூடி, பிளாஸ்டரும் போட்டாள் அவள்.

அவனது ஆடைகளைப் பழைய மாதிரி அணிவித்துவிட்டு, "இனிமேல், கைகால்களை அசைத்தால் கூடக் காயங்களைப் பாதிக்காது," என்றவாறு பயன்படுத்திய பொருட்களை ஒதுக்கிச் சுத்தம் செய்யலானாள்.

வேலை முடியும் வரை அவளையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, அவளை நோக்கிக் கையை நீட்டினான், திவாகரன்.

"என்ன, திவாகரன் சார்?" என்றபடி, நீட்டிய அவளது கையைப் பற்றி, "முதலில் கடுமையாகப் பேசியதற்கு சாரி, வசுமதி. நான் உன்... உங்களைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். நீ... நீங்கள் கொஞ்சம்கூட அருவருப்புப்படவே இல்லை. சாரிம்மா!"என்று வெளிப்படையாகப் பேசினான்.

"பரவாயில்லை. என்னை நீ என்றே அழையுங்கள். எப்படியும் வயதில் சின்னவளாகத்தான் இருப்பேன்.



அத்தோடு, இந்த அருவருப்பு விஷயம். இது எனக்குத் தொழில், திவாகரன். இந்த வேலையால் உங்களுக்குக் குணமாகும் என்று எனக்குத் தெரியும். அப்புறம் இதில் அருவருப்புப் பட என்ன இருக்கிறது?" என்றாள் அவள்.

"அப்படியானால், இப்போது உணவருந்தவும் சிரமப் பட மாட்டாயே! இருவரும் சிற்றுண்டி சாப்பிடப் போகலாமா? எனக்கு மிகவும் பசிக்கிறது."

"எனக்கும்தான்!" என்றாள், அவள் - பதிலுக்கு.

முகத்தில் முறுவலுடன் இருவரும் சாப்பாட்டு அறைக்குச் சென்றால், முகத்தில் கோபச் சிவப்புடன், திருமதி திவாகரன் அங்கே காத்திருந்தாள்.



5

"உனக்கும் பசியா? முன்பே பசித்ததோ? அடடா! சொல்லியிருந்தால், முதலிலேயே சாப்பிட்டு விட்டு, இந்தச் சிகிச்சையைத் தொடங்கி யிருக்கலாமே!" என்ற திவாகரன், உடனேயே, "இல்லையில்லை. அப்போது பசியென்று நீ சொல்லியிருந்தால், தீனிக்காகத்தான் வந்தாயா என்று ஏதாவது நோகச் சொல்லியிருப்பேன். இருக்கட்டும். நாளையிலிருந்து உணவு நேரத்தை வேண்டியபடி திட்டமிட்டுக் கொள்ளலாம். அப்ப்பா... என்ன பசி! இங்கிருந்து சாப்பாட்டு மேஜைக்குத் தாவிவிட மாட்டோமா என்று இருக்கிறது!" என்று திவாகரன் சக்கர நாற்காலியை வேகமாகத் தள்ள முயற்சிக்க, அது சற்றுச் சிக்கிக் கொண்டு நின்றது.

"அவசரக்காரனுக்கு அண்டாவுக்குள்கூடக் கை நுழையாது என்று என் பெரியம்மா வீட்டுப் பாட்டி சொல்வார்கள். அது சரியாகத்தான் இருக்கிறது. பொறுங்கள்.

நான் தள்ளிக் கொண்டு வருகிறேன்,'' என்று நாற்காலியை வசுமதி தள்ளிக்கொண்டு வர, இருவருமாகச் சாப்பாட்டு அறைக்குச் சென்றார்கள்.

செல்லும்போதே, இவனது இன்னொரு கால் நன்றாக இருக்கும்போது, இவன் நடக்க முயற்சி செய்வது நல்லதாயிற்றே என்று வசுமதிக்குத் தோன்றியது. ஆனால் சாதாரண ஊன்றுகோல் போதாது.

சாப்பிடும் அறைக்குள் சென்றதும், கை கழுவ வசதியாக 'வாஷ் பேசின்' அருகே நாற்காலியை அவள் தள்ளிச் செல்ல, ''சாப்பாட்டு மேஜை இங்கே இருக்கிறது!'' என்றது பொறுமை யிழந்த ஒரு பெண் குரல்.

''கை கழுவுவதற்காக...'' என்றுவிட்டு, திவாகரன் கையைக் கழுவியதும், சக்கர நாற்காலியைச் சாப்பாட்டு மேஜை அருகே தள்ளி வந்தாள் வசுமதி.

''காயங்களுக்கு மருந்திட்ட பிறகு, நீ கையைக் கழுவி விட்டாய் என்றாலும், லேசாக மருந்து வாசனை இருக்கக் கூடும். அதனால், சோப்புப் போட்டுக் கழுவிக்கொள், வசுமதி,'' என்றான் திவாகரன்.

அவனுடைய மனைவியிடம் அறிமுகப்படுத்தப்படுவதற்காகச் சில வினாடிகள் நின்று பார்த்தாள் வசுமதி.

ஆனால் திவாகரனுக்கு அந்த மாதிரி எண்ணமே இல்லை போல. ''சீக்கிரம், வசுமதி. பசிக்கிறது என்றாயே... அல்லது ஒரு வேளை உனக்கும்...'' என்றவன், குரல் மாறத் தொடங்கவும், சட்டெனக் கைகளைக் கழுவிக் கொண்டு வந்தாள் அவள்.

''அதில்லை, சார். ஓரோர் இடத்தில் ஒரொரு மாதிரிப் பழக்கம். நீங்களும் மேடமும் சாப்பிடும்போது, நான் உட்காருவதா, இல்லையா என்று...'' என்று அவள் இழுக்கவும், அவன் முகம் மீண்டும் தெளிந்தது.



''சேச்சே. அதெல்லாம் நான் பார்ப்பதே கிடையாது. உட்கார். உனக்கு என்ன பிடிக்கும்? இன்று என்னப்பா இருக்கிறது? நர்சம்மாவுக்குத் தட்டு வைத்துப் பரிமாறு, மாரி!'' என்று பரிமாறிக் கொண்டு இருந்துவனிடம் பணித்தான்.

வசுமதி, 'மேடம்' பேச்சை எடுத்ததே, அவளை அறிமுகப் படுத்தாததை நினைவு படுத்தத்தான். ஆனால், அப்போதும் திவாகரன் அவளுக்கு உபசாரம் செய்தானே தவிர, மனைவி பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை.

அவர்களுக்கிடையில் ஏதேனும் பிரச்சினை இருக்கலாம். ஆனால், அது அவர்கள் பிரச்சினை. அவளுக்கும் அதற்கும் ஒன்றுமில்லை. ஒரு வீட்டில் சம்பளம் வாங்கிக் கொண்டு பணிபுரிகிறவள், அதற்குரிய வரை முறைகளோடுதான் பழக வேண்டும்.

எனவே, ஏற்கெனவே சாப்பாட்டு மேஜை முன் அமர்ந்திருந்த பெண்ணைப் பார்த்து, ''வணக்கம், மேடம். என் பெயர் வசுமதி. திவாகரன் சாருக்கு மருத்துவப் பணிபுரிய வந்திருப்பவள்,'' என்று தன்னைத் தானே அறிமுகம் செய்து கொண்டாள்.

''சிம்பாலிக்'காகச் சக்கர நாற்காலியைத் தள்ளிக் கொண்டு வந்தபோதே தெரிந்து கொண்டேன்,'' என்றாள் அந்த அழகி உதட்டை அழகாகப் பிதுக்கி. ''ஆமாம், அறையைப் பூட்டிக் கொண்டுதான் சிகிச்சை கொடுப்பாய் போல. ஆமாம். பிறர் பார்க்கக் கூடாதபடி, அப்படியென்ன ரகசியம் அதில்?'' என்றும், சற்று ஏளனமாக வினவினாள்.

திவாகரன் மனைவியை ஆத்திரத்துடன் நோக்கி, ''எல்லாம் என் அன்பே உருவான மனைவியான நீ பார்த்துவிடக் கூடாது என்பதற்காகத்தான்!'' என்றான்

எகத்தாளமாக. அப்புறம் அதிர்ச்சி தாளாமல் மயங்கிக் கியங்கி விழுந்து விட்டால் என்ன செய்வது? ரத்தம், சீழைப் பார்த்து விட்டால்... அப்புறம் மருந்து நெடி வேறு. எல்லாமாக, அருவருப்பில் உன்னால் சாப்பிடவே முடியாதே. ஒவ்வொரு பிடி எடுத்து வைக்கும்போதும், அதெல்லாம்தானே நினைவு வரும்? பா... வம்!''

முகம் கலங்கிக் கையில் எடுத்த சப்பாத்தி விள்ளலை மீண்டும் தட்டில் போட்டாள், திருமதி திவாகரன். பாவம், எல்லாவற்றையும் கற்பனையிலேயே கண்டுவிட்டாள்போல.

திவாகரனின் நோக்கமும் அதுவேதானா? இருக்கக் கூடாதே.

அவர்களுக்குள் ஏதோ என்பது, வசுமதிக்கு இப்போது தெளிவாயிற்று. இது வளர்வது நோயாளியின் மன அமைதிக்கு நல்லதில்லை. மனம் உடம்பைப் பாதிக்கும்.

''அதில்லை, மேடம். பொதுவாகத் தங்கள் நோயை வெளிக்காட்டிக் கொள்ள எந்த நோயாளியுமே விரும்புவது இல்லை. தான் நோயாளி, நோயாளி என்று, அதனால் கிடைக்கக் கூடிய சலுகைகளை விரும்பி அனுபவிக்கிறவர்கள்கூட, டாக்டர் பரிசோதிக்கும் போது யாரும் பார்க்கக் கூடாது என்பார்கள். அதனாலேயே, மருத்துவமனைகளில், திரையாவது வைத்து, மறைவில் தான் பரிசோதனைகள், சிகிச்சைகள் செய்வது. அது போலத்தான் இப்போதும் செய்தேன்,'' என்று விளக்கினாள் அவள்.

''சரி சரி. விளக்கம் போதும். பசி என்றாயே, சாப்பிடு,'' என்று திவாகரன் இந்த விளக்கத்தை அவன் விரும்பவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டினான்.



மனைவி இறுகிப் போய் அமர்ந்திருப்பதை ஓரக் கண்ணால் பார்த்துவிட்டு, ''அதென்ன 'மேடம்?' எனக்கும் 'சார்' போடுகிறாய். மருத்துவ மனையில் மேட்ரன், டாக்டர் எல்லோருக்கும் பெரிய மரியாதை கொடுத்துப் பழகுவது போல நினைத்தாயா? இங்கே அதெல்லாம் தேவையில்லை. சும்மா, திவாகரன், சுபலா என்றே நீ கூப்பிடலாம். முக்கியமாக, 'மேடம்' என்று அழைத்தால் என் மனைவிக்குப் பிடிக்காது. வயதான மாதிரித் தோன்றும் என்று இரவு பகல் தூக்கமின்றித் தவித்துப் போவாள்...'' என்று திவாகரன் சொல்லிக் கொண்டே போக, சுபலா ஆத்திரத்துடன் குறுக்கிட்டாள்.

''அப்படி யென்று நான் சொன்னேனா?''

''அதை நீ வாய் திறந்து சொல்ல வேண்டுமா? உன்னை எனக்குத் தெரியாதா? வசுமதி உன்னை மேடம் என்று அழைத்த போது உன் முகம் போன போக்கை நான் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன்,'' என்றான், திவாகரன் - விடாமல்.

சுபலாவின் கண நேரத் தயக்கம், கணவன் பேச்சை உண்மை என்று பறைசாற்றியது. ஆயினும் உடனேயே சமாளித்துக் கொண்டு, ''அப்படி நினைக்கவில்லை. இந்த மேடம், சார் எல்லாம் பழங்கால ஆண்டான் - அடிமை மாதிரி இருக்கிறதே என்றுதான் எண்ணினேன். இப்போதெல்லாம் யாரும் இப்படி வர்க்க வேறுபாடு பார்ப்பதில்லை, அல்லவா?'' என்றாள் அவள்.

மறுத்து ஒன்றும் பேசாமலே, உரக்கச் சிரித்துத் தன் நம்பாமையை வெளிப்படுத்தினான் திவாகரன். ''கேட்டுக் கொள், வசுமதி. வர்க்க வேறுபாடு இந்த வீட்டில் கிடையாது என்கிறார்கள். இன்னும்கூட உரிமை எடுத்து

சுபா, வாடி என்று கூப்பிட்டால், இன்னமும் சந்தோஷ மாக இருக்கக் கூடும். ரொம்பச் சின்னப் பெண்ணாகத் தோன்றும் அல்லவா?''

சட்டெனத் தட்டைத் தள்ளி வைத்துவிட்டு எழுந்து விட்டாள் சுபலா. ''நான் இளமையாகத் தெரிவது என் குற்றம் அல்ல. நீங்கள் மூத்துத் தெரிகிறீர்கள் என்று உங்களுக்குத் தாழ்வு மனப்பான்மை. இங்கேயே இருந்தால், மேலும் மேலும் இப்படியேதான் பேசுவீர் கள். நான் போகிறேன்... இதற்காக, நீங்கள் சரியாகச் சாப்பிடாமல் இருந்து விடாதீர்கள், நர்ஸ். மாரி, நர்சம் மாவுக்கு வேண்டியது பார்த்து வை,'' என்று வீட்டுக் காரியாகக் கூறிவிட்டு, அங்கிருந்து சென்றுவிட்டாள்.

வைத்தது கிட்டத்தட்ட அப்படியே இருந்த அவளது தட்டைப் பார்த்து வசுமதிக்கு உள்ளூர வருத்தமாக இருந்தது.

கணவனும் மனைவியும் ஏன் இப்படிப் பிறாண்டிக் கொள்கிறார்கள் என்று எண்ணியவாறு, திவாகரனைப் பார்த்தால், அவனும் மனைவியின் தட்டைத்தான் பார்த் துக் கொண்டிருந்தான்.

வசுமதியின் பார்வையை உணர்ந்தவன் போல, ''அதி மென்மையான இதயம்!'' என்றான் கிண்டலாக. ''ரத்தம், சீழ் என்ற பிறகு, இப்போதைக்குத் தொண்டைக்குள் ஏதா வது இறங்குமா, என்ன?'' என்று ஒரு மாதிரிக் குரலில் கூறித் தோளைக் குலுக்கியவன், மாரியை அழைத்து, ''ஒரு பத்து நிமிஷம் கழித்து, அம்மா அறைக்குச் சாப்பாடு அனுப்பு,'' என்று பணித்துவிட்டு, வசுமதியைப் பார்த்து, ''உனக்கு ஒன்றும் பிரச்சினை இல்லையென் றால் இனி நாம் சாப்பிடுவோமா?'' என்று உண்ணத் தொடங்கினான்.

வசுமதிக்குப் பிரச்சினை இருந்தது.



ஒரு தனியார் இல்லத்தில், அவளது வேலை தொடங் கும் முதல் நாள் வீட்டுத் தலைவிக்கும் தலைவனுக்கும் அவள் முன்னிலையில் தகராறு. தலைவி உண்ணாமல் எழுந்து போயிருக்கிறாள். தகராறின் காரணம் அவளது வேலை தொடர்பானதோ என்கிற ஐயம் வேறு. வெளிப்படையாக அவள் அழைத்த விதத்தை வைத்தே, இருவரும் சண்டையிட்டிருக்கிறார்கள்.

இதெல்லாம் ஒன்றுமே இல்லை என்பது போல உண்பது, எத்தனையோ பிரச்சினைகளுக்கு நடுவிலும் வயிற்றை நிரப்பிப் பழகிய அவளுக்கும் சிரமமாகத் தான் இருந்தது.

ஆனால், இந்த உணவை இயல்பாக உண்பது, ஏதோ ஒரு வகையில் மிகவும் முக்கியம் என்பதும் அவளுக்குப் புரிந்திருந்தது.

திவாகரனின் கீழ்க்கண் பார்வையில் ஆராய்ச்சியை உணர்ந்தவள், தன் மனதைச் சமனப்படுத்திக் கொண்டு, அமைதியாக உண்ணலானாள்.

அத்தோடு, மனச் சஞ்சலங்களுக்காகப் பட்டினி கிடப்பதால், எந்த விதப் பயனும் கிடையாது. உடலும் சோர்ந்து, மேலும் அவளுக்குச் சிரமமே கூடும் என்பது அவள் அனுபவத்தில் அறிந்த உண்மை ஆயிற்றே.

அன்றிரவு தூங்குமுன், அன்றைய நிகழ்ச்சிகளை அசை போட்டபடி, வசுமதி சற்று நேரம் சும்மா படுத்திருந்தாள்.

ஊகிப்பதற்குப் பிரமாத அறிவுக் கூர்மை தேவையில்லை.

திவாகரனின் காயங்களைப் பார்த்துவிட்டுச் சுபலா சாப்பிட முடியவில்லை என்று எப்போதோ சொல்லி யிருக்க வேண்டும். அதைத் திவாகரன், மனைவி தன் னிடம் அருவருப்புற்று விட்டதாக எப்படியோ எண்ணி விட்டான் என்று அவளுக்குத் தோன்றியது.

சும்மாவே, அநியாயமாகக் காயப்படுத்தப்பட்டு, அதன் காரணமாகத் தான் விரும்பி ஆடும் ஆட்டத்தை விளையாட முடியாமல் போனதே, அவனுக்கு மிகுந்த வருத்தமாக இருந்த வேளையில், மனைவியின் செயல் முதுகில் குத்தியது போல உணர்ந்து விட்டான் போலும்.

அந்த ஆத்திரத்தைத்தான் இப்படிக் காட்டுகிறானா?

எப்படி யிருப்பினும், திவாகரனுக்கு மனைவியிடம் அன்பு இருக்கிறது என்பது நிச்சயம்.

பத்து நிமிஷம் பொறுத்து, அவளுக்கு உணவு கொண்டு போகச் சொன்னதே, அதை நிரூபிக்கிறதே. வேலையாட்களைப் பொறுத்தவரையில் இது - இந்தக் கணவன் மனைவி சச்சரவு - பழகிவிட்டதுபோல, ஒரு வித உணர்ச்சியும் இல்லாமல், அவரவர் வேலையைப் பார்த்தார்கள்.

ஆனால், அவள்... அந்தச் சுபலா எப்படி?

இருவரும் காதலித்து மணந்ததாக வந்தனா சொல்லி யிருந்தாள். இன்றைக்கு இருவர் பார்வையிலும் காதல் மருந்துக்குக்கூட இல்லை என்பது நிதரிசனம்.

ஒரு குடும்பம் வீணாகிவிடக்கூடாதே என்று வசுமதி கவலைப் பட்டாள்.

அத்தோடு, இது அவளை, அவளது வேலையை, எந்த அளவுக்குப் பாதிக்கக் கூடும் என்று, அது வேறு அவளுக்குக் கவலையாக இருந்தது.



## 6

கணவன் மனைவி இருவரும் மன மொத்த தம்பதியாக இருந்தால், நோயாளியின் உடல் நலம் ஒன்றே இருவரது குறிக்கோளாகவும் இருக்கும்.



அப்போதும், இதைச் செய்யவில்லையா? அது ஏன் அப்படியே இருக்கிறது என்று தொணதொணப்பும் விரட்டலுமாகவே இருப்பார்கள்.

உழைப்பதற்கு அஞ்சாத வசுமதிக்கு, இதுவரையிலும் அது சிரமமாக இருந்தது இல்லை.

ஆனால், வீட்டில் இருக்கும் இருவரும் ஆளுக்கொரு பக்கம் முகத்தைத் திருப்பி வைத்துக் கொண்டு, ஒவ்வொரு விதமாகப் பேசியபோது, செய்வதறியாது, அவள் திணறிப் போனாள்.

முதல் பேதம், திவாகரனுக்குச் சிகிச்சை செய்யும் இடம் பற்றியது.

தன் அறைக்குள், கதவைத் தாழிட்டுக் கொண்டுதான் பிளாஸ்டரைத் தொடுவதே என்றான் திவாகரன். கண்ட நாயும் திடுமென உள்ளே வராதிருப்பதற்கான ஏற்பாடாம்.

எதற்காக இந்த மூடு மந்திரம் என்று சுபலா கேட்டாள்.

நாய் கீய் என்று அவளுடைய கணவன் சொன்னதை அப்படியே திருப்பிப் படிக்க முடியுமா?

யாரேனும் திடுமென வந்துவிடக் கூடாதே என்றுதான் என்றாள் வசுமதி.

ஆனால், ''அனுமதியின்றி, வேலையாட்கள் யார் அறைக்குள்ளும் வருவதில்லை. அப்படியானால், திடுமென நான் வந்தால் பார்க்கக் கூடாதபடி, அப்படி யென்ன முறையில் சிகிச்சை நடக்கிறது?'' என்று, கேலி போல, மற்றவள் கேட்டபோதும், அவளது கண்கள் இடுங்கிப் பார்வை கூர்மையுற்றிருந்தது.

நல்ல வேளையாகத் திவாகரன் அப்போது அங்கே இருக்கவே, இதற்குப் பதில் சொல்ல வேண்டிய நிலை வசுமதிக்கு இல்லாது போயிற்று.

''அதை நீயேதான் தெரிந்து கொள்ள வேண்டும்,'' என்ற திவாகரன், மறுநாள் சுபலாவை அழைத்து வரச் சொல்லி, அவள் முன்னிலையில் மருந்திட்டு, மூடி வைத்திருந்த பிளாஸ்டர்களைச் சட்டெனப் பிய்த்து எறிந்துவிட்டான். சற்று முரட்டுத்தனமாக அவன் பிய்த்த விதத்தில், காயங்களில் மூடத் தொடங்கியிருந்த தோலும் சேர்ந்து வந்துவிட, ரணமும், ரத்தம் கசியும் நிணமுமாகப் பார்ப்பதற்குப் பயங்கரமாக, வசுமதிக்கே கஷ்டமாக இருந்தது.

சுபலாவைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்.

கணவன் வேண்டும் என்று செய்திருக்கிறான் என்று புரிந்து, தன்னைச் சமாளிக்க முயன்றவள், ''என்னம்மா, என்ன சிகிச்சை எப்படி நடக்கிறது என்று மேற்பார்வை யிட வந்துவிட்டு, எங்கோ பார்த்தால் எப்படி? பாரம்மா. பிரமாதமாக ரத்தம் கசிகிறதில்லை? நல்ல சிவப்பு ரத்தம். இந்த நிறத்தில் உன்னிடம் உடை இருக்கிறதோ? இல்லாவிட்டால் உடனே வாங்கி விடு. இருவருக்கும் பொருத்தமாக இருக்கும். ஒன்று செய்யலாமா? வசும தியைப் போகச் சொல்லிவிட்டு, நீயே காயங்களைத் துடையேன். அதோ பஞ்சு...'' என்று அவன் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, வாயைக் கைகளால் பொத்தியபடி, சுபலா அங்கிருந்து ஓடிவிட்டாள்.

வசுமதிக்கு அவளிடம்தான் பரிதாபம்.

கொலைகாரனுக்குக்கூட, அவனுடைய அன்புக்குரிய வரின் ரத்தத்தைப் பார்க்கப் பிடிப்பதில்லை. கணவனின் சேதங்களைப் பார்ப்பதற்குச் சுபலாவுக்கு எப்படி இருக்கும்!

அதிலும், வேண்டும் என்றே திவாகரன் ஆறி வந்த ரணங்களைப் பெரிதாக்கியது. அவளுக்கு ரொம்பவே பிடிக்கவில்லை.



முகத்திடம் கோபப்பட்டுக் கண்ணை நோண்டிக் கொள்வது என்பதுபோல, மனைவிக்குக் குட்டு வைக் கும் வெறியில், திவாகரன் தன்னையே அல்லவா வருத்திக் கொண்டிருக்கிறான்.

இரண்டு நாள் ஆறியதெல்லாம் வீணாகிவிட்டது எனும் போது, தொழில் ரீதியிலும் அவளுக்கு ஆத்திரமே.

என்னதான், உணவு, உறைவிடத்தோடு, அவளுக்கு மிகவும் தேவையான மறைவிடமும் இங்கே கிடைத்த போதும், அவளால் கோபப்படாமல் இருக்க முடியவில்லை.

எனவே, எதுவும் பேசாமல், தன் வேலையைக் கவனித்தாள்.

சற்று நேரத்துக்குப் பிறகு, ''உனக்கு என்ன கோபம்?'' என்று திவாகரனே கேட்டான்.

''உங்கள் உடம்பு, உங்கள் வலி... எனக்கு என்ன சார் வந்தது? நீரிழிவு வந்திருக்கிறது. சர்க்கரை, கொழுப்பு சேர்க்காதீர்கள் என்று சொல்வதுதான். நன்றாகத் தின்று விட்டு, கண் தெரியவில்லை. காலில் புண் அழுகி விட்டது என்று வந்து விழுகிறவர்கள் மேல் கோபப் பட்டுக் கொண்டா இருக்க முடியும்? பாவம் என்று, அதற்குரிய சிகிச்சையைச் செய்ய வேண்டியதுதான்!'' என்று சீரான குரலில் சொல்லியபடியே தன் வேலையைத் தொடர்ந்து செய்தாள் வசுமதி.

சிறு மௌனத்தின் பின், ''புரிகிறது, காயங்களைப் பெரிதாக்கிக் கொண்டது உனக்குப் பிடிக்கவில்லை. ஆனால்... யோசித்துப் பார், அடிபட்டதும் புருஷனைப் பிடிக்காமல் போய்விட்டது. ஆனால், இங்கே என் னவோ தப்பு நடப்பது போல, அது என்ன குத்தல் பேச்சு? அதற்காகத்தான்,'' என்றான் அவன்.

சற்று நேரம் அமைதியில் வேலை நடந்தது.

புதிதாக மருந்திட்டுப் புண்களை மூடியபடி, ''உங்கள் குடும்ப விஷயத்தில் தலையிடுகிறேன் என்று எண்ணா தீர்கள். நிறையப் பேருக்கு, நோயாளிகளுக்குச் சேவை செய்யத் தெரியாது. பிடிக்காது. இதற்கென்று படிக்க வந்துவிட்டு, முதலாம் ஆண்டு எத்தனை பேர் கஷ்டப் பட்டார்கள், தெரியுமா? இதை யெல்லாம் பெரிதாக எண்ணி யாரையும் வெறுப்பது சரியில்லை என்பது என் அபிப்பிராயம்,'' என்றாள் அவள்.

''வெறுக்க முடியாததுதான் வெறுப்பாக இருக்கிறது என்றால், உனக்குப் புரியுமோ, என்னவோ? ஆனால், அதுதான் உண்மை,'' என்று ஒரு பெருமூச்சுடன் உரைத் தான், திவாகரன்.

அதாவது, பேச்சினால் எவ்வளவு குத்திக் குதறினாலும், மனைவி மீது அன்பு அப்படியே இருக்கிறது என்றான்.

அதாவது, அவனது அன்பு பற்றி வசுமதி நினைத்தது சரிதான்.

இவனது உடம்பு குணமாவதோடு கணவன் மனைவிக் கிடையே இருக்கும் பிணக்கும் தீர்ந்துவிட்டால் நன்றாக இருக்கும் என்று எண்ணினாள் அவள்.

அதற்குத் தன்னாலான உதவியைச் செய்ய வேண்டும் என்றும் உள்ளூர உறுதி செய்து கொண்டாள்.

இதே எண்ணத்தில்தான் அவள் சுபலா பற்றித் திவாகர னிடம் அவ்வப்போது பேசியது. அவன் மனமும் அடிக்கடி அவளையே நினைத்ததோ, பெரிதாகத் தூண்டா மலே, அவனும் சுபலாவைப் பற்றிச் சொன்னான்.

எப்படிக் காதலித்தார்கள், கல்யாணம் செய்து கொண் டார்கள், எங்கே சென்றாலும் சேர்ந்தே சுற்றினார்கள்.



திருமணமானதில் இருந்து, திவாகரனின் பயிற்சி, விளையாட்டு, பயணங்கள் போன்ற அனைத்தையும் சுபலாதான் கவனித்துக் கொண்டாள்.

கூடவே, விளம்பரப் படங்கள் மூலம் வருமானம் பெருகுமாறு செய்ததோடு, விளம்பரப் படப்பிடிப்பு களைக் கூட அவள்தான் திட்டமிட்டாள்.

''எல்லாம் என் நன்மைக்காகச் செய்கிறாள் என்று பார்த்தால், கடைசியில் காசும், பட்டாம்பூச்சியாக அவள் ஊர் சுற்றுவதும்தான் உள்நோக்கமாக இருந்திருக் கிறது,'' என்றான் திவாகரன் கசப்புடன்.

''சட்டென்று தவறாக முடிவு செய்யாதீர்கள், திவா கரன். சுபலாவின் காரணம் நீங்கள் முதலில் நினைத்த தாகவே இருக்கலாம்,'' என்று வசுமதி கூறியதை, அவன் ஒத்துக் கொள்ளவில்லை.

''கிடையவே கிடையாது. உண்மை அன்பு உள்ள வர்கள், துன்பத்தில் கைவிட்டு, ஓடமாட்டார்கள். இப் போதைக்கு விளையாட முடியாது, பயணங்கள் கூடாது என்றதும், அன்றைக்கு என்னை விட்டு விலகிப் போன போது இருந்த அவள் முகம், என் உயிருள்ளவரை, எனக்கு மறக்காது!'' என்று கண்ணில் வலியுடன் முகத்தைத் திருப்பிக் கொண்டான் திவாகரன்.

அதற்கு மேல், அந்த நிகழ்ச்சி பற்றிப் பேச, வசுமதிக்குத் தைரியம் இல்லை.

மறக்க வேண்டியதை, மேலும் மேலும் நினைக்க வைத்து, உறுதிப்படுத்தக் கூடாதே.

ஆனால், எடுத்த காரியத்தை இடையில் விடாமல், சில தினங்களுக்கு ஒரு முறையேனும், சுபலாவின் பெயர் பேச்சில் வருமாறு பார்த்துக் கொண்டாள்.

சுபலாவிடமும் கொஞ்சமேனும் முயற்சி இருந்திருந்தால், ஏதோ ஒரு பலன் கிட்டியிருக்கலாம். ஆனால், அன்றைக்குத் திவாகரன் கொடுத்த அதிர்ச்சிக்குப் பிறகு, அவன் இருக்கும் திசையைக் கூடத் திரும்பிப் பார்ப்பதில்லை என்று அவள் இருந்துவிடவே, கணவன் - மனைவி உறவில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படாது போயிற்று.

திவாகரனின் உடல் நிலையைப் பொறுத்தவரையில் பெருத்த முன்னேற்றம் நேர்ந்திருந்தது.

காயங்கள் பெரிதும் ஆறித் தழும்பாகத் தொடங்கியிருந்தன.

ஒடிந்திருந்த கால் எலும்பு மீண்டும் சேர்ந்துவிட, நடப்பதற்காகப் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பயன்படுத்தாததால் இறுகியிருந்த தசைகளின் இளக்கத்துக்காக என்று, ஒத்தடங்கள், உருவி விடல்கள் எல்லாம் நடந்தன.

அத்தோடு, வசுமதி அவனை நடக்கவும் வைத்தாள்.

ஒரு கையில், மூன்று கால்களுடன் கூடிய ஊன்று கோலைக் கொடுத்துவிட்டு, ஒரே காலுக்கு அதிகப் பளு கொடுக்கக் கூடாது என்று, மறுபடியும் பெருமளவு திவாகரனை அவளே தாங்கிச் சென்றாள். பரந்து விரிந்திருந்த புல்வெளியுடன் கூடிய தோட்டம், இந்தப் பயிற்சிகளுக்கு வசதியாக இருந்தது.

நடப்பது, பாதிக்கப்பட்ட காலை லேசாக மடக்கி நீட்டுவது, மேற்கொண்டு இன்றைய நிலையில் திவாகரன் செய்யக்கூடிய அளவில், பொதுவான உடல்பயிற்சிகள்.

முதலில் திவாகரன் தயங்கியபோதும், வசுமதியின் பேச்சினால் நன்றாகி விடுவோம் என்ற நம்பிக்கை வந்துவிட, அவனும் முழுமையாக ஒத்துழைத்தான்.

இடையிடையே திவாகரனுக்கு ஓய்வு தேவை என்று தோன்றும்போது, சீட்டு, சதுரங்கம் போல, எதையேனும் உட்கார்ந்து விளையாடினார்கள். சுபலாவை எப்படியாவது அவளுடைய கணவன் அருகே இழுக்க வேண்டும் என்று எண்ணி வாய்ப்பை நாடிக் காத்திருந்த வசுமதி, தனக்குச் சரிவரத் தெரியாத இந்த விளையாட்டுகளில், தனக்கு உதவி செய்யுமாறு சுபலாவை அழைத்துப் பார்த்தாள்.

சுபலாவும், தானும் மற்ற நண்பர்களோடோ, தனியாகவோ இந்த ஆட்டங்களை ஆடுவது உண்டு என்று பழைய கதைகள் பேசும்போது, திவாகரன் வசுமதியிடம் சொன்னதுண்டு. அதனால்தான் சீட்டு, சதுரங்கத்தை வசுமதி தேர்ந்தெடுத்ததே.

ஆனால் சேர்ந்து விளையாடுவதில், சுபலா அதிக அக்கறை காட்டவில்லை. வசுமதி பல முறை அழைத்து, அதில் ஒரு முறை அவளாக வந்தாலும், திவாகரன் குத்தலாக எதையாவது சொல்ல, அவளும் உடனே விரைத்துக் கொண்டு போய்விடுவாள்.

பயிற்சிகளைத் திவாகரன் சரியாகச் செய்கிறானா என்று கவனிப்பதும், அளவு மீறிச் செய்துவிடக் கூடாதே என்று கண்காணிப்பதுமாக, அவ்வப்போது உதவி செய்வதுமாக, அவன் கூடவே வசுமதி இருக்க நேர்ந்தது, அவள் செய்ய வந்த பணியின் ஒரு பகுதிதான்.

மருத்துவ மனையில் தனிப்பட்ட வார்டுகளில் பணிபுரிவது போலத்தான் அவள் நினைத்தாள்.

ஆனால், ஒரு நாள் இரவு படுக்கப் போன பிறகு, சுபலா வசுமதியின் அறைக்கு வந்து, திவாகரனிடம் இருந்து ஒதுங்கி இருக்கும்படி எச்சரித்தாள்.

அன்று திவாகரன் காயங்களைக் காட்டியதிலிருந்து, சிகிச்சை நடக்கும் பக்கமே சுபலா வருவதில்லை. அதுபற்றிப் பேசுவதும் இல்லை. எந்த வித அக்கறையும் அவள் காட்டியதும் இல்லை. சும்மா ஒரு விளையாட்டில் பங்கெடுத்துக் கொள்ளக்கூடப் பத்துத் தரம் அழைத்தால், ஒரு தடவை வந்து, அப்போதும் பாதியிலேயே போய்விடுகிறவள்.

அப்படிப்பட்டவள் திடுமென 'விலகி இரு' என்றது, வசுமதிக்குப் புரியாத விசித்திரமாக இருந்தது.

எனவே, சுபலாவை வியப்புடன் நோக்கி, ''விலகி யிருந்தால், என் வேலையை எப்படிச் செய்வது?'' என்று வினவினாள்.

''ஏன்? ஒரு தரம் சொன்னால் புரிந்து கொண்டு செய்யத் தெரியாத முட்டாளா, அவர்? அல்லது, முட்டாள் நீயேதானா?'' என்று எரிச்சலோடு கேட்டாள் மற்றவள்.

உதவி செய்கிறவளைப் புரிந்து கொள்ளாமல், முட்டாள் என்கிற இவள் அல்லவா...

''கவனிக்க வேண்டும், சுபலா. முழுமையாகக் கவனிக்க வேண்டும். பயன்படுத்த முடியாமல் சும்மா விட்டுவிட்டதால், திவாகருக்குத் தசைகள் துருப்பிடித்த மாதிரி நிலை. தசை நாண்கள் இறுகி விட்டிருக்கும். இதை யெல்லாம் பழைய நிலைக்குக் கொண்டு வர வேண்டும். முகத்தில் காட்டாதபோதும், பயிற்சி செய்யும்போது, திவாகருக்கு ரொம்ப வலிக்கும். வலி தாளாமல், பயிற்சிகளைத் தப்பாகச் செய்தால், நிலைமை முன்னிலும் கேடாகி விடும். அதனால், விடாமல் பார்த்துக் கொண்டிருந்து, சிறு பிழை கூட நேராமல் கவனித்தாக வேண்டும்,'' என்று பொறுமையுடனேயே விளக்கினாள் வசுமதி.



''அப்படியானால், அவரைத் தொடாமலாவது செய்யேன்,'' என்று சுபலா ஆத்திரத்துடன் கூவ, ஆச்சரியத்துடன் பார்த்தாள் மற்றவள்.

இதுவும், வசுமதிக்குப் புதியது அல்ல.

''ஐயோ, ஐயோ, கூச்சநாச்சம் இல்லாமத் தொடுகிறியே, யாராச்சும் ஆம்பளையை இதையெல்லாம் செய்யச் சொல்லப்படாதா?'' என்று பல பெண்கள் அவளைக் கேட்டிருக்கிறார்கள்தான்.

ஆனால், அப்படிக் கேட்டவர்கள், படிப்பறிவில்லாத பாமர மக்கள். ஒரு வக்கீல் சட்டப் புத்தகத்தை எப்படித் தொடுவாரோ, அதேபோலத்தான், வசுமதி ஒரு நோயாளியைத் தொடுவதும். அதில் ஆண், பெண் பேதம் கிடையாது என்றும் அறியாதவர்கள். தன் மனிதனை வேற்றுப் பெண் தொடுவதா என்பது மட்டும்தான் அவர்களுக்கு.

ஆனால் சுபலா?

படித்தவள். பல நாடுகள் சென்று வந்திருப்பவள். ஆண்களுடன் கை குலுக்கி, அருகமர்ந்து அளவளாவியவள். அவள்கூடவா இப்படிப் பேசுவது?

இதிலும், நல்ல விஷயம் ஒன்றை வசுமதி உடனே கண்டுபிடித்தாள்.

சுபலாவைப் போலப் படித்த, உலக அறிவுள்ள ஒருத்திக்குக் கணவனை ஒரு நர்ஸ் தொடுவதுகூடப் பிடிக்கவில்லை என்றால், அவள் மனதில் எவ்வளவு பொறாமை கொந்தளித்துக் கொண்டிருக்க வேண்டும்!

இந்தப் பொறாமையின் அடிப்படை காதல் அல்லவா? அவன் மனமும் அடியோடு வெறுத்து விடவில்லை எனும்போது, இவர்களை இணைப்பது எளிதுதானே!

மனைவி முதலில் ஒதுங்கிப் போனதுதான், திவாகரன் கொண்ட கோபத்தின் அடிப்படைக் காரணம். அவளை அடிக்கடி அருகே வரவழைத்து விட்டால், அந்தக் கோபம் ஆறித்தானே ஆக வேண்டும்?

கணவன் அருகில் சுபலாவை வரவழைக்கும் நோக்கத்துடன்தான், வசுமதி திவாகரனோடு முன்னிலும் அதிக நேரம் கழித்தது.

ஆனால், சுபலாவின் மூளை வேறு விதமான வேலை செய்து, தனக்கு உதவியாக ஓர் ஆளை வரவழைத்தது.

அவன் வசுமதியை அவனது விருப்பம்போல ஆட்டி வைத்தான்.



## 7

வழக்கம் போலவே அன்றும் பதினோரு மணிக்கு ஒரு தரம் திவாகரன் பயிற்சி செய்து முடிக்கவும், வசுமதியும் அவனுமாக மர நிழலில் செஸ் விளையாடிக் கொண்டிருந்தனர்.

வீட்டிலிருந்து பார்க்கக் கூடிய இடத்தில்தான் அமர்ந்திருந்தார்கள்.

அவ்வப்போது விலகி மூடும் திரைகளைப் பார்க்கையில், வசுமதிக்கு ஒரு புறம் சிரிப்பு வந்தாலும், ஓரளவு பரிதாபமாகவும் இருக்கும்.

எதற்கு இந்தப் பாடு? நேரடியாகக் கணவனிடம் பேசுவது, தப்பே செய்திருந்தாலும் மன்னிப்புக் கேட்டு நிலைமையைச் சீர்செய்து கொள்வதற்கென்ன?

வறட்டுக் கௌரவம் பார்த்துச் சுபலா இந்தப் பாடு படுவானேன்?



விலகி மூடும் ஜன்னல் திரைகளைத் திவாகரனும் கவனிக்கிறானோ என்ற சந்தேகம், வசுமதிக்கு அவ்வப்போது தோன்றுவதுண்டு.

சில சமயம் அவள் கையைப் பிடித்துக் கொண்டு, "நீ மட்டும் வந்திராவிட்டால், என் கதி அதோகதி ஆகியிருக்கும், வசு. சக்கர நாற்காலியிலேயே இருக்கப் போகிறாயா என்று நீ அன்று கேட்டபோது, ஆத்திரம் வந்தபோதும், அதுதான் என்னை உசுப்பி விட்டதும். இன்று இந்த அளவுக்கு நடமாடத் தொடங்கியிருக்கிறேன் என்றால், அதன் முழுப் பெருமையும் உன்னதுதான்!" என்று உணர்ச்சி ததும்பத் திவாகரன் கூறும்போது, அது மனதிலிருந்து வந்ததாகவும் தோன்றும், வீட்டில் மறைந்திருந்து பார்க்கும் சுபலாவுக்காகச் சொல்லப் பட்டதோ என்று அவள் சந்தேகப்படுவதும் உண்டு.

எப்படியோ? மிஞ்சி மிஞ்சி இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் இங்கே அவளுக்கு வேலை இருக்கும். அதற்குள் அந்த இளம்பிறையன் பிரச்சினை தீர்ந்துவிட்டால், பெரியப்பா வீட்டுக்குப் போக முடியாவிட்டாலும், தைரியமாக, ஏதாவது பெண்கள் விடுதியில் தங்கியேனும் வேலை பார்த்துப் பிழைக்கலாம். வந்தனாவின் கடிதத்தைப் பார்த்தால், அந்த வில்லனும், பெரியப்பாவும் இன்னமும் இழைவதாகத்தானே தெரிகிறது.

"ஹூம். இவ்வளவுதான் என் பேச்சுக்கு உள்ள மரியாதையா? நான் என் மனதில் நிறைந்து வழியும் நன்றி உணர்ச்சியைச் சொல் மழையாகக் கொட்டிக் கொண்டு இருக்கிறேன். நீ அதில் ஒரு வார்த்தைகூடக் காதில் வாங்கியதாகத் தெரியவில்லையே. ஹூம்..." என்று திவாகரன் மீண்டும் பெரிதாகப் பெருமூச்சு விட்ட பாவனையில், வசுமதி நகைத்தாள்.

சிரித்துவிட்டு, "ஓ! நிஜமாகவே நீங்கள் பேசினீர்களா, திவாகரன்? அடிக்கடி இதே வசனத்தைக் கேட்கிறேனா? ஏதோ குட்டி டேப் எடுத்து, அவ்வப்போது அதை ஓட விடுகிறீர்கள் என்று எண்ணி விட்டேன்," என்றாள் அவள் கிண்டலாக.

"அநியாயம், வசு. நான் உள்ளூர உணர்ந்து..." என்றவனை இடைமறித்து, "ஊதியம் வாங்கிக் கொண்டு வேலைபார்ப்பதற்கு நன்றி அவசியம் கிடையாது, திவாகரன். என் இடத்தில், எந்த நர்ஸ் வந்திருந்தாலும், இதையேதான் செய்திருப்பாள். எனவே, இந்தப் பேச்சை விடுங்கள்," என்று முடித்துவிட்டு, "என்ன, நீங்கள் இன்னமும் அடுத்த காயை நகர்த்தவே இல்லையே," என்று விளையாட்டில் கவனத்தைத் திருப்பினாள் அவள்.

"எனக்கு இப்படி உட்கார்ந்து விளையாடும் விளையாட்டுகளில் அவ்வளவு ஈடுபாடு இருந்ததே இல்லையா, இப்போது எந்தக் காயை நகர்த்துவது நல்லது என்று புரியவில்லை. ம்ம்ம்..." என்று இன்னமும் யோசித்தான் அவன்.

"சும்மா வையுங்கள், சார். நானும் பிரமாதமாக ஆட்டம் தெரிந்தவள் அல்லவே. சும்மா எங்கள் நர்சுகள் பொழுதுபோக்குக் கிளப்பில் பயின்றதுதானே!" என்று ஊக்கினாள் அவள்.

"ஆனாலும் என்னை விட நன்றாக விளையாடுகிறாயே. இப்போது விபு மட்டும் இருந்தால், எப்போதோ உன்னைத் தோற்கடித்திருப்பான்," என்று முனகியபடி, எதையோ வைத்தான் திவாகரன்.

விபு.

அவ்வப்போது திவாகரனின் பேச்சில் அடிபடும் பெயர். தம்பியோ, அண்ணனோ? அவனது முழுப் பெயர் என்னவோ? வந்தனா சொன்ன தொழில் பார்க்கிற மகன் என்று புரிந்தது. உட்கார்ந்து செஸ் விளையாடி, உட்கார்ந்து தொழில் செய்து... திவாகரனுக்கு நேர்மாறாக இருப்பான் போலும்.

உட்கார்ந்து, உட்கார்ந்து உடல்பயிற்சியே இல்லாமல், தொந்தியும் தொப்பையுமாக ஓர் உருவம் கற்பனையில் தோன்ற, சிறு எரிச்சலுடன் தோளைக் குலுக்கினாள் வசுமதி.

உடம்பை அசைக்கவே பிடிக்காது போல. இல்லாவிட்டால், இப்படி அடிபட்ட சகோதரனைப் பார்க்க ஒரு தரமேனும் வந்திருக்க மாட்டானா? சோம்பேறி.

இத்தனைக்கும் திவாகரனுக்கு உடன்பிறந்தவனிடம் அவ்வளவு பிரியம். அவன் பெயரைச் சொல்லும்போது, குரலே கனிந்து விடும்.

ஓரிரு முறையேனும் வந்து, உடன் பிறந்தானை உற்சாகப் படுத்தி விட்டுப் போவதற்கென்ன? பணம் எண்ணுவது குறைந்தா போகும்?

பாசமே இல்லாத பிறவி...

இந்த அளவுதான் வசுமதி விபுவைப் பற்றி முதலில் நினைத்திருந்தது. ஆனால், பண்பும் இல்லாதவன் அவன் என்று, அவள் விரைவிலேயே நினைக்க நேர்ந்தது.

"இன்றைக்கு எனக்கு ஓர் அதிர்ச்சி வைத்தியம் செய்யப் போவதாக விபு சொன்னான். என்னவாக இருக்கும்? அதே யோசனையில் விளையாட்டும் ஓடவில்லை. போதும் இந்த விளையாட்டு," என்று திவாகர் கூறவும், சதுரங்கக் காய்களைப் பெட்டியில் இட்டு, உள்ளே கொண்டு வைத்துவிட்டு வந்தால், திவாகருடன் இன்னொருவன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

வசுமதி தயங்கி நிற்கவும், மகிழ்ச்சியுடன் அவளை நோக்கி, "என் தம்பியின் அதிர்ச்சி வைத்தியத்தைப்

பார்த்தாயா? திடுமென வந்து நிற்கிறான், விபு. விபாகரன். விபு! இவள்தான் வசுமதி. என்னை உயிரோடு வாழ வைத்திருப்பவள்,'' என்று இருவருக்கும், திவாகரன் அறிமுகம் செய்து வைத்தான்.

'விபு'வின் விரிவாக்கம் விபாகரனா? அண்ணன் தம்பிக்குப் பொருத்தமாக ஒலி நயத்தோடு பெயர் வைத்திருக்கிறார்கள்.

உட்கார்ந்திருந்த நிலையிலும்கூட, விபாகரனுக்குத் தொப்பை, தொந்தி ஏதும் இல்லை என்று தெளிவாகத் தெரிந்தது. தன் கற்பனை உருவத்தை எண்ணி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, 'வணக்கம்' என்று கை குவித்தாள் அவள்.

''திவாகரன் கவிதை எழுதினால், பெரிய கவிஞர் ஆகிவிடுவார் என்பது என் கருத்து. மெய்யோடு பொய்யையும் கலந்து, அதைப் பல மடங்கு அதிகப்படுத்தி, அணி அலங்காரம் என்கிற பெயரில், பாட்டில் புகுத்துகிறவர்கள் அவர்கள்தானே?'' என்று திவாகரனின் புகழ்ச்சியை இலகுவாக, அதே சமயம் அடக்கத்துடன் மறுத்தாள்.

ஆனால், அவள் பேசும்போதே விபாகரனின் பார்வை தன்னைக் கூறு போடுவதை அவளால் உணர முடிந்தது.

இது புதியவனின் வெறும் எடை போடலா, அல்லது...

லேசாகத் தலையசைத்து அவளது வணக்கத்தை ஏற்றவன், பதில் முகமன் ஏதும் சொல்லாது, ''அணி அலங்காரத்தினுள்ளே ஒளித்து வைப்பது, உயர்வு நவிற்சியாகவும் இருக்கலாம். வஞ்சப் புகழ்ச்சியாகவும் இருக்கலாம். கண்டு கொள்வதுதான் கெட்டிக்காரத் தனம். இப்போது, திவா சொன்னதையே 'உயிரோடு மட்டும்தான் வாழ வைத்திருக்கிறாள். உடம்பைக் குணப்படுத்த ஒன்றுமே செய்யவில்லை..' என்றுகூட



எடுத்துக் கொள்ளலாமே!'' என்று அவளது வார்த்தைகளையே பயன்படுத்தி வேறு, சொன்னான்.

'ஐயையோ... நான் அப்படி யெல்லாம் சொல்லவில்லையப்பா. மெய்யாகவே, வசுமதி இல்லாவிட்டால், நான் இந்த அளவுக்கு மீண்டிருக்க மாட்டேன் என்பதைத்தான் சொன்னேன். நீ அநியாயத்துக்குத் திரித்துப் பேசாதே, விபு!'' என்று, திவாகரன் அவசரமாக மறுத்தது இதமாக இருந்தபோதும், வசுமதிக்கு விஷயம் புரிந்து போயிற்று.

இந்தப் புதியவனுக்கு அவளைப் பிடிக்கவில்லை. அவன் வேண்டும் என்றே அவளை மட்டம் தட்டுகிறான்.

முதல் பார்வையிலேயே பிடிக்காமல் போக வேண்டுமா என்று உள்ளூர ஒரு வருத்தம் தோன்றிய போதும், போகட்டுமே, சம்பளம் கொடுக்கிற முதலாளிக்கு என் வேலை பிடித்திருக்கிறது. அது போதும் என்று எண்ணி, ''ஐயோ, இப்படிச் சொல்லி விட்டீர்களே, திவாகரன். அடுத்து, 'இந்த அளவுக்குத்தான் மீண்டிருக்கிறேன், இதைவிட நன்றாக இந்த நர்ஸ் என்னைக் குணப்படுத்தவில்லை!' என்று நீங்கள் குறைப்படுவதாகச் சொல்லுவாரே!'' என்று சோகம் போலத் திருப்பிக் கொடுத்தாள் வசுமதி.

மெய்யாகவே அப்படிச் சொல்லத்தான் நினைத்திருந்தான் போல, விபாகரனின் முகம் லேசாகக் கன்றியது.

கெட்டிக்காரிதான் என்று எண்ணும்போதே, அவன் முகம் கடுப்படைந்தது.

இல்லாமலா விஷயம் இவ்வளவுக்கு வந்திருக்கிறது?

அண்ணன் கொஞ்சம் ஏமாளி. ஆனால், இந்த விபாகரன் அப்படியல்ல என்று இவளுக்குப் புரிய வைக்க வேண்டும்.

''அண்ணனும் நானும் பேச வேண்டும். அதை அன்னியர் கேட்கத் தேவை இல்லை. நீ போகலாம்,'' என்று உத்தரவிட்டான் விபாகரன்.

குடும்பத்தினர் பேசும்போது, நர்ஸ் உடனிருப்பது சரியில்லைதான். தான் வெளி ஆள் என்பதை எப்போதும் மனதில் வைத்திருந்த வசுமதி, 'அன்னியர்' என்ற வார்த்தைக்காக வருந்தவும் இல்லை. ஆனால், விபாகரன் கட்டளை யிட்ட விதம் அவளை அவமதித்தது.

ஆனால், அதற்காக எதிர்த்து நிற்கவும் முடியாது. என்ன சொல்லி எதிர்ப்பது?

ஆனால், அவன் 'சூ' என்றதும், வாலைச் சுருட்டிக் கொண்டு ஓடினாற்போலத் தெரியக்கூடாது என்று எண்ணி, திவாகரனைப் பார்த்து, ''அடுத்த பயிற்சி எப்போது வைத்துக் கொள்ளலாம்?'' என்று வினவினாள் அவள்.

அப்போதும் அண்ணனை முந்திக் கொண்டு, ''அதை நாங்களே பார்த்துக் கொள்ளுகிறோம். நீ போகும்போது என் அண்ணியை இங்கே வரச் சொல்லிவிடு,'' என்று முடித்துவிட்டு, ''சுபலா எதற்கு...'' என்று அண்ணன் சொன்னதைக் கவனியாதவன் போன்று, அவன் புறம் திரும்பி, ''திவா, விற்பனை இந்த மாதம்...'' என்று தொழிலைப் பற்றி ஏதோ பேசத் தொடங்கினான்.

தொழில் விஷயம் பேசும்போது, அவள் எப்படி அங்கே நிற்க முடியும்?

கெட்டிக்காரன்தான் என்று உள்ளூரப் பாராட்டும் போதே, வசுமதிக்கு வருத்தமாகவும் இருந்தது.

இந்தக் கெட்டிக்காரன் அவளை விரோதியாக எண்ணுகிறானே.





8

விபாகரன் தன்னை விரோதியாக... கெட்டவளாகக் கருதுவது ஏன் என்பது வசுமதிக்கு ஒரு மாதிரிப் புரிந்தது.

அவளை அன்னியளாக ஒதுக்கிவிட்டு, சுபலாவை வரச் சொன்ன பிறகும் புரியாதிருந்தால், அவள் முட்டாள். ஆனால், அந்தக் கணவன், மனைவி சேர்ந்து வாழ்வதுதானே, அவளுக்கும் விருப்பம்!

இதை எடுத்துச் சொன்னால் ஏற்பானா? எப்படியும் அவனிடம் சொல்லித்தான் ஆக வேண்டும். ஏற்றால் சரி, இல்லாவிட்டால்...

கண்ட கற்பனைக் கவலைகளில் மனதைக் கசக்கிக் கொள்ள விருப்பமின்றி, உபயோகமாக ஒரு வேலை செய்யலாம் என்று முடிவு செய்து, வந்தனாவுக்குக் கடிதம் எழுதத் தொடங்கினாள் வசுமதி.

ஆனால், எதையும் எடுத்துச் சொல்ல, அவளுக்கு வாய்ப்புக் கொடுக்கவே, விபாகரனுக்கு மனமிருக்கவில்லை.

தம்பி ஒரு புறமும், மனைவி மறுபுறமுமாகத் திவாகரன் வீட்டினுள் வந்தபோது, பார்க்க நன்றாகத்தான் இருந்தது. திவாகரனின் முகத்தில் சிறு மலர்ச்சி தென்படவும், இவன் வந்தது நல்லதுதானோ என்றுகூட வசுமதி நினைத்தாள்.

''உங்களுக்குச் சொதி செய்யச் சொல்லுகிறேன், விபு,'' என்று சுபலா பின் பக்கம் சென்றாள்.

அடுத்து, திவாகரனின் காலுக்கு ஒத்தடம் கொடுக்க வேண்டும்.

அதுபற்றி ஏற்பாடு செய்வதற்காக வசுமதி கிளம்புமுன், ''மாரியும் சுபலாவுமாக ஒத்தட வேலையைப்

பார்க்கட்டுமே. நீ உன் ஃபைலை எடுத்து வா. பார்க்க வேண்டும்,'' என்றான் விபாகரன், சற்று அழுத்தமான குரலில்.

''நான் பார்த்து விட்டேன், விபு,'' என்று திவாகரன் கூறியதை, அவன் ஒப்புக் கொள்ளவில்லை.

''உனக்கு அப்போது உடம்பு சரியில்லாத நேரம். கவனமாகப் பார்த்திருக்க மாட்டாய்,'' என்றான் தம்பி.

ஃபைலைப் பார்த்துவிட்டுத் திவாகரன் கேட்ட கேள்வி நினைவு வர, வசுமதி அவனைப் பார்த்தாள்.

அவனுக்கும், அதுவே ஞாபகம் வந்திருக்க வேண்டும். முகத்தில் லேசாக அசடு வழிய, ''பார்த்தேன், பார்த்தேன். பார்த்துவிட்டு, வேண்டாத அசட்டுக் கேள்வி எல்லாம் கேட்டேன். நீயும் எதற்கு, விபு? எப்படியும், நம் வந்தனா அனுப்பியவள்,'' என்றான் அண்ணன்.

''அதுதான் பார்க்க வேண்டும். எனக்கு அதில் ஒரு சந்தேகம்...'' என்று விபாகரன் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, வசுமதி தன் ஃபைலை எடுத்து வந்து, அவன் முன் வைத்தாள்.

ஃபைலை எடுத்துப் பார்த்துவிட்டு, ''இதைத்தான் சொன்னேன். இரண்டு வருஷங்கள் வசுமதி வேலை செய்தது, நிவாரணி மருத்துவ மனையில். ஆனால், அங்கிருந்து அனுப்பாமல், வந்தனா என்ன இவளை அனுப்புவது? ஒரு மருத்துவ மனையில் பணிபுரிகிறவளை, அங்கேயே வேலை செய்யும் ஒரு டாக்டர், தனியாரிடம் எப்படி அனுப்ப முடியும்? இதில் ஏதோ தில்லுமுல்லு இருப்பதாகத் தெரியவில்லை?'' என்று அவன் கேட்கவும், வசுமதி திகைத்தாள்.

உடனே சமாளித்துக் கொண்டு, ''வந்தனா எனக்காகச் சிபாரிசு செய்யும்போது, நான் மருத்துவ மனை வேலையை விட்டு விட்டேன்,'' என்றாள்.

''ஏன்?''

''அது என் சொந்த விஷயம். ஆனால், என்னிடம் ஏதாவது தப்பு இருந்தால், வந்தனா எனக்காகச் சிபாரிசு செய்திருக்க மாட்டார்கள். வேண்டுமானால், அவர்களிடமே கேட்டு விடுங்கள். இதோ வந்தனாவின் டெலிஃபோன் எண்,'' என்று ஒரு பக்கத்தைப் பிரித்தவள், ''இல்லையில்லை, இந்த எண் வேண்டாம். பிறகு, இதிலும் ஏதாவது தில்லுமுல்லு இருக்கிறது என்பீர்கள். வந்தனாவின் எண்தான் உங்களிடமே இருக்குமே, பேசித் தெரிந்து கொள்ளுங்கள்,'' என்று படபடத்துவிட்டு, ''என்ன திவாகரன் சார், உங்கள் காலுக்கு ஒத்தடம் கொடுக்கவா, வேண்டாமா?'' என்று மற்றவனிடம் கறாா்க் குரலில் கேட்டாள்.

''அதுதான் சுபலாவும் மாரியும்...'' என்ற தம்பியைக் குறுக்கிட்டு, ''வேண்டாம், நீ போய் எல்லாம் தயார் செய், வசுமதி..'' என்று அவளை அனுப்பினான் திவாகரன்.

செல்லுமுன் விபாகரனைப் பார்த்து, ''என் ஃபைல் பத்திரம், என் சான்றிதழ்கள் எல்லாம் அதில்தான் இருக்கின்றன,'' என்று எச்சரித்துவிட்டுப் போனாள் வசுமதி.

நேர் நடையுடன் அவள் சென்று மறையும் வரை பார்த்திருந்து விட்டு, ''என்னண்ணா நீ? இந்தப் பெண்ணை ரொம்பவும்தான் சார்ந்து இருக்கிறாய். இந்த நர்ஸ் செய்வதை அண்ணி செய்ய மாட்டாளா? அவளுக்குச் செய்யத்தான் ஆசை. என்ன பெரிய கலை! பழகிவிட்டால் தானாக வருகிறது. இதைச் செய், அந்த மாதிரி என்று நீயும் சொல்லிக் கொடுக்கலாமே. துணைக்கு வேண்டுமானால், மாரியை வைத்துக் கொள்வதுதானே,'' என்றான் விபாகரன்.

''பெரிய ஆசைதான்!'' என்றான் திவாகரன் கசப்புடன். ''குணமாகி வருகிறது என்றதும் என்ன உருக்கம்! அன்றைக்குத் தேவைப்பட்ட நேரத்தில், கைவிட்டு ஓடிவிட்டு... அப்படியே போய்த் தொலைந்திருக்கலாம். போய்க் கொள் என்றாலும், பிடிவாதமாக இங்கேயே இருந்து நிம்மதியைக் கெடுத்துக் கொண்டு, ச்சு, விடுடா!'' என்று முடித்தான்.

''அன்றைக்கு அண்ணியும் கலங்கிவிட்டாள், கலக்கத்தில் என்னவென்று புரியாமல் ஏதோ பண்ணிவிட்டாள் என்று, விட்டு விடேன். ஏன், என்னையே எடுத்துக் கொள். அன்று கொண்டுவிட்டது தவிர, இந்த இரண்டு மாதங்களாக, உன்னைப் பார்க்க வரவே இல்லை. இந்த வேலை முடித்து, அந்த வேலை முடித்து என்று இழுத்துக் கொண்டே போய்விட்டது. அதற்காக உன் மேல் பாசம் இல்லை என்று பொருளா?''

''அதுவும், இதுவும் ஒன்றல்ல. அத்தோடு, நீதான் தினமும் இரவில் என்னோடு பேசுகிறாயே. இது... இதெல்லாம் உனக்குப் புரியாது. விட்டுவிடு, விபு. இன்னும் ஒன்று. சும்மா வசுமதியை விரட்டாதே. வசுமதி பற்றி, வந்தனாவிடம் நான் ஏற்கெனவே பேசிவிட்டேன். எனக்கு இவள் செய்வதுதான் பிடிக்கிறது. செய்கிறவளைக் கெடுக்காதே.''

வசுமதியின் தோளைப் பிடித்தபடி, திவாகரன் விந்தி நடந்து செல்வதை, முகத்தில் கடுப்புடன் விபாகர் பார்த்துக் கொண்டு நின்றான் -

''இவள் செய்வதுதான் பிடிக்கிறதா? அதையும் பார்க்கிறேன். இவள் எத்தனை நாள் செய்துவிடப் போகிறாள் என்று. உனக்கு விரைவிலேயே காட்டுகிறேன்,'' என்று உள்ளூரச் சூளுரைத்தவாறு.



இரவு உணவின்போது, விபாகரன் இருந்ததாலோ, என்னவோ, கலகலப்பாக இருந்தது.

''குடும்பத்தினர் சேர்ந்திருக்கிறீர்கள், நான் என் அறையில் சாப்பிட்டுக் கொள்கிறேன்,'' என்று வசுமதி முன் வந்ததைத் தடுத்து, கூடச் சேர்ந்து உணவருந்த வைத்தது அவன்தான்.

ஆனால், பேச்சில் அவள் கலந்து கொள்ள வாய்ப்பே இல்லாமல், உரையாடலைக் கொண்டு செலுத்தியதும் அவனேதான்.

அவன் பேசியதெல்லாம் குடும்பத்து அங்கத்தினர் மூவருக்கு மட்டுமே தெரிந்த மனிதர்களை அல்லது விஷயங்களைப் பற்றி.

ஓரளவு இதை எதிர்பார்த்திருந்த வசுமதி, உணவை மட்டும் ரசித்து, நிதானமாக உண்ணலானாள். அவசரமாகச் சாப்பிட்டு, முதலில் எழுந்து போனால், அநாகரீகம் என்று அதற்கொரு சொட்டை சொல்வானே.

எப்படியும், அவளைப் பொறுத்தவரையில், குடும்பப் பிரச்சினைகளை எல்லாம் அவளிடம் கொட்டிவிட்டு, ''இதற்கு என்ன செய்வது, நர்சம்மா?'' என்று கேளாத வரை மகிழ்ச்சியே.

ஏனெனில், நோய்க்குச் சிகிச்சை செய்வதாலேயே, அவளுக்கு எல்லாமே தெரியும் என்று எண்ணி ஆலோசனை கேட்பவர்கள் நிறைய உண்டு. அந்த மாதிரி வேளைகளில், அவள் ரொம்பவும் திணறிப் போவாள். அவரவர் குணம், குடும்பச் சூழ்நிலை ஒன்றுமே தெரியாமல், என்னவென்று ஆலோசனை கூறுவது?

கவலையோடு கேட்பவர்களிடம், இதெல்லாம் என்னிடம் கேட்காதே என்று முகத்தில் அடித்தாற்போலக் கூறவும் சங்கடமாக இருக்கும். எனவே, 'பொறுத்துப்

பார். எதையும் நாலு விதமாய் நன்றாக யோசித்து முடிவு பண்ணு...' என்று இப்படி ஏதாவது சொல்லி வைப்பாள்.

நல்ல வேளையாக இந்த விபாகரன் அப்படி ஒன்றும் ஆலோசனைக்கு அவளிடம் வந்து நின்று விட மாட்டான்.

இங்கும் பிரச்சினை இல்லாமலில்லை.

ஆளுக்கொரு துருவத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கும் அண்ணன் குடும்பமே போதும்.

ஆனால், வெளியே காட்டிக் கொள்ளாமல், அவனே அதைச் சீர் செய்து விடுவான் என்றுதான் அவளுக்குத் தோன்றியது.

''மிலனில் ஜெயித்ததும், எல்லோருக்கும் நீ ஒரு விருந்து வைத்தாயே, சுபா, நம் தமிழ்நாட்டுக் கலந்த சாதங்களைக் கிண்ணங்களில் வைத்து... விளையாட்டுத் துறை மந்திரி, போர்டு தலைவர், கோச் எல்லோரும் அப்படியே அசந்து போனார்கள்...'' என்று அவன் சொல்ல, 'மலரும் நினைவு'களில் ஈடுபட்டுத் தம்பதியர் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''ம். ஏதோ குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்த மாதிரி இந்தியா வென்றது என்று எதிர்நாட்டு கேப்டன் சொன்னான் என்று, அவனுக்கு மோர் மிளகாயைப் பரிமாறி, அவனைச் செங்குரங்காக்கி, 'ஹாட்! ஹாட்!' என்று அலற வைத்தாளே...'' என்று விபாகர் நினைவூட்டியதில், அந்த ஞாபகத்தில் மற்ற இரு வருக்கும் சிரிப்பே வந்தது.

பரவாயில்லை. இப்படியே அவனே, கணவன் மனை வியைச் சேர்த்து வைத்து விட்டான் என்றால், மிகவும் நல்லது. இருவரும் சேராவிட்டால், அதையும் விபாகரன் அவளது குற்றமாக்கி விடுவான்.



இந்தப் பிரச்சினையையும்கூடத் தீர்த்து வைக்காமல், இத்தனை நாள் என்ன செய்தாய் என்று அவன் அதட்டிக் கேட்பது போன்ற கற்பனை தோன்ற, வசுமதிக்கு வேடிக்கையாக இருந்தது.

ஆனால், வசுமதி முறுவலித்தது, விபாகரனுக்குப் பிடிக்கவில்லை போலும்.

''என்னம்மா நர்ஸ். அப்படியென்ன சந்தோஷம்? எங்கள் நிறுவனத்து ஜாம் அவ்வளவு ருசியாக இருக்கிறதா?'' என்று விசாரித்தான்.

அவ்வளவு நேரம் விபாகரனின் முயற்சியைப் பார்த் துக் கொண்டிருந்ததில், இதுவும் உணவைப் பற்றிய பேச்சு என்பதால், சுபலாவைப் பார்த்து, ''உங்களுக்கு ஜாம் தயாரிக்கும் நிறுவனம் இருக்கிறதா? செய்முறை உங் களுடையதா? நன்றாக இருக்கிறது,'' என்றாள் வசுமதி.

ஆம், இல்லை என்று, சுபலா சாதாரணமாக ஏதாவது பதில் சொல்லியிருக்கலாம்.

அதைவிட்டு, ''ஒன்றிரண்டு என்னதும்தான், ஆனால், இதெல்லாம் தெரிந்து என்ன செய்வது? மனதை மறைத்து நடிக்கத் தெரியவில்லையே!'' என்று தோளைக் குலுக்கினாள் அவள்.

இவள் தன்னைத்தானே கடிகிறாளா, அல்லது கேள்வி கேட்டவளைக் குத்துகிறாளா?

யாரைச் சொல்கிறீர்கள் என்று கேட்பதா வேண்டாமா என்று யோசிக்கும்போதே, திவாகரனின் முகம் கடுப்பதைக் கண்டு, வசுமதி சும்மா இருந்துவிட, அதற்குள் விபாகரும் பேசத் தொடங்கி விட்டான்.

''என்ன அண்ணா, நர்ஸ் வந்து, இங்கேயே வசிக்கத் தொடங்கி இரண்டு மாதங்கள் ஆகப் போகின்றன.

இன்னும் நம் ஜாம் பற்றித் தெரியவே இல்லையே. அப்படியானால் தொழிற்சாலைக்குக் கூட்டிப் போய்க் காட்டவே இல்லை. நாளைக்கு முதல் வேலை அதுதான்,'' என்றான் உரக்க.

ஏதோ செய்தி பறைசாற்றுவது போல.

அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டுச் சிறு முகச் சிணுக்கத்துடன் தட்டில் பார்வையைப் பதித்தாள் சுபலா.

கை கழுவச் செல்லும்போது, அவனோடு வந்து, ''சற்று விழித்திரு. உன் ஃபைலில் கடைசியாகக் கொஞ்சம் பார்க்க வேண்டியிருக்கிறது. பார்த்ததும் கொண்டு வந்து தந்து விடுகிறேன்,'' என்றான் விபாகரன்.

ஏதோ நெருட, ''காலையிலேயே வாங்கிக் கொள் கிறேனே, நீங்கள் நிதானமாகப் பார்த்து முடியுங்கள்,'' என்றாள் வசுமதி.

''ஐயையோ, அவ்வளவு நேரத்தில், அதில் ஏதாவது தொலைந்து போனால், என்ன செய்வது? இன்றே தந்து விடுகிறேன், தாயே!'' என்று அவன் கூறவும், அதற்கு மேல் மறுத்துப் பேசாமல் தலையாட்டிவிட்டுப் படித்துக் கொண்டிருந்தால், பொழுது போய்விடும் ஃபைலில் எதுவும் தொலையாமல் கைக்குக் கிடைப்பதுதான் முக்கியம்.

அப்போதும், வசுமதியின் மனதை ஏதோ உறுத்தியது உண்மை. ஆனால் அவள் இந்த அளவுக்கு எதையும் எதிர்பார்க்கவில்லை.

அந்த விபாகரனும் கூட. நடந்ததை எதிர்பார்க்க வில்லை என்பதும் நிச்சயம்.



## 9

மருத்துவ மனையில் 'நைட் டியூட்டி' பார்த்த பழக்கத்தினால், வசுமதிக்கு இரவில் விழித்திருப்பது கடினமாக இருக்கவில்லை.

ஆனால், நேரம் காலம் பாராமல் புத்தகத்திலேயே ஆழ்ந்து விடுவதும் அவளுக்குப் பழக்கம் அல்ல. அவ்வப்போது கடிகாரத்தைப் பார்த்து, அட்டவணைப் படி நோயாளிகளுக்கு வேண்டியதைச் செய்துவிட்டு வருகிற வழக்கத்தின்படி, அவளது கண்கள் அவ்வப் போது, கடிகாரத்தின் மீது பாய்ந்து மீண்டன.

மணி பதினொன்று ஆனதும் அவளுக்கு எரிச்சல் வந்தது.

இதுவே சென்னை என்றால், இதே பதினோரு மணியை, அப்படி ஒன்றும் அகாலம் என்று சொல்லிவிட முடியாது.

ஆனால், இது மலைப் பிரதேசம். சீக்கிரமே இருட்டத் தொடங்கிவிடும். ஒன்பது மணியளவில், எல்லோரும் ஆழ்துயிலில் மூழ்கிவிடும் இடத்தில், அதே பதினோரு மணி நள்ளிரவு, அல்லவா?

அவளது ஃபைலில், விபாகரன் அப்படி என்ன தவறைக் கண்டிருப்பான்?

ஒருவேளை, 'நிவாரணி' மருத்துவமனையில் அவளைப் பற்றி விசாரித்துக் கொண்டிருக்கிறானோ? அங்கிருந்து அவள் இருக்குமிடம் பெரியப்பாவுக்குத் தெரிந்து போனால், அவளுக்குப் பிரச்சினையாகி விடாதா?

கவலையுடன் எழும்போது இந்த நேரத்தில் மருத்துவ மனை அலுவலகம் பூட்டியிருக்கும். யாரும் எதையும் விசாரித்துவிட முடியாது என்பது வசுமதிக்கு நினைவு வந்தது. எதுவானாலும் முதலில் வந்தனாவிடம் பேசச் சொல்ல வேண்டும். அப்புறம் வந்தனா கவனித்துக் கொள்வார்கள்.

ஒருவாறு நிம்மதியுறுகையில் வெளியே காலடிச் சத்தம் கேட்கவும் அவசரமாகச் சென்று, அறைக் கதவைத் திறந்தாள்.

கதவைத் தட்ட ஓங்கிய கையை இறக்கிக் கொண்டு, அவளைக் கீழ்க் கண்ணால் பார்த்தான், விபாகரன். ''காத்துக் கொண்டே இருந்தாயா? இவ்வளவு நேரம் ஆகிவிட்டதே, வர மாட்டேன் என்று பயந்துவிட்டாயா?''

என்னவோ இடித்தது. அவனது வார்த்தைகளா, அல்லது குரலா? அல்லது இரண்டுமேயா?

எதுவானாலும், அதைக் கண்டு கொள்ளாதது போல ஒதுக்கி, ''அதற்குப் பயப்படுவானேன்? ஆனால், நீங்கள் சொல் மாற மாட்டீர்கள் என்று, திவாகரன் ஒரு தரம் சொல்லியிருக்கிறார். அதனால், கட்டாயம் வருவீர்கள் என்று நினைத்தேன். ஃபைலைக் கொடுங்கள்,'' என்று கையை நீட்டினாள், வசுமதி.

லேசாக முகம் இறுக, ''அது உண்மைதான். நான் கொடுத்த வாக்குத் தவறுவது இல்லை. அதனால்தான், உன்னிடம் சற்றுப் பேச வேண்டியிருக்கிறது. வழியை விடு...'' என்றபடி, அறைக்குள் வருவதற்காக, ஓர் எட்டு முன்னே எடுத்து வைத்தான் விபாகரன்.

மேலே இடித்து விடாதபடி தன்னிச்சையாக ஓரடி பின்னே நகர்ந்த போதும், அவன் உள்ளே வர வழி விடாமல் நின்று, ''நாளைக்குப் பேசலாம், சார். இப்போது நேரமாகி விட்டது,'' என்றாள் அவள்.

''நான் உன்னிடம் தனியாகப் பேச வேண்டும்.''

''அதுவும்தான். நாளைக்குப் பகலில்.''

''சும்மா அளக்காதே. பகலில் உன்னோடு தனியாக எப்படிப் பேச முடியும்? ஒரு முயற்சியாகச் சுபலாவை அனுப்ப எண்ணினேன். நீதான் விடவில்லையே.''

''விடாதது, நான் அல்ல. உங்கள் அண்ணன்தான்,'' என்றாள் அவள் பதிலுக்கு.



அதென்ன, அநியாயமாக, அவளைக் குற்றம் சாட்டுவது?

''ஆமாம். அண்ணன்தான். இன்று போலவே, நாளைக்கும் பேச விட மாட்டான். அதனால்தான் இப்போதே பேசியாக வேண்டும்,'' என்று முரட்டடியாக அறையினுள் புக முனைந்தான் விபாகரன்.

வழி விடாமல் பிடித்துத் தள்ளி... ரசாபாசத்தை விரும்பாமல், சற்று விலகியவள்,

அவனை உட்காரச் சொல்லாமல், கதவருகிலேயே நின்றாள்.

''சொல்வதைச் சீக்கிரமாகச் சொல்லிவிட்டு, உடனே போய்விடுங்கள். யாரும் பார்த்தால் தவறாக எண்ணக் கூடும்.''

''நீயும் திவாவும் பழகுவதைப் பார்த்துத் தப்பாக நினைத்தால், பரவாயில்லையா?''

''அவர் நோயாளி. நான் நர்ஸ். தப்பாக நினைக்க ஒன்றும் கிடையாது.''

''சீட்டாட்டமும், சதுரங்கமும் நர்ஸ் பணியில் சேர்த்தி என்று, எனக்கு இதுவரை தெரியாதே!'' என்று அதிகப்படியாக வியந்தான் விபாகரன்.

குறை கூறலை எதிர்பார்த்து எச்சரிக்கையோடு இருந்ததால், ''நோயாளியின் மன அமைதியும் பணியின் ஒரு பகுதிதான். குறைந்த பட்சமாக மன இறுக்கம் தளர்வதற்கான முயற்சி!'' என்று வசுமதியால் விளக்கம் சொல்ல முடிந்தது.

''வசதி இருந்திருந்தால், மருத்துவம் படித்திருப்பாய் என்று வந்தனா சொன்னாள்,'' என்று வேறு பேசினான் விபாகரன்.

அவன் என்ன சொல்ல வருகிறான் என்று புரியாமல், அவனது பேச்சைக் கவனித்தபடி, பேசாமல் நின்றாள் அவள்.

''அண்ணன் தருகிற சம்பளம் பெரிய தொகைதான். அதைவிட அதிகத் தொகைக்கு ஏற்பாடு செய்கிறேன். இந்த மாதிரித் தனியிடம் இல்லாமல், நகரத்து வாழ்வும் கிடைக்கும். செய்கிறாயா?''

இந்தப் பாதுகாப்பை விட்டு, நகரத்து வாழ்வா? அத்தோடு, பணத்துக்காகவா வந்தனா அவளை இங்கே அனுப்பினாள்? ஒன்றும் தெரியாமல், பெரிதாகச் சொல்ல வந்து விட்டானே.

அவன் பதிலுக்காகக் காத்திருப்பது தெரியவும், ''இல்லை, முடியாது!'' என்றாள் சுருக்கமாக.

இப்படிக் கேட்டானே என்று, உள்ளூர அவளுக்கு வருத்தமாக்வும் இருந்தது. அவளை ஏன் இங்கிருந்து விரட்ட நினைக்கிறான்? என்ன தப்பு செய்தாள் என்று அவளை வெறுக்கிறான்? இத்தனைக்கும் வந்தனாவோடு பேசியும் இருக்கிறான். அவளைக் கேளாமல் எல்லாம் சொல்ல முடியாவிட்டாலும், நல்லவள் என்பதைச் சொல்லி யிருப்பார்களே.

யோசனையோடு பார்த்தால், விபாகரின் முகத்தில் இகழ்ச்சி பரவியிருந்தது தெரிந்தது. அதுவும்தான் ஏன்?

''வசுமதி! பூமி என்ற பொருளுடன் சரியான பெயர்தான்!'' என்றபடி, அவளை ஏற இறங்கப் பார்த்தான் விபாகரன்.

பார்வையோ, குரலோ இப்போதும் பாராட்டவில்லை தான். என்ன காரணம் என்றாலும் அவன் வாயிலிருந்தே வரட்டும் என்று வளர்ப்பினாலும், ஏற்றிருந்த பணியி னாலும் பயன்றிருந்த பொறுமையோடு, அப்படியே நின்றாள் அவள்.



''உனக்குப் பெற்றோர் இல்லை... வளர்த்தவர்களும் அவ்வளவு சரியில்லை என்று வந்தனா சொன்னாள். வளமான பின்புலம் இல்லை... இங்கே இந்த வீடு, சுற்றியுள்ள இடம், செல்வத்தைப் பார்க்கும்போது, தலை சுற்றிப் போவது இயற்கையே.''

அப்போதும் வசுமதி குறுக்கிடவில்லை. தலைசுற்றிப் போய், அவள் என்ன செய்துவிட்டாள் என்று, அவனே சொல்லி முடிக்கட்டும் என்று பார்த்துக் கொண்டு நின்றாள்.

அவள் எதிரே வந்து நின்று கொண்டு, அவன் சொன்னான்.

''விபாகரன் என்றாலும், திவாகரன் என்றாலும் ஒரே அர்த்தம்தான். சூரியன்தான், பூமியின் செழுமைக்குச் சூரியன் தேவைதான். அது ஏன் திவாகரனாகத்தான் இருக்க வேண்டும்? விபாகரனாகவும் இருக்கலாமே. திவா, பாவம்... திருமணம் ஆனவன். அவனை விட்டு விடு. நாம் இருவரும் என்ன ஆட்டம் போட்டாலும் அதனால் எந்தப் பெண்ணின் வாழ்வும் பாதிக்கப்படப் போவதில்லை. நீயும் அழகாகத்தான் இருக்கிறாய். விரும்பும்வரை சேர்ந்திருப்போம். வேண்டிய பணம் தருகிறேன். என்னுடன் வந்துவிடு,'' என்று விஷத்தைக் கக்கினான் விபாகரன்.

அத்தோடு நில்லாமல், கையை நீட்டி, அவளது கன்னத்தையும் தொட்டான்.

அவனது பேச்சிலேயே, வசுமதியுள் தீப்பிடித் திருந்தது.

பேச்சின் தொடர்ச்சி போலக் கன்னத்தைத் தொட்ட தும், அவள் தன்னை மறந்தாள்.

சில அபாயகரமான சூழ்நிலைகளுக்கென்று பயிற்று விக்கப்பட்டிருந்த பாதுகாப்புக் கலை அனிச்சையாய்ச்

செயல்பட வைத்துவிட, வினாடிக்குள் அவனது கையைப் பற்றி முறுக்கி, வேகமாகத் திருப்பித் தள்ளிவிட்டாள்.

ஆனால், அவள் அப்படித் திருப்பித் தள்ளிய வேகத்தில், அவன் சுற்றிக் கொண்டே போய்க் கீழே விழாமல், சுதாரித்து நின்ற விதம், விபாகரனுக்கும் இந்தக் கலையில் பரிச்சயம் உண்டு என்பதைக் காட்டவும், வசுமதி திகைத்தாள்.

பரிச்சயம் மட்டுமின்றித் தேர்ச்சியே இருக்குமானால்...?

எச்சரிக்கையோடு, அவனையே பார்த்தபடி கதவருகே சென்று நின்றாள்.

ஆனால், அவன் முகம் மாறி விட்டிருந்தது. முன்பிருந்த ஏளனம், இகழ்ச்சி எல்லாம் மாறி, வியப்பு மட்டுமே தெரிந்தது.

அவள் கையை முறுக்கிய இடத்தைத் தடவி விட்ட வாறே, ''நான் சொன்னது உனக்குப் பிடிக்கவில்லை என்றால், அதை வாயால் சொல்லியிருக்கலாமே. அதை விட்டு இது ஏன்?'' என்று தன் கையைக் காட்டிக் கேட்டான் விபாகரன்.

கண்ணால் வெட்டி, ''உங்கள் மதிப்புக்குரிய கோரிக்கைக்கு அதற்கேற்ற விதத்தில் மரியாதை செய்ய வேண்டாமா? அத்தோடு, நீங்களும் வாயால் மட்டுமா கேட்டீர்கள்?'' என்று அவள் திருப்பிக் கேட்கவும், தோல்வியை ஒத்துக் கொள்ளும் பாவனையில், கைகளை லேசாக உயர்த்தித் தலையசைத்தான் அவன்.

பின்னே சென்று, சற்றுமுன் அவள் உட்கார்ந்து படித்த நாற்காலியில் அமர்ந்து கொண்டு, அருகில் கிடந்த ஒரு மோடாவை அவள் புறமாக, மெதுவாகத் தள்ளிவிட்டு, ''உட்கார். உன்னிடம் கொஞ்சம் பேச... முன்னைப் போல அல்ல. ஏனெனில், உன்னைப் பற்றிய என் முதல்



அபிப்பிராயம் தவறு என்று எனக்கு நன்கு தெளிவாகி விட்டது. நீ அந்த மாதிரி... அதாவது, பணத்துக்காக மட்டும் எப்படியும் வாழலாம் என்று வாழ்கிற பெண் அல்ல என்பது நிச்சயம். அந்த எண்ணம் கொஞ்சம் இருந்தாலும், யார் என்ன என்பதே இல்லாமல், அப்படி அனிச்சைச் செயலாய், என்னைத் தாக்கியிருக்க முடியாது. அதனால், நியாயமாகவே பேசலாம்,'' என்றான்.

தப்பை ஒத்துக் கொள்கிறான் என்று எண்ணும்போதே, அதற்காக அவன் மன்னிப்புக் கேட்கவில்லை என்பதும் அவளுக்கு நினைவு வந்தது. அத்தோடு அதென்ன பணத்துக்காக மட்டும்? அப்படியானால், வேறு எதற்காக, எப்படியும் வாழ்வாள் என்கிறான்?

கவனம் குறையாமலே, மோடாவை வாயிற்புறமாக இழுத்துப் போட்டு அமர்ந்து, கேள்வியாய் அவனைப் பார்த்தாள், வசுமதி.

''அவ்வளவு கவனம் வேண்டுமா? அதுதான் கராத்தே குங்ஃபூ எல்லாப் போர்க் கலைகளும் கைவசம் வைத்திருக்கிறாயே!'' என்றான் அவன் கிண்டலாக.

''என்ன செய்வது? நர்ஸிங் ஒரு உன்னதமான பணி. அதை அடியோடு மறந்து, தப்புத் தவறாக நடப்பவர் களிடம் தனியாக மாட்டிக் கொண்டால், தப்பித்து வருவதற்காகக் கற்றுக் கொள்ள மருத்துவமனையில் வசதி செய்திருந்தார்கள். கற்றுக் கொண்டேன். சமயத்தில் கை கொடுத்தது. ஆனால், அதெல்லாம் உங்களுக்கும் தெரியும் என்கிறபோது, இந்த எச்சரிக்கையும் அவசியம்தானே!'' என்றாள்.

லேசாகத் தலையசைத்து, ''இல்லை, இனி அதற்கு அவசியம் இராது. இனி விஷயம் பேசுவோமா? கவனி, வசுமதி. திவாகருக்கும் சுபலாவுக்கும் இடையே,

இப்போது ஒன்றும் சரியில்லை என்பது வெளிப்படை. ஆனால், அவர்கள் இருவரும் முன்பு ஒட்டிக் கொண்டு அலைந்ததைப் பார்த்திருந்ததால், என்னால் இதை நம்பக்கூட முடியவில்லை. இந்தப் பிரிவின் காரணம் நீ என்கிறாள் அண்ணி. அண்ணன் மனம் உன்னிடம் படரத் தொடங்கிவிட்டதாக, அவள் சந்தேகப்படுகிறாள். நீயும் அவனோடு நெருங்கிப் பழகுவதாகவும், அதனாலேயே அவளை விட்டு அவன் விலகி விலகிப் போய்க் கொண்டு இருப்பதாகவும் சொல்கிறாள்.''

அதாவது சுபலா அழைத்துத்தான் வந்திருக்கிறான். அவளது வர்ணனை அவன் மனதில் இருந்ததால்தான் ஏளனம், இகழ்ச்சி எல்லாமா? ஆனால், அண்ணி சொல் வேதம் போல அப்படியே எடுத்துக் கொள்ளலாமா? இவளிடம் என்ன என்று கேட்பதில்லையா?

வந்த அன்றே கணவன் மனைவிக்குள் ஏதோ என்று நினைத்தது நினைவு வர, ''இல்லை. சுபலா நினைப்பது தப்பு. நான் வரும்போதே, அவர்களுக்கிடையே வேறு பாட்டைக் கவனித்தேன். அவர்களை இணைப்பதற்கு என்னளவில் சிறுசிறு முயற்சிகள் எப்போதும் செய்து கொண்டுதான் இருக்கிறேன்,'' என்றாள் வசுமதி.

''இதை எப்படி நம்புவது?''

இப்படிக் கேட்டால்? சுபலாவுக்காகப் பரிந்து பேசினேன் என்று சொல்லலாம். பேசியதை எப்படி நிரூபிப்பது? இதற்காகச் சாட்சிக் கூண்டில் இவனுடைய அண்ணனை ஏற்றி விசாரிக்கவா முடியும்?

திவாகரன் சாட்சிக் கூண்டில் நின்று, 'சத்திய சோதனை'யைத் தொட்டு, ''கடவுள் சாட்சியாக...'' என்றுசொல்வது போல எழுந்த கற்பனையில், எரிச்சலை



மீறி அவளுக்குச் சிரிப்பும் வந்தது. ஆனால், கடைசியில் நிலைத்தது, சின்னவன் மீது கொண்ட கோபம்தான்.

இவன் என்ன பெரிய மகாத்மா, அவள் சொல்லைச் சந்தேகிப்பதற்கு?

''முயற்சி செய்தேன். அவ்வளவுதான். நம்புவதும், நம்பாததும் உங்கள் இஷ்டம்!'' என்றாள், அவள் - விட்டேற்றியாக.

''நான் அதைச் சொல்லவில்லை. முயற்சி செய்யும் எண்ணம் உனக்கு இருக்கிறது என்பதை எப்படி நம்புவது என்று கேட்டேன்,'' என்று விளக்கம் கொடுத்தான் விபாகரன்.

விளக்கம் மேலும் குழப்பமாக இருந்தது.

''இதையும்தான் எப்படி நிரூபிக்க வேண்டும் என்கிறீர்கள்? கொதிக்கிற எண்ணெய்க்குள் கையை விட்டா? அல்லது, போண்டா அளவில் ஒரு பெரிய கட்டிக் கற்பூரத்தை ஏற்றிக் கையால் அணைப்பதா? இதுபோல இன்னும் நிறைய உண்டே.''

வசுமதியின் கிண்டல் பேச்சின் குறுக்கே புகுந்து, ''இந்தக் கிறுக்குத்தனம் எதுவும் இங்கே தேவையில்லை. திவாவிடம் உனக்குத் தப்பான பற்றுதல் ஒன்றும் இல்லை என்று, அவனுக்குத் தெளிவாகக் காட்டினால் போதும்,'' என்றான் விபாகரன்.

ஓ! நீ அப்படி வருகிறாயா என்று எண்ணியபடி, ''தப்பான பற்றுதல் ஒன்றும் கிடையாதுதான். ஆனால், வேலையை ராஜினாமா செய்து, இங்கிருந்து வெளி யேறித்தான் அதை நிரூபிப்பது என்றால், அது என்னால் முடியாது,'' என்றாள் அவள் கறாராக.

அவளை ஒரு தரம் ஆழப் பார்த்துவிட்டு, ''கண்ணில் படாமல் நீங்குவது, ஒரு நல்ல வழிதான். ஆனால்,

அதை விடவும் உச்சந் தலையில் அறைந்தாற் போலத் தெளிவாகக் காட்டும் இன்னொரு வழியும் இருக்கிறது.'' என்றான் அவன்.

''என்ன அது?''

''ஒருவனிடம் ஆசை இல்லை என்று வெகு நிச்சயமாகக் காட்டுவதற்கு ஒரே வழி, இன்னொருவனிடம் மனம் சாய்ந்து விட்டது என்று தெரிய வைப்பதுதான். அதைச் செய்தாலே, அண்ணன், அண்ணி இருவரும் புரிந்து கொள்வார்கள்!'' என்றான் அவன்.

''நல்ல யோசனைதான்,'' என்று ஒத்துக் கொண்டாள் வசுமதியும். ''ஆனால், மனம் சாய, அந்த இன்னொருவனுக்கு எங்கே போவது? இங்கே இருப்பவர்களில், மாரி சின்னப் பையன். கோவிந்தனுக்குத் தலை நரைத்து விட்டது. வேறு இல்லையே!'' என்று தோளை அசட்டையாகக் குலுக்கினாள் வசுமதி.

''ஏன்? ஆறடி உயரத்தில், உனக்குப் பொருத்தமான ஆணழகனாக, நான் ஒருவன் இங்கே இல்லையா?'' என்று அழுத்தமான குரலில் கேட்டான் விபாகரன்.

வியப்புடன் அவனை உற்று நோக்கினாள் அவள்.



## 10

மெய்யாகவே, வசுமதிக்கு மிகுந்த வியப்புதான்.

இவனால் எப்படி இப்படிக் கேட்க முடிந்தது?

சற்றுமுன், அவள் மீது அவன் சாட்டாத குற்றம் இல்லை.

கொலைகாரி என்று சொல்லவில்லை. மற்றப்படி, பணத்தாசை பிடித்தவள், ஆள்மயக்கி, குடும்பத்தைக் கலைப்பவள்...

இவ்வளவு சொல்லிவிட்டு, தப்பான உறவுக்கும் அழைத்து விட்டு, என்ன தைரியம் இருந்தால், அவளிடமே இப்படிக் கேட்பான்?

ஆத்திரமாக முறைத்துவிட்டு, ''என்ன உளறல் இது?'' என்றாள் அவள்.

''ஏன்...'' என்று புருவம் சுருக்கி யோசித்துவிட்டு, ''ஓ, சாரி. இது அவர்கள் இருவரையும் நம்ப வைப்பதற்கான நடிப்பு என்று, முதலிலேயே சொல்லியிருக்க வேண்டும். நீ என்னைக் காதலிப்பது போல நடித்தாய் என்று வைத்துக் கொள். சுபலாவுக்கு உன் மீதுள்ள சந்தேகமும் போய்விடும். தன்னை அறியாமல் அண்ணனுக்கு உன்னிடம் சிறு சலனம் ஏற்பட்டிருந்தால், அதுவும் நிச்சயமாக மறைந்து விடும். என்னோடு சுற்றுகிற சாக்கில், வேலை தவிர, மற்ற நேரத்தில் நீ விலகி யிருக்கத் தொடங்கினால், அவர்கள் இருவரும் தானாக நெருங்கத் தொடங்கி விடுவார்கள். அவர்கள் இருவரும் பழைய மாதிரி இழையத் தொடங்கி விட்டால், பிறகு நாமும் இந்த நடிப்பை விட்டு விடலாம். என்ன சொல்லுகிறாய்?'' என்று அபிப்பிராயம் கேட்டான் விபாகரன்.

சுபலா சந்தேகித்த மாதிரித் தப்பான முறையில் அல்ல என்றாலும், மனைவி மீது கொண்டிருந்த கோபத்தில், அவளை விலக்கி நிறுத்துவதற்குத் தன்னை ஒரு கருவியாகத் திவாகரன் பயன்படுத்துகிறானோ என்ற சந்தேகம், வசுமதிக்கும் லேசாக வரத் தொடங்கி யிருந்தது.

மற்றப்படி, இந்தப் பைத்தியக்காரத்தனமான திட்டத்தை இன்னொரு தரம் அவள் நினைத்துக்கூடப் பார்த்திருக்க மாட்டாள்.

அப்போதும், "நடிப்பு என்கிறவரை பெரிய நிம்மதி தான். ஆனால், உங்களை எப்படி நம்புவது?" என்றுதான் அவள் முதலில் கேட்டாள்.

விபாகரனின் முகம் லேசாகக் கன்றியது.

"நான் முதலில் பேசியதை... பேசிய விதத்தைக் குறிப்பிடுகிறாய் என்று தோன்றுகிறது. சத்தியமாய்ச் சொல்லுகிறேன். நம்பு, அப்போது என் அண்ணன், அண்ணியின் குடும்ப வாழ்வைக் காப்பது ஒன்றுதான் என் நோக்கமாக இருந்தது. அதைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்க முயலும் மோசமான குணமுள்ள உன்னை, அவனை விட்டு விலக்குவதாக எண்ணி, இங்கே வந்து... மன்னித்துக் கொள்!" என்று முதல் முறையாக அவளிடம் மன்னிப்புக் கேட்டான் அவன்.

இன்னொன்று நினைவு வர, "பணத்துக்காக மட்டும் எதையும் செய்கிறவள் இல்லை என்று தெரிந்ததாகச் சொன்னீர்கள். வேறு எதற்காக நான் எந்தத் தப்பும் செய்வேன் என்று எண்ணினீர்கள்?" என்று விளக்கம் கேட்டாள், வசுமதி.

"திவா கவர்ச்சி உள்ளவன். பேச்சினாலும், எல்லோரையும் வசீகரித்து விடுவான். ஒரு வேளை, உன்னையும் அவனது வசீகரம் பாதித்து... அதனால்தான் அவனை விட முடியவில்லையோ என்று ஒரு சந்தேகம். அப்படியல்ல என்று நிரூபிப்பதற்கு இது உனக்கு ஓர் அரிய வாய்ப்பு."

"அப்படி உங்களுக்கு என்னை நிரூபித்தாக வேண்டிய கட்டாயம் என்ன?" என்று மிடுக்காகக் கேட்கும் போதே, அவன் தன்னைத் தவறாக எண்ணி விடக்கூடாது என்று தன் மனம் துடிப்பதை உணர்ந்து, வசுமதி உள்ளூரத் திகைத்தாள்.



யாருமே நம்மைத் தப்பாகக் கணித்தால், மனதுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். அதிலும், வரும்போதே தவறான கணிப்புடன் வந்த இவனை மாற்றும் வேகம் அவளுக்கு இருப்பது இயல்புதானே.

கணத் தயக்கத்தின் பின், "எனக்காக எதுவும் இல்லை. ஆனால், அண்ணன் குடும்பம்... ஏதோ ஒரு குடும்பம் கலையாது காக்க முடியுமானால், அதற்கானதைச் செய்யலாமில்லையா?" என்று கொஞ்சம் தணிவாகவே கேட்டான் விபாகரன்.

செய்யலாம்தான்... என்று அது பற்றி யோசித்த வசுமதி, சட்டென உதட்டைப் பிதுக்கினாள். "ஊகூம். உங்கள் ஐடியா சரிவராது."

"ஏன்? ஏன் சரி வராது?"

"நம்ப மாட்டார்கள்."

"எதை நம்ப மாட்டார்கள்?"

"நாம் காதலில் மூ... ழ்குவதைத்தான்."

"ச்சு. தயவு பண்ணிப் புதிர் போடாதே, வசுமதி. ஏன் நம்ப மாட்டார்கள்? நம் இருவருக்கும் வயது, தோற்றம் எதிலுமே பொருந்தவே முடியாததாக, எனக்கு எதுவும் புலப்படவில்லையே.நீ ஏன் வேறு பேசுகிறாய்? அதைச் சொல்லு." என்று பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு கேட்டான் விபாகரன்.

"சொல்லுகிறேன். சொல்லுகிறேன்..." என்று ஓர் ஏளன முறுவலுடன் வசுமதி சொல்லத் தொடங்கினாள். "சொல்லுங்கள், உங்கள் காதல் கதையை எப்படித் தொடங்குவதாக உத்தேசம்? நாம் இருவரும் சேர்ந்து படித்து, சேர்ந்து வளர்ந்து, சேர்ந்து வேலை பார்த்து என்று இந்த வகையில் எதில் இருந்தும் தொடங்க

முடியாது. 'அண்ணலும் நோக்கினான். அவளும் நோக்கினாள்' மாதிரியான காதல் ஒன்றுதான் மீதி. ஆனால், பார்த்த வினாடியில் இருந்து, என்னைக் குறை கூறி, குற்றம் சாட்டி, விரட்டோ விரட்டென்று விரட்டி விட்டு, அந்தக் கதையை எப்படித் தொடங்க முடியும்? நீங்கள் தொடங்கினாலும், உங்கள் அண்ணன், அண்ணி அதை எப்படி நம்புவார்கள்? எக்குத்தப்பாய் இப்படி ஒரு சூழ்நிலை ஏற்படக் கூடும் என்று யோசித்துப் பார்த்து, கொஞ்சமேனும் கொஞ்சம் பண்போடு நடந்திருந்தீர்கள் என்றால், உங்கள் திட்டம் கொஞ்சமேனும் நம்பும்படியாக இருந்திருக்கும், ஆனால் பா...வம்!'' என்று போலியாய் வருத்தப்பட்டாள்.

அவளை வெறித்துப் பார்த்துவிட்டு, ''மற்றது எப்படியோ, வலிக்கக் குட்டுவதற்கு வாய்ப்புக் கிடைத்தால், அதை நீ விடவே மாட்டாய் என்று மட்டும் நன்றாகப் புரிகிறது,'' என்றான் விபாகரன்.

''காரணம் இல்லாமலே குட்டியவர்களைப் பார்த்துப் படித்ததுதான்!'' என்றாள் அவள் பதிலுக்கு.

''ஓகே, ஓகே'' என்று, தோல்வியை ஒத்துக் கொள்கிறவனாக, மீண்டும் கையை உயர்த்தினான் அவன். ''முதலில் நான் தப்புப் பண்ணி விட்டேன். அதை மீண்டும் ஒத்துக் கொண்டு, மறுபடியும் மன்னிப்புக் கேட்கிறேன். போதுமா? இப்போது, நம் திட்டத்துக்கு வருவோம். நாம் இருவரும் உடனே ஒன்றாக இழைந்தால்தானே உண்மை போலத் தோன்றாது? சில தினங்கள் போகட்டும். மெல்லத் தொடங்குவோம். நாம் பேசுகிற, நடந்து கொள்கிற பாணியில், சீக்கிரமே அவர்களை நம்ப வைத்துவிடலாம். இதற்கு என்ன சொல்லுகிறாய்?'' என்று கேட்டான் அவன்.

''இன்னமும் ஒரு கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லவில்லையே.''

''என்ன அது?''

''உங்களை நான் எப்படி நம்புவது?''

கண் இடுங்க, அவளை நோக்கிவிட்டு, ''இந்தக் கேள்விக்காக, உனக்கு ஒரு விளக்கம் நான் ஏற்கெனவே கொடுத்தாயிற்று. இன்னொரு தரம் அதையே சொன்னாலும், வெறும் வாய் வார்த்தைதானே, எப்படி நம்புவது என்று மறுபடி கேட்கப் போகிறாய். ஏதாவது சொல்லித் தட்டிக்கழிப்பதுதான் உன் நோக்கமோ என்று, இப்போது எனக்குச் சந்தேகம் தோன்றுகிறது. ஏற்கெனவே, அதிக ஊதியம் கொடுத்தாலும், இந்த வேலையை விட்டுப் போக மறுத்து விட்டாய். எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால், சுபலாவின் கவலைக்கு அடிப்படை இருக்கத்தான் செய்கிறதோ என்று...'' என்று இழுத்தான் விபாகரன்.

சினமுற்று, ''அதெல்லாம் ஒன்றும் கிடையாது. ஆனால், நீங்கள் நடந்து கொண்ட முறைக்கு ஒழுங்கான எந்தப் பெண்ணுக்கும் உறுத்தல் உண்டாகத்தான் செய்யும். அதைத் தெளிவு படுத்திக் கொள்வதில் என்ன தப்பு?'' என்று கேட்டாள் வசுமதி.

சிறு அமைதியின் பின்,''நான் நடந்து கொண்ட முறை தப்புதான். அதற்கு இயன்றவரை விளக்கமும் கொடுத்து விட்டேன். ஆனால் ஒன்று... நீ உதவி செய்தாலும், செய்யா விட்டாலும் அண்ணன் திருமணத்தை நான் உடைய விடமாட்டேன். அதற்கு உதவுவதும், செய்யாது விடுவதும், உன் இயல்பைப் பொறுத்து நீ எடுக்கும் முடிவுதான்!'' என்று அமர்ந்த குரலில் கூறிவிட்டு, விபாகரன் எழுந்தான்.

''இரவு முழுவதும் யோசித்துப் பார், வசுமதி, குட்நைட்!'' என்று விட்டு, மடமடவென்று வெளியேறிச் சென்று விட்டான்.

கதவை உட்புறமாகத் தாழிட்டு, விளக்கை அணைத்து விட்டுப் படுக்கையில் விழுந்தபோது, ஏதோ பெரிய தொரு போராட்டம் நடத்திக் களைத்த உணர்வு வசுமதிக்கு.

ஆயினும் படுத்ததும் தூங்குகிறவளுக்கு அன்று உறக்கம் வர மறுத்தது.

தூக்கத்தைக் கெடுத்தவன் விபாகரன் என்பதை, அவள் முழு மனதுடன் ஒத்துக் கொள்ள வேண்டி யிருந்தது.

சந்தித்த ஒரே நாளில், அவளை என்னவெல்லாம் சொல்லிவிட்டான்.

கடைசியில், அவனது திட்டத்தில் பங்கேற்காவிட்டால், அவள் சுயநலக்காரி என்பது போலல்லவா ஆக்கி விட்டான்.

ஒருபுறம், முடிந்த அளவு அவனை விட்டுத் தூர விலகி இருப்பது மேல் என்று அவளுக்குத் தோன்றியது. கூடவே, நல்ல காரியமாகத்தானே நடிக்கச் சொல்லுகி றான். அதை மறுக்கலாகாது என்றும் தோன்றியது.

ஒருவாறு வசுமதி துயிலில் ஆழ்ந்தபோது, அவன் கன்னத்தைத் தொட்டதுதான் அவளது கடைசி நினை வாக இருந்தது.

மறுநாள் காலையில் எழுந்து வீட்டைச் சுற்றியுள்ள நடைபாதையில் வழக்கம்போல அவள் நடக்கும்போது, தட்தட்டென்ற காலடிகளுடன் ஜாக் செய்தபடி வந்து, ஒரு ''குட் மார்னிங்''குடன் அவளைத் தாண்டிப்போனான் விபாகரன்.

இதனால்தான், ஊளைச் சதை இல்லாமல் இருக் கிறான் போலும்.

வழக்கமான நடை முடிந்து, திவாகரனைப் போய்ப் பார்த்து, அவனுக்கு வேண்டியதைப் பார்த்துவிட்டு, வழக்கமான பணிகள் அனைத்தையும் செய்து முடித்து, வழக்கமான நேரத்துக்கு உணவறைக்குச் சென்றாள்.

உள்ளூரச் சிறு தயக்கத்துடன்தான், வசுமதி அங்கே சென்றது. இப்படிக் கண்ட கண்ட பேச்சாக இருக்கும் போது, சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடுவதே துன்பமாகி விடுமோ என்ற கலக்கத்தோடு போனால், எல்லோரின் கவனத்தையும் சேர்ந்து இழுத்தது, விபாகரனின் கன்னத்தில் ஒட்டப்பட்டிருந்த பிளாஸ்திரி.

''ஐயையோ, என்ன, விபு? என்ன ஆயிற்று? கன்னத்தில் என்ன?'' என்று சுபலா பதறிக் கேட்ட விதத்தில், எல்லோரும் விபாகரனைப் பார்த்தனர்.

''ஒன்றும் இல்லை,'' என்று, ஓர் அரைச் சிரிப்புடன், தலையைத் திருப்பிக் கொண்டான், விபாகரன்.

சற்றுக் கூர்ந்து நோக்கிவிட்டு, ''என்னை மட்டும் கவனம் கவனம் என்பாய். தினந்தோறும் செய்கிற ஷேவ். ஆனாலும், அதைச் செய்யும்போது, கன்னத்தில் வெட்டி இருக்கிறாய். அப்படித்தானே?'' என்று சரியாக ஊகித்துக் கேட்டான் திவாகரன்.

தம்பி தலையாட்டவும், ''அப்படியென்ன அவசரம்?'' என்று மீண்டும் கேட்டான் அவன்.

''அவசரம் இல்லை, திவா. ஒரு முக்கிய யோசனை. அதில் இங்கே கவனம் கலைந்து, கணத்தில் பிளேடு சரக்கென்று வெட்டி விட்டது. பெரிதாக ஒன்றும் இல்லை,'' என்றான் அவன்.

கவனம் கலையக் காரணம், முந்திய இரவுப் பேச்சோ என்ற யோசனையோடு பார்த்தால், அவன் பார்வை வேகமாக விலகியது.

செய்தொழில் அறிவு தலை தூக்க, ''ஆன்டிசெப்டிக் ஏதாவது போட்டீர்களா?'' என்று கேட்டாள்.

விபாகரன் சிறு வியப்புடன் நோக்க, ''உனக்கும் நர் சாகி விட்டாள்!'' என்று கேலியாகக் கூறினான் திவாகரன்.

''ம். ஆஃப்டர் ஷேவ் லோஷன் போட்டேன்,'' என்று இளையவன் கூற, அதன் பின் பொதுவான சிறு உரையாடல்களோடு, காலை உணவு நடந்தது.

சற்றுப் பொறுத்து, ''அந்த ஜாம் பாட்டிலை என் பக்கம் நகர்த்துங்கள், விபாகரன்,'' என்றாள் வசுமதி.

வாய் பேசாது நகர்த்தி வைத்தான் விபாகரன்.

அதில் கொஞ்சம் ஸ்பூனால் எடுத்து ரொட்டியில் தடவியபடி, ''இது ஸ்ட்ராபெரி ஜாமா? ஐயோ, என்ன ருசி!'' என்று வியந்து, சுபலாவைப் பார்த்து, ''உங்கள் செய்முறை. என் ஊகம் சரிதானா?'' என்று புன்னகை யோடு வினவினாள்.

முகம் பிரகாசமுறத் தலையாட்டினாள், சுபலா.

''பிரமாதம். இந்த மாதிரித் தொழிலிலும் கை கொடுக்கும் மனைவி கிடைத்தது உங்கள் அதிருஷ்டம், திவாகரன்!'' என்று பாராட்டாய்க் கூறிவிட்டு, ''ஆமாம், இந்த ஃபாக்டரி எனக்குக் காட்டப் போவதாகப் பேச்சு வந்ததே, யார் எப்போது அழைத்துப் போகப் போகி றீர்கள்?'' என்று வினவி, விபாகரனை ஏளனமாகப் பார்த் தாள் வசுமதி.

திவாகரனின் முகத்தில் சிறு குழப்பம் பரவுவதைக் கவனியாதது போல, அவனுடைய தம்பியுடனேயே தொடர்ந்து பேசினாள். ''மறந்து விடுவேன் என்று எண்ணிச் சொன்னீர்கள் போல?'' என்று சவால் விடுவது போல வினவினாள். ''மறப்பதா? நானா?'' என்று அலட்சியமாகத் தோளைக் குலுக்கினான். ''அதுவும் ஒன்றுமே தெரியாத மக்... அதாவது, எதுவும் தெரியாதவர்களுக்கு விவரம் தெரிவிப்பது என்றால் எனக்கு ரொம்பப் பிடிக்கும்,'' என்றான் அவன் சீண்டலாக.

''அப்போதுதானே குட்டிக் குட்டிச் சொல்ல முடியும் என்பதாலா? ஆனால், எனக்கு ஒன்றும் தெரியாது என்று உங்களுக்கு என்ன தெரியும்?'' என்று திருப்பிக் கேட் டாள் வசுமதி.

''எவ்வளவு தெரியும் என்பது, தைரியமாக என் னோடு வந்தால், தெரிந்துவிட்டுப் போகிறது,'' என்றான் அவன் பழைய மாதிரியே.

''தைரியத்துக்கு எனக்கு என்ன குறைச்சல்? எப்போது கிளம்ப வேண்டும்?''

''மெய்யாகவே துணிவிருந்தால், இப்போதே,'' என்று எழுந்தான் விபாகரன்.

''எனக்கொன்றும் பயமில்லை. இப்போதே நானும் கிளம்பத் தயார்,'' என்று வசுமதியும் எழுந்து, சுப லாவைப் பார்த்து, ''இன்று ஒரு நாள் உங்கள் கண வருக்குக் களிம்பு தடவி, உருவி விட்டு, ஒத்தடம் கொடுப்பதை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள், சுபலா. எப்படி என்று திவாகரனுக்குத் தெரியும். அவர் சொல்லு வார். என்ன, திவாகர், நான் போய் வரலாமில்லையா? உங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இராதென்று நினைக்கிறேன். இன்றைய தினத்தை, நான் விடுமுறை எடுத்ததாக வைத்துக் கொள்கிறீர்களா, திவாகரன்? ப்ளீஸ். இப்போது போய் வரட்டுமா?'' என்று திவாகர

னிடம் சொல்லிவிட்டு, ''என்ன... கிளம்பலாமா?'' என்று விபாகரனிடம் மிடுக்காக வினவினாள்.

'இந்த வினாடியே!' என்று விரைப்பாக அவன் முன்னே செல்ல, வசுமதியும் அதே விரைப்புடன் உடன் சென்றாள்.

''விபு, வசுமதியோடு தகராறு பண்ணாதே...'' என்ற திவாகரனின் குரல் காற்றோடு தேய்ந்தது.

மற்றவர்களின் காதுக் கெட்டாத தூரம் சென்றதும், ''நன்றாக நடித்தாய். நன்றி!'' என்றவன் சட்டெனச் சிரித்தான்.

''என்ன?''

''உன்னைச் சந்தித்ததில் இருந்து, இன்னும் இருபத்து நாலு மணி நேரம் கழியவில்லை. அதற்குள் உன்னிடமிருந்து ஒரு குங்ஃபூ தாக்குதல், உன்னை நினைத்தபடியே ஷேவ் செய்ததில் கன்னத்தில் ஒரு வெட்டு, இதற்கு மேலும், தைரியமாக உன்னோடு காதல் நாடகம் ஆடக் கிளம்பியிருக்கிறேனே, என்ன கதி ஆகப் போகிறேனோ என்று நினைத்தேனா, சிரிப்பு வந்து விட்டது,'' என்றான் அவன்.

அவளை நினைத்தபடி ஷேவ் செய்ததில், கன்னத்தில் வெட்டிக் கொண்டானா?

அப்படித் தன்னை மறக்கிற அளவுக்கு என்ன நினைத்திருப்பான்?

தெரிந்து கொள்ளத் துடித்தது, வசுமதியின் உள்ளம்.

## 11



கிளம்புகிறவரை, பெரிதாக ஒன்றும் தோன்றா விட்டாலும், விபாகரனோடு காரில் தனியாகச் செல்லும்போது, வசுமதிக்கு ஒரு மாதிரிதான் இருந்தது.

செய்கிற தொழிலின் காரணமாக, நோயாளிகள், அவர்களுடைய உறவினர்கள் என்று பலருடன் பேசிப் பழகியவள்தான். ஆனால், அவர்களை இந்த நேரம் இப்படிப் பேசக் கூடும் என்று அவளால் கணிக்க முடியும். கிட்டத்தட்ட, அவளது கணிப்பு சரியாகவும் இருக்கும்.

ஆனால், பார்த்த முதல் வினாடியில் இருந்து, விபாகரனின் போக்கு அவள் எதிர்பாராததாகவே இருந்தது.

இப்படி ஒருவன், ஏதோ சொன்னான் என்று, அதை நம்பி அவனோடு கிளம்பி விட்டாளே! அதுவும் தனியாக!

தன்னை யறியாமல், கார் கதவை ஒட்டி அமர்ந்தவளை ஒரு தரம் கடைக் கண்ணால் பார்த்துவிட்டு, ''நல்லவேளை, ஜீப்பை எடுத்து வரவில்லை,'' என்றான் அவன்.

அவன் பேசுவதைக் கவனித்து, அவள் திரும்பிப் பார்க்கவும், ''ஜீப் பயணம் மிகவும் ஆபத்தாக முடிந்து விடக் கூடும்!'' என்று சீரியசாகச் சேர்த்துச் சொன்னான்.

இது, ஏதோ அவளுக்கு ஒரு கிண்டலோ, குத்தோ தான் என்று புரிந்து, அவசரமாக அவள் யோசிக்கும் போதே, ''அதில் கதவு கிடையாது. இப்படி ஒட்டில் உட்கார்ந்து, திருப்பத்தில் விழுந்து உருண்டு விட்டால்...? அப்புறம், பொறுக்குவதற்கு எலும்புகூட முழுசாகக் கிடைக்காதே!'' என்று சிரித்தான் அவன்.

என்ன பதில் சொல்வது?

முகம் சூடாவதைத் தடுக்க முயன்றபடி, ''ஓ! ரொம்ப ஓரத்தில் உட்கார்ந்து விட்டேனா? சுற்றிலும் இயற்கை மிகவும் அழகாக இருந்ததா, அதைப் பார்த்து ரசித்தபடி அமர்ந்ததில், இதைக் கவனிக்கவில்லை. அவ்வளவு

தான்...'' என்று சற்றே உள் பக்கம் தள்ளி அமர்ந்தாள் அவள்.

''அப்படியா?'' என்று வியந்தான் விபாகரன். ''அழகை ரசிக்கிறவர்கள் முகமும் ரசிக்கத் தக்கதாக, மலர்ச்சி யோடு இருக்கும் என்று ஞாபகம். உன் முகம் நேர் மாறாக... வேறு மாதிரி இருந்ததே!'' என்று, மேலும் ஆச்சரியப்பட்டான்.

என்ன சொல்கிறான்? அவளைப் பார்க்கச் சகிக்க வில்லை என்கிறானா? என்ன அநியாயம்!

தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள எவ்வளவோ முயன்றும் முடியாமல், ''பார்க்கச் சகிக்கா விட்டால், கண்ணை மூடிக் கொண்டு ஓட்டுங்கள். அப்புறம், கார் எங்காவது உருண்டு விழுந்து, பொறுக்குவதற்கு இருவர் எலும்பும் கிடைக்காமல் போய்விடும்!'' என்று வெடித்து விட்டுத் தலையைத் திருப்பிக் கொண்டாள், வசுமதி.

சற்றுப் பொறுத்து, ஒரு மரத்தடியில் கார் நின்றது.

எதுவானாலும், அவனிடம் இருந்தே வரட்டும் என்று, அசையாமல் அமர்ந்திருந்தாள், வசுமதி.

மெதுவான குரலில், ''சாரி'' என்றான் அவன். ''ஆனால், உனக்கு என் மீது நம்பிக்கை இல்லையே. அதுதான் எனக்கு வருத்தம்!'' என்றான், தொடர்ந்து.

மனம் சற்று லேசான போதும், அதைக் காட்டிக் கொள்ளாமல், ''நிமிஷத்துக்கு ஒரு வேஷம் போடு கிறீர்கள். வித்தியாசமாகப் பேசுகிறீர்கள். எதை, எப்படி முழுமையாக நம்புவது?'' என்று கேட்டுத் தன்னை நியா யப்படுத்தினாள் வசுமதி. ''ஒவ்வொன்றை யோசித்தால், திடுமென மனம் கலைந்து விடுகிறது.'' என்று உண் மையைச் சொன்னாள்.



அவன் ஒரு சிறு பையை எடுத்து, அவள் அருகே வைத்தான். ''உனக்காக எடுத்து வந்தேன்.''

''என்ன இது?''

''பிரித்துப் பார். அவ்வப்போது எதற்கேனும் மனம் கலைந்தாலும், இதை வைத்துக் கொண்டு தைரியமாக இருக்கலாம்!''

பையைத் திறந்து பார்த்தால், ஒரு சிறு துப்பாக்கியும், பட்டன் கத்தி ஒன்றும் இருந்தன.

விழி மலர அவனை நோக்கினாள் வசுமதி.

எல்லாம் அவளுக்கு. அவளது பாதுகாப்புக்கு. அவ ளது கலக்கம் அவனைப் பற்றித்தான். எப்படி நம்புவது என்று அவனிடம்தானே கேட்டாள். தேவைப்பட்டால், அவனுக்கு எதிராகவே பயன்படுத்திக் கொள்ளும்படி, இரு கொடிய ஆயுதங்களை அவனே தந்திருக்கிறான்.

அதாவது, அவனை முழுசாக நம்பலாம் என்று சொல்லாமல் சொல்லுகிறான்.

மனம் லேசாகி விட, ''கத்தி கபடா என்று, இதெல் லாம் எதற்கு?''என்று சிறு முறுவலுடன் இலகுவாகக் கேட்டாள்.

அவனும் முறுவலித்து, ''எல்லாம் உனக்கு ஒரு தைரியத்துக்குத்தான். துப்பாக்கி சுடத் தெரியும் அல் லவா?'' என்று கேட்டான்.

''ஊகூம்...'' என்று மறுப்பாகத் தலையசைத்தாள் அவள்.

''ஏமாற்றி விட்டாயே. கராத்தே, குங்ஃபூ மாதிரி, இதையும் கற்று வைத்திருப்பாய் என்று எண்ணினேனே, அடடா!''

''என்ன செய்வது? எங்கள் மருத்துவ மனையில், துப்பாக்கி சுடுவதை ஓசியில் கற்றுத் தரவில்லையே!'' என்று, அவளும் அவனைப் போலவே இழுத்தாள்.

''போகட்டும்! உனக்கு நானே கற்றுத் தருகிறேன். எதற்கும் இந்த இரண்டும் உன்னிடமே இருக்கட்டும்...''

''துப்பாக்கி வைத்திருக்க லைசன்ஸ் வேண்டும் அல்லவா?''

''என்னிடம் இருக்கிறது. ஏதாவது பிரச்சினை என்றால், நான் எடுத்து வரச் சொன்னதாகச் சொல்லி விடு!''

''சொல்லலா...ம்!'' என்று ஓரக் கண்ணால் அவனைப் பார்த்தாள், அவள்.

''உம்...'' என்று கண்ணில் ஆர்வத்துடன் ஊக்கினான், விபாகரன்.

''இந்தப் பக்கம் துப்பாக்கியை என்னிடம் தந்துவிட்டு, அந்தப் பக்கம் துப்பாக்கியைக் காணோம் என்று, நீங்களே போலீசில் புகார் கொடுக்கமாட்டீர்கள் என்று என்ன நிச்சயம்? பயங்கரவாதி என்று மாட்டி, உள்ளேயே வைத்துவிட இது நல்ல வாய்ப்பு போலத் தோன்றவில்லை?'' என்று அப்பாவியாய்க் கண்ணை விரித்துக் கேட்டாள், வசுமதி.

சட்டெனச் சிரித்துவிட்டு, ''ஆனாலும் மனிதர்களை ரொம்பவே நம்புகிற தன்மை உனக்கு.... பாராட்டுகள்!'' என்றான் விபாகரன்.

''நல்லவர்களை நம்பலாம்...''

காரை மீண்டும் ஓட்டியபடி அவன் சொன்னான். ''மகா பாரதத்தில் தருமரையும் துரியோதனனையும் பற்றிய கதை ஒன்று உண்டு. இருவரின் இயல்பு பற்றி



எடுத்துக் காட்டும் கதை. ஊரைச் சுற்றிப் பார்த்து வருமாறு, தருமரைக் குரு அனுப்பினாராம். திரும்பி வந்து, இந்த ஊரில் எல்லோரும் நல்லவர்களாகவே இருக்கிறார்கள் என்றாராம் தருமர். அப்புறம், குரு துரி யோதனனை அனுப்ப, அவன் திரும்பி வந்து, இந்த ஊர் மக்கள் அத்தனை பேரும் மிகவும் கெட்டவர்கள் என்றா னாம். அதாவது, அவரவர் மனம் எப்படியோ, அது போலத்தான் அடுத்தவரும் இருப்பதாகத் தோன்றுமாம்!''

''அதாவது உங்களை நம்பினால், நான் நல்லவள். நம்பா விட்டால் நான்தான் கெட்டவள். நீங்கள் அல்ல. தலை விழுந்தால், நான் ஜெயிக்கிறேன். பூ விழுந்தால் நீ தோற்கிறாய் என்கிற மாதிரியல்லவோ இருக்கிறது? கடவுளே! மரியாதையாக உங்களை நம்பி விடுகிறேன். ஆளை விடுங்கள்!'' என்று குரலில் நகையுடன் கூறினாள், வசுமதி.

கூடச் சேர்ந்து சிரித்தபடி காரை ஓட்டினான் விபாகரன்.

அன்று விபாகரனோடு வெளியே சென்றதில், அவள் முதலில் அறிந்து கொள்ள விரும்பியதை, கன்னத்தில் வெட்டியபோது அவளைப் பற்றி என்ன நினைத்தான் என்பதை அறிய முடியாவிட்டாலும், வேறுபல விஷயங் களை வசுமதி தெரிந்து கொண்டாள்.

விபாகரனின் குடும்பத்தைப் பற்றி, சுபலாவைப் பற்றி, ஒருவருக்கொருவர் பழகும் விதம் பற்றி...

முதலில் குடும்ப வருமானத்தின் பெரும் பகுதியைத் தரும் ஜாம், சாஸ், பழச்சாறு முதலியவற்றைத் தயாரிக் கும் விதத்தை அவளுக்குக் காட்டினான் விபாகரன்.

போரடிக்கும். ஆனால் சகித்தாக வேண்டும் என்று எண்ணித்தான் வசுமதி சென்றது. ஆனால், அவளுக்கே புரியாத விதமாக அதில் ஈடுபாடு வந்துவிட்டது.

ஒவ்வொரு விதமான பழங்கள் எப்படித் தரம் வாரியாகப் பிரிக்கப்பட்டு, எப்படிச் சுத்திகரிக்கப் படுகின்றன, எப்படி அரைக்கப்பட்டு, வடிகட்டி, கெட்டுப் போகாதிருக்க அதற்கு வேண்டிய சர்க்கரை, உரிய ரசாயனப் பொருட்கள் சேர்த்து, எப்படியெப்படிப் பதம் பார்த்து பாட்டில்களில் அடைக்கிறார்கள் என்று விவரம் சொல்லி, ஒவ்வோர் இடமாக அழைத்துச் சென்று காட்டினான், விபாகரன்.

சுத்தம், தரம் இரண்டுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதைக் கண்டு ஆச்சர்யப்பட்டாள் வசுமதி.

''இல்லாவிட்டால், பொருள் கெட்டுப் போய்விடும், வசுமதி. பொருள் கெடக் கூடாதே என்று பிரிசர்வேடிவ் நிறையக் கலந்தால் ருசி கெட்டுவிடும். இந்த இரண்டில் எது நடந்தாலும், பெயர் கெட்டுத் தொழில் படுத்துவிடும். அதனால்தான் இந்தக் கவனம்!'' என்று விளக்கினான் அவன்.

தயாரிப்பின் ஒவ்வொரு நிலையையும் விபாகரன் எப்படி முழுமையாக நுணுக்கமாக அறிந்து வைத் திருந்தான் என்று கண்டபோது, வசுமதிக்கு அவனிடம் தனி மதிப்பு வந்தது.

அங்கு பணிபுரிந்த அத்தனை பேரும் அவனிடம் காட்டிய மரியாதையும் பிரியமும், அந்த மதிப்பை அதிகப்படுத்தியது.

எல்லோருமே அவனோடு பேச ஆசைப்பட்டார்கள். அல்லது நேருக்கு நேர் பார்த்து, ஒரு புன்னகையேனும் புரிய விரும்பினார்கள் என்பதும் நன்றாகவே தெரிந்தது.

அவனும்... உண்மையில் அதேபோல உணர்ந்தானோ என்னவோ, உணர்வது போலக் காட்டிக் கொண்டான்.

அதுவே அந்தத் தொழிலாளர்களுக்கு மகிழ்ச்சியைத் தர, எல்லோரும், அவன் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்யத் தயாராக நிற்பதைக் காண, அவளுக்கு ஒரு மாதிரி இருந்தது.

இந்தப் புன்னகை நடிப்பாக இருக்கக் கூடாதே என்று உள்ளூர ஒரு தவிப்பு உண்டாயிற்று.

ஆனால், அலுவல் அறைக்குச் சென்று அமர்ந்ததும், ''உன்னை இங்கே அழைத்து வந்ததற்கு இன்னொரு காரணம் இருக்கிறது, வசுமதி,'' என்றான் விபாகரன். ''இங்கே வேலை செய்கிறவர்களுக்கு அரசு விதிப்படி எல்லாச் சுகாதார வசதிகளும் செய்திருக்கிறோம். தொழிலாளிகளுடைய குழந்தைகளுக்காகக் காப்பகம் மாதிரி ஓர் ஏற்பாடு. அதற்கு என்னென்ன தேவை, என்ன மாதிரிப் பார்த்துக் கொள்வது என்றெல்லாம் ஐடியா கொடுத்தாயானால், அதன்படி செய்ய வசதியாக இருக்கும்,'' என்று விவரித்தான்.

''ஐயா வீண் செலவு பண்ணுகிறாரும்மா. சும்மா விட்டாலே, அந்தப் பிள்ளைங்க அதும்பாட்டிலே இருந் துட்டுப் போகும். அதை விட்டு...'' என்று இழுத்தான், அலுவலக எடுபிடி போலத் தோன்றிய ஒருவன்.

''சரி சரி, அங்கே போய்ப் பிள்ளைகளைப் பார்த்துக் கொண்டு, பாருவை எங்களோடு வரத் தயாராக இருக்கச் சொல்லு!'' என்று அவனை அனுப்பிவிட்டு, ''இவர்கள் உழைப்புதான் நமக்கு இவ்வளவு வளத்தையும் தருவது. கொஞ்சமேனும் திருப்பிக் கொடுக்காவிட்டால், மேலும் மேலும் கடன் படுவது போலத்தானே! அதற்காகத்தான் இதுபோலச் சிலது செய்வது. இச்சகமாக இவ்வளவு சொல்கிறானே, ஒரு வசதி செய்து கொடுத்தால், முதல் ஆளாய் அனுபவிப்பது, இந்தச் சோமுதான்...!'' என்று

விபாகரன் விளக்குகையில், மிகவும் ஆறுதலாய் உணர்ந்தாள், வசுமதி.

தொழிலாளர்களிடம் அவன் புன்னகைத்தது நடிப்பில்லை. உண்மையே.

உற்சாகத்துடன், காப்பகத்தில் கவனிக்க வேண்டிய சுத்தம், சுகாதாரம் பற்றித் திட்டமிடலானாள் அவள்.



## 12

காப்பகப் பகுதியைப் பார்க்கவென்று அவனோடு சேர்ந்து செல்லும்போது, அவளுக்குப் பெருமையாக இருந்தது.

அதே சமயம் ஒரொருவரின் பார்வையில் குறுகுறுப்பைக் காணுகையில், அவளுக்குக் கூச்சமாகவும் இருந்தது. அவன் இந்த மாதிரி – எந்தப் பெண்ணையும் கூட்டி வந்தது இல்லை போலும்.

அவன் எதற்காக அழைத்து வந்திருக்கிறான் என்ற உண்மை தெரியாமல், இப்போது இவர்கள் என்னென்ன நினைக்கிறார்களோ என்று, அந்தக் கூச்சத்தில் அவளுக்குப் பேச்சு அடங்கிப் போயிற்று.

விபாகரன் அவளது பேச்சுக் குறைந்ததை மட்டும் கவனித்து, "இப்படி ஒரு மணிக்கு ஒரு முத்து மட்டும் உதிர்த்துக் கொண்டிருந்தால், எல்லோரும் உன்னைப் பேசாமடந்தை என்று நினைத்துவிடப் போகிறார்கள். அதுவும் முக்கியமான விஷயம் நீதான் சொல்ல வேண்டியிருக்கிறது. நினைவிருக்கட்டும்," என்று எச்சரித்தான்.

இயல்பாக நடக்க முயன்று, அவனிடம் வேறு கூறினாள், அவள். "திவாகரனுக்கு மாத்திரை கொடுக்க வேண்டிய நேரம். சீக்கிரமாகத் திரும்பிச் சென்று விடலாம் என்று பார்த்தால், இவ்வளவு நேரம் ஆகிவிட்டதே!" என்றாள், வசுமதி.



"கடமையின் திருஉரு!" என்று கேலி பேசிய போதும், விபாகரன் செல்லை எடுத்து, மாத்திரைகளை மறக்காது சாப்பிடத் திவாகரனுக்கு நினைவு படுத்தினான். பின்னர், "ஓகே, ஓகே, நினைவு வைத்துக் கொள்கிறேன். சரி சரி!" என்றுரைத்துப் பேச்சை முடித்தான்.

அவளைப் பார்த்து, "எல்லாம் என் நேரம். உன் அனிச்சை மலர் போன்ற இதயம் வாடும்படி, நான் முசுட்டுத்தனமாக ஏதேனும் பேசிவிடக் கூடாதாம். எனக்குப் புத்திமதி. இருந்திருந்து, திவா எனக்குப் புத்தி சொல்கிறான். என்ன அநியாயம் பாரேன்!" என்று பெரிதாகக் குறை கூறினான்.

"ஏன், அண்ணன் தம்பிக்குப் புத்தி சொல்வதில் அநியாயம் எங்கே வந்தது? அதுதானே இயல்பு!" என்றாள், வசுமதி.

"எங்கள் வீட்டில் நேர் மாறு. 'மூத்தது மோழை' என்பார்களே, அதைப் போல எனலாம். வாய் திறந்து அப்பாவிடம் ஒன்று கேட்க மாட்டான், திவா. தொழிலில் ஆர்வம் காட்டாமல் அப்பாவிடம் வாங்கிக் கட்டிக் கொண்டதோடு சரி. விளையாட்டில் அவனது திறமையைப் பார்த்துவிட்டு, அப்பாவிடம் சிபாரிசு செய்தது, நான்தான். தாத்தாவே ஒலிம்பிக் வீரர் எனும் போது, திவா அந்த விளையாட்டில் ஈடுபடுவதை யார் தப்புச் சொல்ல முடியும்? அப்புறம், சுபலாவைப் பார்த்து ஆசைப்பட்டு, அப்போதும், அப்பாவிடம் சொல்லச் சொல்லி, என்னிடம்தான் வந்து நின்றான். திருமணத்துக்குப் பிறகுதான் அவன் தன் காரியத்தைத் தானே நிர்வகிக்கத் தொடங்கியதே. அதுகூடச் சுபலாதான் செய்கிறாள் என்பதுதான் எங்கள் கருத்து. நல்லதுதான் என்பார் அப்பா. இருவரில் ஒருவராவது

சூட்டிகையாக இருந்தால் சரி என்பார். இப்போது, அவர்கள் இருவருக்குமே தகராறு என்றால், கஷ்டமாக இருக்கிறது!'' என்றான் அவன்.

தடையற்று அவன் பேசிய விதம் வசுமதிக்கு வியப் பளித்தது. கூடவே, அவன் முதலில் பேசிய விதத்துக்கு மறைமுக விளக்கமாகவும் தோன்றியது.

அதையே ஒரு வாய்ப்பாகக் கருதி, ''திவாகர்... வந்து, உங்கள் அண்ணன் குடும்பம் இங்கே அடிக்கடி வருவார்களோ? அதாவது, அடி படுமுன்பு... இந்தத் தொழிற்சாலைக்கு வருவார்களோ என்று கேட்டேன்!'' என்று விளக்கம் கொடுத்து விசாரித்தாள்.

மறுப்பாய், உதட்டைப் பிதுக்கினான், விபாகரன். ''திவாகருக்கு இந்த ஜாம் குழம்பாகக் கொதிப்பதைப் பார்க்கப் பிடிக்காது. என்னவோ, ரத்தம் மாதிரித் தோன்றுமாம்! அவளுக்கும் அதே எண்ணம்! திருமண மான புதிதில், ஒரே ஒரு தரம் சுபலாவோடு, அவ ளுக்குக் காட்டுவதற்காக இங்கு வந்தான் என்று ஞாபகம்.''

''ஜாம் செய்முறை யெல்லாம் கொடுத்திருக்கிறார் களே, சுபலாவுக்கு ஈடுபாடு இருக்கிறதோ என்று...''

''சுபலா 'கேட்டரிங்' படித்தவள். இதெல்லாம் நிறையத் தெரியும். ஆனால், தொட்டு வேலை செய்யப் பிடிக்காது. நகம் உடைந்து விடுமாம். மிலனில் விளையாடப் போன அண்ணனும் அவளும் சந்தித்தபோது, அவள் அங்கே ஒரு பெரிய உணவு விடுதியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் வரவேற்புப் பகுதியில். உணவு விடுதியில் அவளுடைய தாயாருக்குப் பங்கு கூட இருந்தது. சமையலைப் பார்க்கச் சொல்லித் திட்டு விழுமாம். திவாகர் கூடவே, சுபலா இந்தியாவுக்குக் கிளம்பிய போது, அவள் அம்மாவோடு உறவே முறிந்து விட்டது! ஆனால், அதற்கு முன்பே, தாயுடன் சரியான இணக்கம் கிடையாது என்று சொல்லியிருக்கிறாள்... உன் அம்மா எப்படி? இதே போலப் பிரச்சினைத் தாயார்தானா? அதனால்தான், திரும்பிப் போகப் பிடிக்கவில்லையா?'' என்று சடக்கென, வசுமதியுடைய குடும்பத்துக்குப் பேச்சைத் திருப்பினான் விபாகரன்.

முகம் அறியாத தாயைப் பற்றிய நினைவில், வசுமதி யின் முகம் வாடியது. ''அம்மா இல்லை,'' என்று, அவள் சுருக்கமாகக் கூறவும், அவனது முறுவலும் மறைந்து போயிற்று.

''தெரியாது, கேட்டதற்கு சாரி!'' என்றான், இறங்கிய குரலில்.

நல்லவேளையாக அதற்குள் பிள்ளைகளின் காப்பகம் வந்துவிட, அவளது சொந்த வாழ்வு பற்றிய பேச்சு அத்தோடு நின்றது.

அதற்குப் பிறகு, அந்தப் பாருவுடன்தான், வசுமதி அதிகம் பேசிக் கொண்டிருந்தாள். எழுத்துக் கூட்டிப் படிக்கவே சிரமப்பட்ட போதும், பாரு புத்திசாலியாக இருந்தாள்.

என்னென்ன தேவை என்று அவள் சொல்ல, என்னென்ன மாதிரிச் சுகாதாரம் பேண வேண்டும் என்று வசுமதி கற்றுக் கொடுத்தாள்.

வேறு என்னென்ன செய்ய வேண்டும் என்று எழுதி, விபாகரனிடம் கொடுத்தாள்.

கிளம்பும்போது, ''அம்மாவை அடிக்கடி இட்டாங் கய்யா. இன்னும் நிறைய்யா தெரிஞ்சுக்குவோம்!'' என்றாள், பார்வதி.

''நீங்களும் அப்பப்ப வாங்கய்யா. இல்லாட்டி, இந்த சோமய்யா, ரொம்ப மெரட்டுறாரு.'' என்று, விபாகர னிடம், இன்னொரு கோரிக்கை வைத்தார்கள்.

பொதுவாகத் தலையாட்டி விடை பெற்றுக் கொண்டு கிளம்பினார்கள்.

கார் கிளம்பியதும், ''அம்மாவை அடிக்கடி இட் டாரணுமாமே. கடைசியில், என்னை உனக்குக் காரோட்டி யாக்கி விட்டார்களே!'' என்று விபாகரன் குறைப் பட்டான்.

''உங்களையும்தான் வரச் சொன்னார்கள். ஒன்று கேட்கலாமா?''

''என்ன?''

''திவாகரன் இந்தத் தொழிற்சாலைக்குச் செல்வதே இல்லை என்றீர்கள். நீங்களும் எனக்குத் தெரிய இரண்டு மாதங்கள் வரவே இல்லை. வருமானத்தில் பெரும் பகுதியைத் தருவதை, இப்படி அ... வந்து, இப்படிக் கண்டுகொள்ளாமல் இருக்கலாமா?''என்று தன்னைத் தானே திருத்திக் கொண்டு கேட்டாள் வசுமதி.

அவளது திருத்தத்தைக் கவனியாதவன் போன்று, ''அலட்சியப் படுத்துவது என்று இல்லை, வசுமதி. சென்னைப் பக்கம், இயந்திரத் தயாரிப்புத் தொழிற் சாலை ஒன்று இருக்கிறது. அதைப் பார்க்க வேண்டும். அத்தோடு, இரண்டின் ஏற்றுமதிப் பொறுப்பையும் அங்கிருந்தால்தான் நன்றாகக் கவனிக்க முடியும். அதனால்தான் திவாகரை இங்கே கூட்டி வந்து விட்ட பிறகு வரவே இல்லை. இப்போதுகூட... அப்பாவைக் கெஞ்சிக் கூத்தாடி, அவ்வப்போது எட்டிப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்.''

என்று அவன் முடித்தபோது, ''சுபலாவின் அழைப் புக்காக!'' என்று சேர்த்துச் சொன்னாள் வசுமதி.

''உண்மையே!'' என்று ஒத்துக் கொண்டுவிட்டு, ''அப்புறம்?'' என்று கேட்டான் அவன்.

''என்ன அப்புறம்?''

''இதுவரை என் வீடு, தொழில் பற்றி, எதையுமே மறைக்காமல், உன்னிடம் சொல்லி வந்திருக்கிறேன். நானாகச் சொன்னது போக, நீயாகவும் கேட்டுத் தெரிந்து கொண்டாய். நீ மட்டும் நத்தையாய், உள்ளே சுருட்டிக் கொள்வது என்ன நியாயம்? அவ்விடத்து விவரங் களையும் சொல்லலாம். சொல்ல வேண்டும், இல்லையா?''

என்ன சொல்வது? இளம்பிறையன், அவனது செல் வாக்கு, பெரியப்பாவின் கீழ்த்தரமான வற்புறுத்தல்... அவமானக் கன்றல் இன்றி, எதைச் சொல்ல முடியும்? சொன்னாலும், ஏதோ கட்டுக் கதை மாதிரி இருக்கும்.

தன் காலில் நிற்கக் கூடிய ஒரு நர்ஸ், தற்காத்துக் கொள்ளப் போர்க் கலைகள் பயின்றவள், அவனையே தாக்கியவள், எவனோ ஓர் அயோக்கிய அரசியல் வாதிக்குப் பயந்து, ஓடி வந்து ஒளிந்து வாழ்கிறாள் என்றால் நம்புவானா?

வளர்த்த பெரியம்மாவுக்காக... அவளுடைய நிம்மதிக் காக ஒதுங்கிக் கொண்டாள் என்றால், புரிவதே கஷ்டம்.

அவ்வளவு நேரம் இருந்த மனநிலை மாறி, அவ ளுக்கு உள்ளே வலித்தது.

மறைக்காமல் சொல்கிறானே என்று நினைத்தால், மடக்கிக் கேட்பதற்காக அல்லவா எல்லாம் சொல்லி யிருக்கிறான் என்று எண்ணும்போது, அவளுக்கு இன்ன மும் உறுத்தலாக இருந்தது.

உதட்டைக் கடித்துக் கொண்டு, வசுமதி பேசாதிருக்கவும், விபாகரனின் முகம் லேசாக இறுகியது.

ஓரக் கண்ணால் பார்த்துவிட்டு, ''அம்மா இல்லை என்றதாவது நிஜம்தானா, அல்லது...'' என்று கிண்டலாகக் கேட்டான் அவன்.

''சிறு குழந்தையாக இருக்கும்போது, ஒரு விபத்தில் என்னைத் தப்ப வைத்துவிட்டு, அவர்கள் இருவருமே இறந்து போனார்கள். அதையோ, அதன் பிறகான என் வாழ்வையோ சொல்லிப் பிறரின் அனுதாபம் தேடி எனக்குப் பழக்கம் இல்லை!'' என்றாள், அவள் - வறண்ட குரலில்.

''அண்ணன் அப்படி உருகுகிறானே. உன்னை நோகடித்து விடக் கூடாதாமே!''

குறிப்புணர்ந்து, ''உங்களைப் போலத் தொழில் திறமை இல்லாவிட்டாலும், திவாகரன் குணத்தைப் பார்க்கத் தெரிந்தவரோ, என்னவோ!'' என்றாள் அவள், பதிலுக்கு. ''ஏனெனில், இந்த அளவுகூட, அவரிடம் நான் சொன்னதில்லை!''

தொழிற்சாலைக்குச் செல்லும்போது நிறுத்திய இடத்திலேயே காரை மீண்டும் விபாகரன் நிறுத்தினான்.

''இதோ பார், வசுமதி. இன்று வீட்டிலிருந்து வெளியே வரும்போது, ஒரு திட்டத்தோடுதான் கிளம்பினோம் என்பது நினைவிருக்கிறதா? உன்னிடம் விவரம் கேட்டதற்குக் காரணம் அதுதான். மற்றப்படி, சென்னைக்குப் போய், வந்தனா மூலமாய் அறிந்து கொள்ள முடியாதா? அவள் உனக்காக ரகசியம் காத்தாலும், மருத்துவமனையின் பெயர் இருக்கவே இருக்கிறது. எனவே, உன் கடந்த காலம் என்னால் அறிய முடியாத ரகசியம் இல்லை. இப்போதைக்கு எனக்குத் தெரியாத எதுவும், திவாவுக்குத் தெரிந்திருந்தால், அப்புறம் நாம் என்ன நடித்தும், ஒரு பயனும் இராது அல்லவா? உனக்குப் புரியும் என்று நினைக்கிறேன்,'' என்று விளக்கினான்.

ஏதோ பளு இறங்கிய உணர்வு அவளுக்கு.

''திவாகரும், முதலில் என்னை நம்பாமல்தான் பேசினார். சட்ட ரீதியான குற்றம் எதுவும் செய்திருந்தால், வந்தனா என்னை இங்கே அனுப்பியிருக்க மாட்டார்கள் என்ற பிறகுதான் நம்பினார்,'' என்றாள், வசுமதி.

''பார்த்தாயா, பார்த்தாயா? குணம் பார்ப்பதில் அச்சு அசல் என்னைப் போலவேதான், அண்ணனும் இருந்திருக்கிறான்!'' என்று வெற்றிக் குரலில் விபாகர் சொன்ன தினுசில், அவள் புன்னகை புரிந்தாள்.

''ஆஹா, இது சரி. நாம் ஏற்று நடிக்கும் வேஷத்துக்கு, இனி எப்போதும், குறைந்த பட்சமாக என்னைப் பார்க்கும் போதேனும், இந்தப் புன்னகை உன் முகத்தில் அப்படியே நிலைத்திருக்க வேண்டும்,'' என்றான், அவன்.

''அப்படியானால், அது வாடாதபடி நீங்கள்தான் நடந்து கொள்ள வேண்டும்,'' என்று முடித்தாள், வசுமதி.

''சரியான கறார் கண்ணாத்தா!'' என்றான் அவன்.

சுட்டு விரலை நீட்டி, ''இப்படி, ஆத்தா, போத்தா என்றீர்களானால், திவாகரன் நிச்சயமாக நம்பப் போவது இல்லை,'' என்று எச்சரித்தாள் அவள்.

நீட்டிய விரலைப் பற்றியவன், அடுத்த கையையும் எடுத்துச் சேர்த்துத் திருப்பிப் பார்த்துவிட்டு, ''நீ நகம் வளர்ப்பது இல்லையா, வசு? சுபலா நீள நீளமாய் வளர்த்து வைத்திருப்பாளே!'' என்று வினவினான் விபாகர்.

''என் வேலைக்கு நீள நகம் சரிப்படாது.'' என்றபடி, மெல்லக் கையை இழுத்து விடுவித்துக் கொள்ள முயன்றாள் அவள்.

இலகுவாகப் பற்றியிருப்பது போலத் தோன்றினாலும், பிடி வலுவாக இருப்பதை உணர்ந்தபோது, வசுமதி திகைத்தாள்.

நெஞ்சு படபடக்க, நிமிர்ந்து அவனைப் பார்த்து முறைத்தாள்.



13

அண்ணன், அண்ணி முன்னிலையில் நடிக்க வேண்டும் என்றான். சரி என்று அவளும் ஒத்துக் கொண்டாள். அதற்காக, சுற்று முற்றும் கண்ணுக்கெட்டிய தூரத்துக்கு ஆளே இல்லாத இடத்தில் காரை நிறுத்தி வைத்துக் கொண்டு கையைப் பிடித்தால் எப்படி?

அதுவும் விடுவித்துக் கொள்ள அவள் முயன்ற பிறகும், விடாதிருப்பது என்ன நாகரீகம்?

ஆத்திரத்துடன் முறைத்தால், அதற்கும் உதட்டைப் பிதுக்கினான் விபாகரன்.

''ஊகூம். இந்த முறைப்பெல்லாம் சரிப்படாது, தாயே! இன்னும் என்னென்ன இருக்கிறது. காதல் நடிப்பென்றால் என்னவென்று நினைத்தாய்? அதிலும் திவாகரும் சுபலாவும் வெளிநாட்டு நாகரீகம் தெரிந்தவர்கள். அவர்கள் நம்பும்படி நடிப்பது என்றால், சும்மா இல்லை, அம்மா! செய்கையில் காட்ட வேண்டும்.''

சிறைப் பட்டாற் போலச் செயலற்று இருந்த நிலையில் உள்ளூரத் தலை தூக்கிய சினத்தை அடக்கிக் கொண்டு, ''என்னதான் செய்ய வேண்டும் என்கிறீர்கள்?'' என்று கேட்டாள் வசுமதி.

''என்னவெல்லாம் என்று கேள். முதலில் இப்படித் தொட்டால் சுருங்கி மாதிரி இழுத்துக் கொண்டு, ஒதுங்கக் கூடாது, அப்புறம்...'' என்று, நமுட்டுச் சிரிப்புடன் இழுத்தான் அவன்.

இவனுக்குக் கிண்டலாக இருக்கிறதா? கையை வேறு விடாமல் பிடித்து வைத்துக் கொண்டு, அது வேறு குறுகுறு என்று...

''அப்புறம் என்னென்ன? எல்லாவற்றையும் ஒரே தடவையாகச் சொல்லி முடித்து விடுங்கள்.''

''நீ ஆங்கிலப் படங்கள் பார்த்ததில்லை? பார்த்ததும் ஓடிவந்து, கட்டிப் பிடிக்க வேண்டும்! கன்னத்தில்...''

''கையை விட்டால், கன்னத்தில் தர வேண்டியதை, இப்போதே கூடத் தருவேன்!'' என்றாள் குறுக்கிட்டு.

''ம்கூம்... காதலில் தருவதற்குக் கை எதற்கு? இந்த அழகான உதடுகளால்...''

கொஞ்சம்கூடத் தயங்காமல் என்னவெல்லாம் பேசுகிறான்!

தன்னை மீறிக் கன்னங்கள் சிவக்க, முடிந்த அளவு தலையைத் திருப்பி, அதை மறைக்க முயன்றாள் அவள்.

வியப்புடன் நோக்கி விசிலடித்தான், விபாகர்.

அவனாகவே அவளது கையை விடுவித்துவிட்டு, ''என்ன வசுமதி, நீ ஒரு நர்ஸ். ஆண், பெண் பேதமின்றி, உச்சி முதல் உள்ளங்கால் வரை தொட்டுச் சிகிச்சை தருகிறவள். இதற்குப் போய் முகம் சிவக்கிறாயே!'' என்று ஆச்சரியப்பட்டான்.

ஒரு பெரிய மூச்செடுத்துத் தன்னைச் சமனப்படுத்திக் கொண்டு, அவள் சொன்னாள். ''நீங்கள் சொன்ன மாதிரி, ஆண், பெண் பேதமின்றி, உச்சி முதல் உள்ளங்கால் வரை தொட்டுச் சிகிச்சை தருகிறவள்தான், நான். ஆனால், சிகிச்சை தரத்தான், நான் தொடுவது! தொடுகிறபோது, அந்த உடம்பு அனுபவிக்கும் வேதனையை, துன்பத்தை நீக்குவது மட்டும்தான் மனதில் இருக்கும். மற்றப்படி ஆண், பெண் பேதமோ, வயதானவர், இளைஞர் என்கிற வேறு பாடோ நினைவில் இருப்பதில்லை,''என்றாள் அவள்.

''நான் அதைச் சொல்லவில்லை, வசு. மனித உடம்பை நன்றாக அறிந்த பிறகும், இது போல வெட்கப்படுவது ஆச்சரியமாக இருந்தது. ஆனால்...''

''அதாவது, மருத்துவத் துறையில் உள்ளவர்களுக்குக் காதல் தொடர்பான உணர்ச்சிகளே இராது என்பது போல அல்லவா ஆகிறது? அப்படியானால், துறவிகள் மட்டும்தானே இதில் ஈடுபட முடியும்? உங்கள் வந்தனாவுக்கே இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். அருமையான கணவரும் கூட. அதை மறந்து பேசு கிறீர்களே!''

''வேண்டும் என்றே புரிந்து கொள்ள மறுக்கிறாய் என்று தோன்றுகிறது. இரண்டும் இரண்டும் நாலு என்பதுபோல, மனித உடம்பின் உணர்ச்சிகள், செயல் பாடு பற்றிய தெளிவான கணக்கீடு உங்களுக்கெல்லாம் இருக்கும் என்று எண்ணினேன். எனவே, அது பற்றிப் பேசும்போது, வெட்கப்படுவாய் என்று நான் எதிர் பார்க்கவில்லை. ஆனால், நோயாளியின் உடம்பு வேறு, மற்றவர்களை வேறாய் நினைக்கக் கூடும் என்று தெரியாது. ஆனால், இது நம் நடிப்பைப் பாதிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதுதான் இப்போது முக்கியம். சொன்னேனில்லையா, திவாவும், சுபலாவும் மேல்நாட்டு நாகரீகம் பழகியவர்கள். இதை நீ எப்படி ஏற்பாயோ, தெரியவில்லை. அவர்கள் இருவரும் திருமணத்துக்கு முன்பே ஒன்றாக வசித்தவர்களும்கூட! அவர்களுக்குக் காதல் என்பதன் அர்த்தமே வேறு. நீ இப்படி நான் தொடுமுன் அனிச்சையாகச் செயல்பட்டுத் தாக்குவதும், நத்தையாகச் சுருட்டிக் கொள்வதுமாக இருந்தால், கொஞ்சமும் சரிப்படாது. நினைவிருக் கட்டும்,'' என்று எச்சரித்தான் விபாகரன்.

சற்று யோசித்துவிட்டுச் சம்மதமாய்த் தலையாட்டி னாள், வசுமதி.

அவன் சொல்வதும் சரிதானே? சுபலாவின் சந்தேகத் துக்கு அடிப்படை இருக்கிறதோ, இல்லையோ, அவளது சந்தேகத்தைத் தீர்த்தாக வேண்டும். அதற்கு இந்த நாடகத்தை, அவள் நம்பும்படியாக நடத்த வேண்டியது முக்கியமே.

வந்தனா எழுதியிருப்பதைப் பார்த்தால், இதை யெல்லாம் உதறிவிட்டுப் போவதும், இப்போதைக்கு இயலாத காரியமாகத் தெரிகிறதே!

ஒப்புதலைத் தந்துவிட்டு, ''ஆனால், நீங்களும் கண் ணியமாக நடந்து கொள்ள வேண்டும்!'' என்றாள் அவள்.

வீட்டை அடைந்தபோது, சுபலாவைக் கண்ணிலேயே காணோம்.

விசாரித்தபோது, அவள் உடற் பயிற்சி அறையில், ஒரே இடத்தில் நிற்கிற சைக்கிள் ஓட்டிக் கொண்டு இருப்பதாக, மாரி தெரிவித்தான்.

உடற்பயிற்சி செய்யும் அலிக்ரோ சைக்கிள். எந்தக் கோபத்தைக் கரைக்க, உடல் ஓய வைக்கும் இந்தப் பயிற்சி?

அத்தோடு, பெரிய சின்னய்யாவுக்குக் களிம்பு தடவி உருவி விட்டதும், தானே என்று அவன் சொன்னதுதான் வெளியே போய்வந்த இருவருக்கும் வருத்தத்தை அளித்தது.

என்னடா இது... என்பதுபோல நின்றவளிடம் வந்து, ''எதிலுமே ஒரே தடவையில் வெற்றி கிட்டி விடாது. தொடர்ந்து முயற்சிப்போம். கவலைப்படாதே!'' என்று விட்டுப் போனான் விபாகரன்.

திவாகரன் சற்று அமைதியாக இருந்த போதும், அதைக் கவனியாதது போல, தொழிற்சாலை, அதன் காப்பகம் பற்றி வசுமதி நிறையச் சொன்னாள்.

காப்பகம் என்ற சொல், திவாகரனின் மௌனத்தைக் கலைக்க, தந்தை காலத்திலிருந்து தொழிலாளர்களுக்கு நிறுவனம் செய்து வரும் நன்மைகள் பற்றி, அவனும் கூறினான். வீண் செலவாக எண்ணாமல், அவனுக்கும் அதில் மகிழ்ச்சியே என்று தெரிந்தது.

தந்தை காலத்தில் இருந்தே நல்ல முதலாளிகளாக இருந்திருக்கிறார்கள் என்று மகிழ்ச்சியோடு எண்ணி னாள், வசுமதி.

ஆனால், அன்றிரவில், தூங்குமுன் வசுமதியின் நினைவில் இருந்து, பட்டாம் பூச்சியாக அவளது நெஞ் சுக்குள் படபடத்தது, விபாகர் அவளை 'வசு' என்று அழைத்ததுதான். போடும் வேஷத்துக்கு ஏற்ப, அவன் இப்படி அழைத்திருக்கலாம்!

ஆனாலும், என்னவோ, அவன் அப்படி அழைத்தது, மிகவும் இயல்பாகப் பொருந்திப் போயிற்று. பேச்சு வாக்கில், அவன் 'வசு' என்றபோது, அவள் அதைத் தனியாகக் கவனிக்கவே இல்லை.



இப்போது, தனியே இருந்து, அன்றைய நிகழ்வு களைத் திருப்பிப் பார்க்கும்போதுதானே, அது நினைவே வருகிறது.

இப்போது, அவள் அவனை என்ன சொல்லிக் கூப் பிடுவது? அவன் அண்ணன் சொல்வதுபோல, விபு என்றா? விபா? விபாகர்?

அவனிடம் கேட்பதா? இல்லை. அவனே சொல்லு வான். தன் காரியத்தை எப்படியாவது சாதித்துக் கொள் ளத்தான் அவனுக்கு நன்றாகவே தெரிகிறதே! இதையும் அவனே பார்த்துக் கொள்ளுவான்.

மறுநாளும், விபாகரன் வசுமதியை வெளியே அழைத் துப் போனான். ''நம் தொழிற்சாலையில் குழந்தைகள் காப்பகம் பற்றி இன்னும் சற்றுப் பேச வேண்டி யிருக்கிறது. அதை முடித்துவிட்டு, அப்படியே வசுவுக்கு இந்தப் பக்கம் நல்ல இயற்கைக் காட்சிகள் கொஞ்சம் சுற்றிக் காட்டிவிட்டு வருகிறேன். வசு, இங்கே அண்ண னுக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று அண்ணி யிடம் சொல்லிவிட்டு, நீ கிளம்பு. போ, சீக்கிரம்,'' என்று அவளை விரட்டியடித்துக் கிளம்ப வைத்தான்.

சுபலாவிடம் சொல்லிவிட்டு, அவள் திரும்பி வந்த துமே, ''தொழிற்சாலையில் இஞ்சினீயர் வந்து காத்திருப் பார். வா, வா,'' என்று நிற்க விடாமல், அவளது கையைப் பிடித்து இழுத்தபடி சென்றும் விட்டான்.

கார் கிளம்பியதும், ''திவாகரனுக்குப் பிடிக்கவில்லை என்று நினைக்கிறேன். ஒரு வார்த்தை கூடப் பேசாமல், வாயை இறுக மூடிக் கொண்டு உட்கார்ந்து இருக்கிறார்,'' என்றாள் வசுமதி.

''ரொம்பவும் நல்லது. அவனால் வாயை மூடிக் கொண்டு ரொம்ப நாள் இருக்க முடியாது. என்ன என்று கேட்கும்போது, நல்லதோர் அதிர்ச்சி வைத்தியம் பண்ணலாம். அண்ணியிடத்து நிலைமை என்ன?'' என்று விசாரித்தான் விபாகரன்.

''காது கேட்டது போலவே, சுபலா காட்டிக் கொள்ள வில்லை. நேற்று என்னமோ நடந்திருக்கிறது!'' என்றாள், வசுமதி, கவலையுடன்.

''வேறென்ன? அண்ணன் அவளை உள்ளேயே விடவில்லை. கீழே அவனது பகுதி தெரியும் அல்லவா? உதவிக்கு மாரியைக் கூட வைத்துக் கொண்டு, அவ னையே செய்யச் சொன்னானாம். ஏதாவது உதவி செய்யட்டுமா என்று சுபலா கேட்டதற்கு, கண்ணில் படாமல் போய்த் தொலைந்தால் போதும் என்றானாம், திவா!''

''ஐயோ!''

''அண்ணனுக்குள் இருக்கும் ஏமாற்றத்தை, ஒரு வடிகாலாகக் கருதி உன்னிடம் கொட்டியிருக்கிறான். 'ராபர்ட் புரூசும் சிலந்திப் பூச்சியும்' கதையை நினைவு படுத்திக் கொண்டு, அடுத்த முயற்சி செய்,' என்று சொல்லி, அவளைத் தேற்றினேன்!'' என்றான் அவன்.

''சுபலா பாவம், விபாகர். இப்படி வெறுப்பாகக் கணவன் விரட்டும்போது, கேட்க எவ்வளவு கஷ்டமாக இருந்திருக்கும். அவளிடம் திவாகர் ஏன் இவ்வளவு கடுமையாகப் பேசுகிறார்?'' என்று வருத்தத்துடன் இயம்பினாள் வசுமதி.

''ரொம்பவும் வருத்தப்பட்டு விடாதே! தன்னை விரட்டுவதன் அடிப்படைக் காரணம், திவாகருக்கு உன் மீது உண்டாகிவிட்ட மையல் என்கிறாள், சுபலா. இரண்டு பேருக்குமே, மருந்தை இரு மடங்காக ஆக்க வேண்டும் என்று தோன்றுகிறது!'' என்றான் அவன்.

என்ன மருந்து என்று கேளாமல், வெளியே பார்த்தாள், வசுமதி.

அவளுக்கு அது தெரியாத விஷயம் இல்லையே!

திடுமென அவளுக்கு ஒன்று தோன்ற, விபாகரைப் பார்த்து, ''இதில், இன்னொரு விஷயம் யோசித்தீர்களா, விபாகர்? ஒழுங்காக வேலை செய்யவில்லையென்று உங்கள் அண்ணன் என்னை வேலையை விட்டு நீக்கி விட்டால்? ஒரு வகையில் உங்கள் நோக்கம் நிறைவேற, அதுவே நன்றாக உதவக் கூடும். ஆனால், அப்புறம் என் கதி என்ன?'' என்று கலக்கத்துடன் வினவினாள்.

''ஒன்றும் ஆகாது. என்னோடு நெருங்கிப் பழகுவதற் காக, உன்னை வேலையிலிருந்து நீக்க... நீக்குவதாக வாய் விட்டுச் சொல்லவே திவாகரால் முடியாது,'' என்ற வன், அத்தோடு நிறுத்தாமல், ''அப்படியே விலக்கினா லும், வேறு வேலைக்கு நான் ஏற்பாடு செய்வேன்!'' என்று உறுதியளித்தான்.

ஒருவேளை இப்படி நடக்க வேண்டும் என்பதுதான், இவனது நோக்கமாக இருக்குமோ?

அவளாக விலக மறுத்தால், கண்ட கதை சொல்லி, இப்படி நாடகமாட வைத்து, சரியாக வேலை செய்ய விடாமல் தடுத்து, திவாகரனையே டிஸ்மிஸ் செய்ய வைப்பதுதான் திட்டமா?

அவன் டிஸ்மிஸ் செய்து விட்டால், இங்கிருந்து, வசுமதி வெளியேறித்தானே ஆக வேண்டும்? போக மாட்டேன் என்று எப்படி உட்கார்ந்து இருக்க முடியும்?

எப்படி ஏமாந்து போனாள்!



# 14

ஏமாந்து விட்டதாக எண்ணியதுமே, எப்படி ஏமாற்றி விட்டான் என்று விபாகரன் மேல் வசுமதிக்குக் கோபம் பொங்கியது.

ஆத்திரத்துடன் அவன் புறம் திரும்பி, ''வேறு வேலைக்கு நீங்கள் என்ன ஏற்பாடு செய்வது? எந்த இடத்திலும், வேலை கிடைக்காமல் இந்த வேலையைப் பற்றிக் கொண்டு தொங்குகிறேன் என்று எண்ணமா? நான் இங்கேதான் இருப்பேன். அதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் வரக்கூடாது. அப்படி ஏதாவது வந்தால்... வந்தால், நான் திவாகரனிடம் எல்லாவற்றையும் சொல்லிவிடுவேன்!'' என்று படபடத்தாள் அவள்.

சிறு அமைதியின் பின், ''இதுதான் கொஞ்சம் குழப்பம் தருவதாக இருக்கிறது. இந்த இடத்தில் அப்படி என்ன தேன் வடிகிறது? இதை யோசிக்கும்போதுதான், சுபலா கூறுவதில் உண்மை இருக்குமோ என்று சந்தேகமும் தோன்றுகிறது!'' என்றான் விபாகரன் சிந்தனைக் குரலில்.

''உண்மையாகவே ஐயம் தெளிய விரும்பினால், அதை இலகுவாகத் தெளிவித்தும் கொள்ளலாமே!'' என்றாள் வசுமதி ஏளனமாக. ''என்ன பெரிய மலையைக் கெல்லுகிற காரியம்? இங்கிருந்து வந்தனாவுக்கு ஒரு ஃபோன். அவர்களிடம் கேட்டால், எனக்கு இங்கே தேன் வடிகிறதா, அன்றி வேறு காரணமாக இருக்கின்றேனா என்று சொல்லிவிட்டுப் போகிறார்கள். வந்தனா உங்கள் உறவினர்தானே? அவர்களிடம் உங்களுக்கு நம்பிக்கை உண்டுதானே? அல்லது, அவர்களும் என்னோடு சதியில் கூட்டுச் சேர்ந்து விட்டதாக, அவர்களிடமும் சந்தேகம் வந்து விட்டதா?'' என்று தொடர்ந்து பொரிந்து கொட்டினாள்.

''அப்...பா, என்ன கோபம்! அனல் அடிக்கிறதே!'' என்றான் அவன், இலகுவாக.

கூடவே, ''வந்தனாவிடம் கேட்கவில்லை என்று உனக்கு என்ன நிச்சயம்?'' என்று அவனே தொடர்ந்து கேட்கவும், வசுமதி திகைத்தாள்.

திகைப்போடு, சிறு ஏமாற்றமும்!

அவளிடம் நம்பிக்கை இல்லை. வந்தனாவைத் துளைத்தெடுத்திருக்கிறான்.

''வந்தனாவிடம் பேசிய பிறகும், என்னை நம்பத் தோன்றவில்லையா?'' என்று வருத்தத்துடன் வினவினாள்.

''வந்தனாவிடம் பேசும்போது, உயிரைக்கூட, நம்பித் தரலாம் போல இருக்கிறது. ஆனால் அதற்கு மேல் எந்த விவரமும் தர மறுப்பதும், சிற்சில பேச்சுகளும் அவ்வப்போது மனதைக் குழப்பி விடுகின்றன. உனக்கு அப்படி என்ன பிரச்சினை, வசுமதி? சொல்லும் அளவுக்கு உனக்கு நம்பிக்கை இல்லையா?'' என்று கேட்டான், விபாகரன்.

எல்லாவற்றையும் அவனிடம் கொட்டி விடலாம் என்றுகூட, வசுமதிக்கு ஒரு கணம் தோன்றி விட்டது.

ஆனால்... பெரியப்பா, இளம்பிறையன் இருவரையும் சேர்த்து நினைக்கும்போது, இவ்வளவு தூரத்திலும், அவள் மனம் கலங்கியது.

நன்மை செய்வதாக எண்ணியே, இவன் ஏதாவது நடவடிக்கை எடுக்கப் போக, அவர்களுக்கு இவள் இங்கிருப்பது தெரிந்து விட்டால்? தெரிந்து போய், நெம்புகோலாகச் சிற்றம்பலம் கோதையைப் பயன்படுத்தத் தொடங்கினால், என்ன ஆகும் என்று சொல்ல இயலாது.

அத்தோடு, அந்த அரசியல்வாதியைப் பற்றி நினைக்கக்கூட, அவளுக்கு உள்ளூர அச்சம்தான்.

எனவே, ''வந்தனாவின் சிபாரிசு இருக்கும்போதே, உங்கள் நம்பிக்கை அவ்வப்போது கலைந்துவிடுகிறது. நான்... எனக்கு...'' என்று அவள் தயங்கியபோது, இடையில் குறுக்கிட்டு, ''அந்த வந்தனாவேதான், எங்களை நம்பி உன்னை இங்கே அனுப்பி வைத்தாள் என்பது நினைவிருக்கட்டும்,'' என்றான் அவன்.

அனுப்பியது, அவன் அண்ணனை நம்பி அல்லவா என்று ஏனோ தோன்றியது, அவளுக்கு.

ஆனால், அதைச் சொல்ல முடியாமல், ''நான் உங்களைச் சந்தித்து, இரண்டு நாட்கள்தானே ஆகின்றன? அதற்குள் எல்லாவற்றையும் எப்படிச் சொல்ல முடியும்?'' என்று அவள் தயக்கத்துடனேயே கூற, தோளைக் குலுக்கி விட்டுப் பேசாதிருந்தான் அவன்.

ஒரு பேச்சுக்காகச் சொன்னபோதும், உண்மையிலேயே விபாகரனைச் சந்தித்து இரண்டு நாட்கள்தான் ஆகின்றன என்பதை உள்ளூர ஒரு திகைப்புடன் உணர்ந்தாள் வசுமதி.

அன்றைக்குப் புத்திசாலித்தனமாகத் திவாகருக்குக் கொடுக்க வேண்டிய மாத்திரை, மருந்துகளைச் சுபலாவிடமே வைத்துவிட்டு, வசுமதி வந்திருந்தாள்.

குணமாகத் தொடங்கியதில் இருந்து, தன் உடம்பு பற்றித் திவாகரன் கவனத்தோடு இருந்ததால், இந்த மாத்திரைகளை அவளிடம் வாங்கிச் சாப்பிடுவான் என்ற எண்ணம் அவளுக்கு.

அதை விபாகரிடம் அவள் சொன்னபோது, அவனும் பாராட்டினான்.

தொடர்ந்து, இருவருமே, அவரவரது தொழில் வாழ்வில் நடந்த சுவையான பல சம்பவங்களை ஒருவருக்கு ஒருவர் விவரிக்க, இருவருக்குமே சிரிப்பு வந்தது.

காப்பக வேலையைத் தொடங்கிவிட்டு, இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்துவிட்டு, கலகலப்பாகப் பேசியவாறு, இருவரும் வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது, மாலையாகி விட்டிருந்தது.

மாலைக் காஃபியை வீட்டில் இருந்தவர்கள் அப்போதுதான் முடித்திருந்தனர்.

ஆயினும், ''உன் காஃபியை எடுத்துக் கொண்டு, என் அறைக்கு வா, வசுமதி. இந்தப் பயிற்சி முறைகளில் சிறு சந்தேகம் இருக்கிறது. தப்பாகச் செய்தால் உள்ள பலனும் கெட்டுவிடும் என்பாயே!'' என்று திவாகரன், வசுமதியை அழைத்தான்.

''சரி,'' என்று எழப் போனவளை, விபாகரன் கைபற்றி, ''நாளைக்குத் தொழிற்சாலைக்குப் பின்புறமாக, நம் பண்ணையைப் போய்ப் பார்ப்போம், வசு. வரிசை வரிசையாக ஆரஞ்சு தொடங்கிப் பல்வேறு பழமரங்கள் அடர்ந்த கிளைகளோடு, பார்க்க அழகாக இருக்கும். ஆனால், நிறைய நடக்க நேரும். நீ கொஞ்சம் சம மட்டம் உள்ளதாக, ஹீல்ஸ் இல்லாத செருப்பாகப் போட்டுக் கொண்டு வா. அது போல உன்னிடம் இருக்கிறதா? இங்கே கொண்டு வரவில்லை என்றால், சுபலாவிடம் கடன் வாங்கிக் கொள். உங்கள் இருவருக்கும் கால் அளவு ஒன்று போலத்தான் தெரிகிறது!'' என்று நிறுத்தி வைத்து, நிறையப் பேசினான்.

ஏனிப்படி என்று புரியாமலே வசுமதி நோக்க, அவளது விரல்களோடு விளையாடியபடி, ''நாளை மதியச்

சாப்பாடு கூடக் கையோடு எடுத்துப் போய்விடலாம். அங்கேயே பிக்னிக் மாதிரிச் சுற்றிவிட்டுச் சாப்பிட்டால் நன்றாக இருக்கும். என்ன திவா, முதல் முறை வந்தபோது, நீயும் சுபலாவும் பாதி அங்கேயேதானே கிடந்தீர்கள்!" என்று அண்ணனுக்கு நினைவு படுத்த வேறு செய்தான்.

"ஊம், ஊம்..." என்று அரைகுறையாக ஏதோ ஒலி யெழுப்பி விட்டுத் திவாகரன், அவன் அறை நோக்கிச் சென்றுவிட, கலங்கிய கண்களுடன் சுபலாவும் திரும்பி நடந்தாள்.

வசுமதியின் கையைத் தொப்பென விட்டுவிட்டு, "நாம் ஒருவரோடு ஒருவர் ஈர்க்கப் படுவதாகக் காட்ட வேண்டாமா? கையைப் பற்றினால், இயல்பாக மகிழ்ச்சி காட்டாமல், அப்படி விழிக்கிறாயே!" என்றான், குற்றம் சாட்டும் குரலில், விபாகரன்.

"நாம் வெளியே சுற்றிவிட்டு வந்ததன் பொருளே அதுதானே? அதிலேயே புரியாதா? ஆனால், திவாகரன் வேலை தொடர்பாகக் கூப்பிடும்போது, நீங்கள் கையைப் பிடித்து நிறுத்தினால், எனக்குக் காதல் நடிப்பா நினைவு வரும்?" என்று பதிலுக்குக் கேட்டாள் வசுமதி.

"அப்போதுதான் நினைவு வர வேண்டும். அதுவும் அண்ணன் கூப்பிடுகிற சமயத்தில்தான், கட்டாயமாக நினைவு வர வேண்டும். இந்த மாதிரி, இடையில் முழி பிதுங்கிக் காட்டிக் கொடுக்காமல் இருக்க வேண்டு மானால், இருபத்து நாலு மணி நேரமும், உடம்பில், மனதில் நினைவு இருக்க வேண்டும்," என்றான் அவன் அழுத்தத்தோடு.

அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு நிற்கவும், "திவா கூப்பிட்டதும், அப்படி அவசரமாகவா எழுவது? குறைந்த பட்சம் என்னைப் பார்த்துக் கண்ணாலாவது விடைபெற வேண்டாமா? என்னைப் பற்றிய எண்ணமே இல்லை என்று இப்படிக் காட்டிக் கொண்டால், நம் நடிப்புக் காதலை யார் நம்புவார்கள்?" என்று அவன் தொடர்ந்து விரட்டவும், "எனக்கு இதெல்லாம் பற்றி எப்படித் தெரியும்?" என்று எரிச்சலோடு கேட்டாள், வசுமதி.



"நான் காதலித்தது இல்லை என்பதோடு, காதல் கதை களைப் படிக்கக்கூட எனக்கு நேரம் இருந்தது இல்லை!"

கண்கள் சட்டெனப் பளிச்சிட, "கற்றுத் தரத்தான் அடியேன் காத்துக் கொண்டு இருக்கிறேனே. அரிச்சுவடி தொடங்கி, மேலே மேலே... டாக்டரேட் வரையும் கூட உனக்கு எதுவரை கற்க வேண்டும்?" என்று குரலில் நகை இலங்கக் கேட்டான், விபாகரன்.

திமிரைப் பாரேன் என்று எண்ணிய போதும், அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

அடக்கிக் கொண்டு, "ஒன்றுமே வேண்டாம், சாமி!" என்று கை குவித்தாள் அவள்.

"அச்சச்சோ! எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும், வசு. களவும் கற்று மற என்று பெரியவர்கள் திருத்தமாகச் சொல்லி வைத்திருக்கிறார்கள், தெரியுமா? அதனால், எதையும் தெரியாது என்று விடக்கூடாதும்மா. முக்கிய மாக இதை."

"இருக்கும் இருக்கும். நீங்கள் சொன்னால், சரி யாகத்தான் இருக்கும். ஆனால், திவாகரன் - எனக்குச் சம்பளம் கொடுக்கிற முதலாளி - வரச் சொன்ன பிறகு, நான் இங்கே நின்று பேசிக் கொண்டிருப்பது சரியல்ல என்பது, எனக்கே தெரியும். அதனால், ஆளை விடுங்கள்!" என்று சிரித்தபடியே நழுவினாள் அவள்.

முகத்தில் புன்னகையோடு வசுமதி வந்தது. திவாகரனின் மன நிலைக்குக் கொஞ்சமும் ஏற்புடையதாக இல்லை போலும். ''காஃபியைக் குடித்து முடித்து விட்டுத்தான் வந்தாய்போல!'' என்று அவளது வெறும் கையைப் பார்த்துக் கேட்டான்.

''அட்டா! விபு எதையோ சொல்லிக் கொண்டு இருந்தாரா, காஃபியை மறந்தே போனேன்,'' என்றாள் வசுமதி, இயல்பாக.

கூடவே, விபாகரன், களவையும் காதலையும் பற்றிச் சொன்னதை நினைத்து, அவளது இதழ்களில் மீண்டும் புன்னகையும் மலர்ந்தது.

அந்த முக மலர்ச்சியுடனேயே, ''சொல்லுங்கள் திவாகரன், உங்களுக்கு இப்போது எதைப் பற்றி, என்ன தெரிய வேண்டும்?'' என்று வினவினாள்.

திவாகரன் உடனே பதில் சொல்லவில்லை. ஒரு சிறு தயக்கத்தின் பின், ''முக்கியமாகத் தெரிய வேண்டியது எனக்கல்ல, உனக்குத்தான் என்று தோன்றுகிறது. அது என் தம்பியைப் பற்றி!'' என்றான் சற்றுத் தணிந்த குரலில்.

திகைப்புடன் அவனைப் பார்த்தாள் வசுமதி.

மீண்டும் மௌனம் நீடிக்கவும், ''நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை, திவாகரன். அதுவும், விபாகரைப் பற்றி என்றால், எனக்கு ஒன்றும் புரியவில்லையே!'' என்றாள் அவள்.

அவளுக்கு உள்ளூர ஒரே கவலை.

வேலைக்கு என்று வந்துவிட்டுத் தம்பியோடு சுற்றுகிறாயே என்று திட்டப் போகிறானா? என் தம்பியோடு



நீ என்ன பழகுவது என்று ஏதாவது... அவனுக்கு அவள் வலை விரிக்கிற மாதிரியாகக் கேவலமான குற்றம் ஏதேனும் சாட்டப் போகிறானா?

கிட்டத்தட்ட இவனுடைய தம்பியும், மனைவியும், முதலில் நினைத்தது போல!

ஆனால் இவனிடம் இந்த மாதிரிப் பேச்சை எதிர் நோக்கி, அவர்கள் எந்தத் திட்டமும் போடவில்லையே! அதனால், அதற்குரிய பதிலை இருவரும் யோசித்தும் வைக்கவில்லை. எனவே, அவளாகத்தான் சமாளிக்க வேண்டும்.

சமாளிக்கலாம். முடியும். விபுவோடு இவ்வளவு நேரம் கழித்தால், எதையும்தான் சமாளிக்கலாம்.

திவாகரன் அவளைத் திட்டவில்லை. அவள் அஞ்சி எதிர்நோக்கியது போன்ற எதையுமே அவன் சொல்லவில்லை.

ஆனால் அவன் சொன்ன விஷயம் அவளைப் பெரிதும் நோகடித்தது என்றால், அதுவும் பொய்யில்லை.



## 15

திவாகரன் எடுத்த எடுப்பில், அவன் இளைஞன் என்பது தவிரத் தன் தம்பியைப் பற்றி எதையுமே சொல்லவில்லை. இப்படித் தினமும், இளைஞனான அவனோடு சேர்ந்து வெளியே சுற்றுவது, சிறு பெண்ணான அவளுக்கு நல்லதில்லை... அதனால், இந்தப் பழக்கத்தை வசுமதி விட்டுவிட வேண்டும் என்று மட்டும்தான் சொன்னான்.

''இந்தப் பக்கத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு, ஒரு நல்ல வாய்ப்புக் கிடைக்கும்போது, தயவு செய்து, அதைத்

தடுக்க வேண்டாம்!'' என்று அவள் சொல்லவும், அங்கே மீண்டும் ஒரு மௌனம் நிலவியது.

அதன்பிறகு, ''இப்படித் திருமணமாகாத ஒருவனோடு தினமும் வெளியே போனால், பார்க்கிறவர்கள் அவளைப் பற்றித் தப்பாகப் பேச மாட்டார்களா? அவளது பிற்காலத்தை அது பாதிக்காதா?'' என்றெல்லாம் கேட்டான்.

அதற்கும், ''என்ன திவாகரன், இதிலெல்லாம் என்ன இருக்கிறது? விபாகர் என்ன, என்னைத் தனியிடத்துக்கா கூட்டிப் போகிறார்? தொழிற்சாலை, பண்ணை என்று எல்லோரும் பார்க்கத்தானே! இதில் மற்றவர்கள் தவறாகப் பேச என்ன இருக்கிறது?'' என்று வசுமதி பேசிய விதமே, அவனது புத்திமதியை அவள் ஏற்பதாக இல்லை என்று காட்டிவிட, அவன் முகம் கடுத்தது.

''குறிப்பாகச் சொன்னால், உனக்குப் புரியவில்லையே! பண்ணைப் பகுதியில் அந்தந்தப் பழ வகைகளை, அங்கங்கே பறித்துக் கொட்டாரமிட்டுச் சேகரிப்பார்கள். தரம் வாரியாகப் பிரித்து, எண்ணிப் பதனப் படுத்தக் கொண்டு வருவார்கள். எல்லாவற்றையும் கண்காணிக்கச் செல்லும்போது, நாங்கள் உல்லாசமாகத் தங்கவென்று மேலே பரண் வீடுகளும் உண்டு... விபுவோடு, நீ தனியே அங்கெல்லாம் போவது சரியில்லை!''

பண்ணையிலேயே சுபலாவோடு திவாகர் இருந்ததாக, அவன் தம்பி சொன்னதன் பொருள், வசுமதிக்கு இப்போது புரிந்தது.

புரியும்போதே, அவளுக்குக் கோபமும் வந்தது.

இவன் சொந்த மனைவியோடு போனது போலவா, வசுமதியும் விபாகரனும் செல்வது?



அல்லது, அவர்கள் இருவரும் ஒழுக்கம், கோட்பாடு இல்லாதுதான் தோன்றினார்களா?

இந்த இரண்டு மாதப் பழக்கத்தில், வசுமதியைப் பற்றி, இவன் என்னதான் கணித்தான்?

விபாகரன் மீதும் அவளுக்குக் கோபம் வந்தது.

என்னவோ, வசுமதி அவனோடு சுற்றினால், அவளை வெறுத்து மனைவியோடு சேர்ந்து வாழ்வான் அவன் அண்ணன் என்றானே! அப்படியா நடக்கிறது? மாறாக, அவளை அல்லவோ, கழிசடை என்று சொல்லாமல் சொல்லியாகிறது.

முகம் இறுக, ''பயிற்சி பற்றிக் கேட்க வேண்டும் என்றீர்களே, எந்தப் பயிற்சி?'' என்று வினவினாள், வசுமதி.

மறுபடியும் திவாகரன் சற்று நேரம் ஒன்றும் பேசாது வாளாவிருந்தான்.

பிறகு, ''நான் உன்னைக் குறை கூறுவதாகத் தப்பாக எண்ணிவிட்டாய் என்று தோன்றுகிறது. ஆனால், அது... அப்படி அல்ல, வசுமதி. நீ ரொம்ப நல்ல பெண் என்று எனக்குத் தெரியும்! வந்தனா சொன்னதால் மட்டும் இல்லாமல், இந்த இரண்டு மாதங்களும், நீ பொறுமையும், திறமையுமாக வேலை பார்த்த விதத்தை வைத்து, நானே கண்டுபிடித்த உண்மையும்கூட அதுதான்!'' என்று ஒரு பாராட்டுதலுடன் திரும்பவும் தொடங்கினான் அவன்.

''ஆனால்...'' என்றவன், தொண்டையைச் செருமிக் கொண்டு, மீண்டும் சொல்லலானான். ''ஆனால், நீ நர்சாக இருந்தபோதும், சின்னப் பெண். மனிதர்களை எடை போட, உனக்குச் சரியாகத் தெரியவில்லை. அவன்...''

எதையோ சொல்ல நினைத்தும், அதைச் சொல்ல முடியாமல் திவாகரன் திணறுவது, வசுமதிக்குப் புரிந்தது. அந்த வகையில் விபாகரன் கெட்டிக்காரன்தான்.

எந்த மாதிரிப் பட்ட விஷயமானாலும், எதைச் சொல்லவும் தயக்கமே கிடையாது.

சற்று முன் அவன் பேசியது நினைவு வர, அவளுக்கு உள்ளூரச் சிரிப்பும் வந்தது. காதலைக் கற்பிக்கத் தயாராம்! இதை யெல்லாம் இவ்வளவு இலகுவாக யாரால் பேச முடியும்?

இலகுவாக மட்டும் அல்ல, கோபமாக, சீண்டலாக, எப்படியாவது பேசிக் காரியத்தைச் சாதித்து விடுகிறானே!

தம்பி சாதித்து விடுகிறவன் என்றுதான் திவாகரனும் சொன்னான்.

ஆனால், அவனது சாதனையைப் பற்றி, மூத்தவன் தெரிவித்ததும், அவளுமே கலங்கிப் போனாள்.

''பார் வசுமதி, சுபலா எங்கள் இனத்தைச் சேர்ந்தவள் அல்ல! ஜாதி, மதம் பார்ப்பது இப்போது எவ்வளவோ குறைந்துவிட்ட போதும், அவளது வளர்ப்பு முறையும் சரி கிடையாது!''

'திருமணத்துக்கு முன்பே சேர்ந்து வாழ்ந்தவர்கள்' என்று விபாகர் சொன்னது நினைவு வந்தது. ஆனால், இந்தத் தப்புச் செய்ய இருவர் வேண்டுமே. இவனது வளர்ப்பு மட்டும் என்ன உயர்வு?

இவர்களுடைய தாயாரைப் பற்றி யாரும் பேசிக் கேட்டதில்லை என்பது வசுமதிக்கு நினைவு வந்தது. தாயோ, தாயின் இடத்தில் வேறு யாருமோ இருந்து வளர்க்காததன் விளைவோ?

திவாகரன் தொடர்ந்து பேசினான்.

''ஆனால், என் தந்தை, சுபலாவை மருமகளாக ஏற்றுக் கொண்டார். ஏன் தெரியுமா? 'விபா ஒழுங்காகத் திருமணம் செய்து கொண்டு வாழக் கூடியவன் அல்ல. எனக்கு ஒரு மருமகள் என்று வந்து, எங்கள் சந்ததி தொடர்வது என்றால், அது மூத்தவன் மூலமாகத்தான். அதனால், அவன் விரும்புகிறவளைத் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கிறேன்!' என்றார். அர்த்தம் புரிகிறதா? என் தம்பியைப் பற்றி மோசமாகப் பேச எனக்கு விருப்பம் இல்லைதான். ஆனால், என்னிடமே இரண்டு பெண்கள் வந்து அழுகிறார்கள். விபுவிடம் கேட்டால், இப்படி வந்து அழுகிறவர்கள் எல்லாரையும் மணப்பது என்றால், அந்தப்புரம்தான் அமைக்க வேண்டும் என்கிறான். சொல்லிச் சிரிக்க வேறு செய்கிறான். உன் நன்மை விரும்பியாகச் சொல்லுகிறேன், வசுமதி. அந்த மாதிரி அழுகிற பெண்ணாக நீயும் ஆகி விடக் கூடாது என்பதற்காகத்தான், உன்னிடம் இவ்வளவு மன்றாடுகிறேன். புரிந்து கொள்!'' என்று முடித்தான்.

சற்று நேரம், வசுமதியால் ஒன்றுமே சொல்ல முடியவில்லை.

பெண்கள் விஷயத்தில் விபாகரன் இவ்வளவு மோசமானவனா?

காதலை டாக்டரேட் வாங்கும் அளவுக்குக் கற்றுத் தர முடியும் என்று அவன் கூறியதை வேடிக்கைப் பேச்சாகக் கருதினாளே! கடைசியில் பார்த்தால்... கடவுளே!

''உங்கள் அப்பா... அம்மா யாரும் எதுவும் சொன்னதில்லையா?'' என்று தொண்டையில் அடைத்ததை விழுங்கிக் கொண்டு, சிரமத்துடன் விசாரித்தாள்.

''அவன் பிறந்து சீக்கிரமே அம்மா போய் விட்டார்கள்! சின்னப் பையன், தாயில்லாப் பிள்ளை என்று, அப்பா செல்லம் கொடுத்து வளர்த்து விட்டார். எனக்கு வேண்டியதையே, நான் அவன் மூலமாகத்தான் அப்பாவிடம் கேட்பேன் என்றால் பாரேன்!

''பிறகும், அவரைப் போலவே, அவனுக்கும் தொழில் ஈடுபாடு இருக்கவே, அப்பாவைப் பொறுத்தவரையில், விபு மகா பாரதத்து அர்ஜுனனேதான்! அவரும்கூட, இந்தக் குறையைப் பெரிதாக எண்ணுவதே கிடையாது.''

''ஓ!'' என்றதற்கு மேல், வசுமதியால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

என்னென்னவோ நினைவுகள், எண்ணங்கள் குவிந்து வந்து ஒன்றோடொன்று முட்டி மோதி அவளைக் குழப்பின.

ஏதோ பேசி வளைப்பது பற்றி, வந்தனா கூறியது, வந்த அன்றே விபாகர் அவளை நடத்திய விதம்... அப்புறம்...

திவாகரன் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்து வசுமதி எழுந்தாள்.

உள்ளே இல்லாத அமைதியை முகத்தில் காட்டி, ''நீங்கள் சொல்ல வேண்டியது இவ்வளவுதான், வேறு ஒன்றும் இல்லை என்றால், நான் என் அறைக்குப் போகிறேன், திவாகரன். வெயிலில் வெளியே சுற்றியது. எனக்குத் தலை லேசாக வலிக்கிற மாதிரி இருக்கிறது...'' என்று மொழிந்துவிட்டு, அவன் முகத்தைப் பாராமலே, மடமடவென்று வெளியேறிச் சென்றாள்.

அறைக்குள் சென்று, தனிமையில் அமர்ந்த பிறகும், வசுமதியால் இயல்பு நிலைக்கு வர முடியவில்லை.

விபாகரன் கலியுக அர்ஜுனனேதானா?

மற்றப்படி, எடுத்த எடுப்பில், அவளிடம் அத்து மீறி எப்படி நடப்பான்?

அந்த மாதிரி, அவளைப் பணிய வைக்க முடியாது என்று அறிந்ததும், வழி முறையை உடனே மாற்றிக் கொண்ட விதம்தான், வேறு ஒருவரோடு பழகினால் அண்ணன் புரிந்து கொள்வான் என்றதா?



அவன் பேசிய விதத்தில் ஏமாந்து, அவன் இழுத்த இழுப்புக்கெல்லாம் அவளும் போகத் தொடங்கி விட்டாளா?

அதனால்தான் நாளைக்குப் பரண் வீடா?

இல்லை யில்லை, அப்படி இருக்க முடியாது.

அப்படிப்பட்டவன் கத்தியையும், துப்பாக்கியையும் கையில் தருவானா?

அதுவும், போர்க்கலைகளை ஓரளவு கற்று, அதன் மூலம் துரிதமாகவும் உறுதியோடும் செயல்படத் தெரிந்த வளிடம்.

நிச்சயமாக மாட்டான்.

திவாகரன்தான், எப்படியோ தப்புத் தப்பாக எண்ணி யிருக்க வேண்டும்.

நிம்மதியோடு நிமிரும்போதே, அந்தத் துப்பாக்கி வெடிக்குமா என்று சந்தேகம் வந்தது.

சும்மா, அவளை நம்ப வைப்பதற்காக, உண்மை யானது போலத் தோன்றக்கூடிய, விலை உயர்ந்த விளை யாட்டுத் துப்பாக்கியைக் கூடத் தந்திருக்கலாம் அல்லவா?

அதை எங்கே யாரைச் சுட்டுப் பரீட்சிப்பது?

அவனையா? அவளையேவா?

தலையைப் பிடித்துக் கொண்டு வசுமதி எழுந்து விட்டாள்.

இப்போது, அவளுக்கு நிஜமாகவே தலையை வலித் தது. உடம்புகூட, அனலாய் எரிவது போல இருந்தது.

சற்று வெளிக் காற்றில் நடந்தால், உடலோடு உள்ள மும் குளிரக் கூடும்.

செருப்பை மாட்டிக் கொண்டு கிளம்பும்போது, மாரி எதிரே வந்தான்.

வீட்டினர் யார் முகத்தையும் பார்க்கப் பிடிக்காமல், அதே சமயம் பட்டினி கிடப்பதாகக் காட்டிக் கொள்ள வும் பிடிக்காமல், ''கொஞ்சம் பிஸ்கட் சாப்பிட்டதில் வயிறு இன்னமும் பசிக்கவில்லை, மாரி. அதனால், எனக்கு செல்லோவில் இர்ண்டு சப்பாத்தி எடுத்து வைத்து விடேன். அப்புறமாகச் சாப்பிட்டுக் கொள் கிறேன்,'' என்றாள்.

''சரிங்கம்மா,'' என்ற மாரி, அவள் தலையசைத்து விட்டுச் செல்லும் திசையைக் கவனித்து, ''அம்மா, வெளியவா போகிறீங்க? போர்த்திக்கிட்டுப் போங் கம்மா. இல்லாட்டிக் குளுரும், ரொம்பத் தள்ளிப் புதருங்க பக்கமாப் போயிராதீங்க. முள்ளம் பன்னிங்க நடமாடும். முள் எறிஞ்சாக்கக் கடுப்புத் தாங்காது,'' என்று எச்சரித்து, ஒரு பெரிய டவலையும் எடுத்துக் கொடுத்து அனுப்பி வைத்தான்.

இந்தப் பையனுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது!

ஏற்கெனவே மனம் கலங்கி இருந்தவளுக்குக் கண் களும் கலங்கின. என்ன பலவீனம் என்று தன்னைத் தானே கடிந்து கொண்டு வீட்டைச் சுற்றிலும் இருந்த பரந்த தோட்டத்தில் இறங்கி நடக்கத் தொடங்கினாள், வசுமதி.

சில்லென்ற காற்று முகத்தில் பட்டபோது, உடம் பிலும் உணர்ச்சி வந்தது.

வீட்டை ஒட்டி, விளக்கொளி இருக்கும் இடத்தில் நடந்து, தற்செயலாகக்கூட, அந்த வீட்டார் கண்ணில்பட அவளுக்கு விருப்பம் இல்லை. எனவே, வீட்டை ஒட்டியும் இல்லாமல், அதிகத் தூரமாகவும் செல்லாமல், நடுப்பட்ட இடத்தில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடி யோசித்தாள் அவள்.



யோசிப்பது என்ன? மனதைப் போட்டு உளப்பிக் கொண்டாள் எனலாம்.

எத்தனை விதமாக யோசித்தாலும், விபாகரை நல்ல வன் என்று முடிவெடுக்க அவளால் முடியவில்லை.

அவன் அண்ணனே அவன் மோசமானவன் என்கி றான். அழுகிற பெண்களை, அதாவது அவன் கைவிட்ட பெண்களை எல்லாம் மணப்பது என்றால், அந்தப்புரம் அமைக்க வேண்டும் என்றானாமே.

அதுவும் சிரித்துக் கொண்டு.

இருக்காது என்று பிடிவாதமாகச் சொல்ல வழியின்றி, வந்த முதல் நாளே, அவளிடமே தவறாக நடக்க முயன்றிருக்கிறான்.

அதன் காரணத்தை அவன் விளக்கினான் என்றாலும், அப்போது ஒரு மாதிரி ஒப்புக் கொண்ட அதே விளக் கத்தை, இப்போது அவளால் ஏற்க முடியவில்லை.

சரி, அவன் கெட்டவன்தான். உன் வண்டவாளம் எனக்குத் தெரியும். இனி உன் சங்காத்தமே வேண்டாம் என்று பிடிவாதமாக அவனைத் தூர நிறுத்தியும் விடலாம்.

அவனுடைய அண்ணனே இதற்கு ஆதரவாக இருக் கும்போது, அப்படி விபாகரனை விலக்குவது முடியாத காரியமும் அல்ல.

ஆனால், அதுதான் அவளுக்குத் தாங்க முடியாத வேதனையைத் தந்தது. அவனை விலக்க வேண்டும். அவனோடு பேசக் கூடாது, பழகக் கூடாது என்றெல்லாம் நினைக்கக்கூட, அவளால் முடியவில்லை.



## 16

வசுமதி முட்டாள் அல்ல. ஆண் களையே அறியாதவளும் அல்ல.

செய்யும் தொழிலால், ஆண், பெண் பேதமின்றி, எல்லோருடனும் சகஜமாகப் பேசிப் பழகுகிறவள்தான்.

பத்துப் பதினைந்து நாட்கள் வார்டில் இருந்து, குண மானதும், அவளது கைகளைப் பற்றி நன்றி தெரிவித்துப் போனவர்களிலும், பல ஆண்கள் இருந்தனர்.

இந்த நோயாளிகளுக்குத் துணையாக இருந்தவர்கள், கூடவே இருந்து பணி புரிந்துவிட்டு, மாற்றிப் போகிற டாக்டர்கள்... என்று எத்தனையோ பேர்.

ஆனால், இவர்களில் யாரைப் பிரிவதிலும், அவள் இப்படித் துன்புற்றது கிடையாது. ஆனால், இப்போது ஏன் இப்படி?

ஒருவேளை... ஒரு வேளை அவனிடம் வசுமதி மயங்கி விட்டாளா?

இந்த இரண்டு மூன்று நாள் பழக்கத்திலா? என்ன பைத்தியக்காரத்தனம்!

பள்ளியில் படிக்கும்போது, கம்ப ராமாயணத்தில், ஒரே பார்வையில், இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தியதாகப் படித்தது, மிகவும் அசந்தர்ப்பமாக நினைவு வந்து, அவளை இன்னமும் கலக்கியது.

அப்படி யெல்லாம் ஒரே பார்வையில், ஓர் ஆண் மகனிடம் மனதைப் பறிகொடுக்க, அவள் ஒன்றும் அந்தப்புரத்தில் வளர்ந்த சீதை அல்ல.

உடனேயே, அவள் சீதையோ, அல்லவோ, விபாகர் நிச்சயமாக ராமன் இல்லை என்பது மட்டும் உறுதியாகத்



தெரிகிறதே. அவன் அண்ணனே சொல்லுகிறானே என்று எண்ணி, உடனே துடித்தாள்.

இந்த விபாகர் எப்படிப்பட்டவனாக இருந்தால், அவ ளுக்கு என்ன? இப்போதைக்கு, அவனுடைய அண்ணன் திவாகரனை மனைவியோடு சேர்த்து வைக்கிற ஒரு நல்ல காரியத்துக்கு உதவி செய்யக் கேட்டான். வசுமதி செய்கிறாள். அதற்கு மேல், அவன் எப்படி வேண்டு மானாலும் இருந்து தொலையட்டும் என்று விட் டேற்றியாக விடவும் அவளால் முடியவில்லை.

'அவன் கெட்டவனா? கெட்டவனா?' என்று நெஞ்சை அடைத்துக் கொண்டு அழுகை வந்தது. கலங்கிய கண் களுடன், ஒரு சிமென்ட் பெஞ்சில் சோர்வுடன் அமர்ந் தாள் அவள்.

இரண்டு பெரிய துளிகளாக, விழியிலிருந்து நீர் உருண்டு விழுந்ததுதான் தொடக்கம், அப்புறம் அருவியாய்க் கண்ணீரைக் கொட்டித் தீர்த்துவிட்டாள்.

வெகு நேரம் அழுத பின், மனப்பாரம் சற்றுக் குறைந் தாற்போலத் தோன்றவும், வசுமதி மெல்ல எழ முயன்ற போது, குளிரடிப்பதைச் சருமம் உணர்ந்தது.

டவலை இழுத்து மூடிக் கொண்டு எழுந்து பார்த்தாள்.

சூழ்ந்திருந்த இருட்டைத் தவிரச் சற்று நேரம் அவ ளுக்கு ஒன்றுமே தெரியவில்லை. வீட்டை விட்டு ரொம்பத் தூரம் வந்து விட்டோமோ என்றுகூடப் பயந்து விட்டாள்.

பார்வையை ஓட விட்டபடி, தலையைத் திருப்பிச் சுற்றிலும் ஆராய்ந்தபோது, பின்புறமாக, வீட்டில் ஓரொரு மின் விளக்குகள் பளிச்சிடுவது தெரிந்தது.

சற்று தூரம்... ஒரு நூறு, நூற்றிருபது எட்டு நடந்தால் வீடு வந்துவிடும் என்று எண்ணியபடி, காலை எடுத்து வைத்தால், அருகிலேயே குடுகுடுவென்று எதுவோ ஓட, நடுநடுங்கிப் போனாள் அவள்.

மாரி என்னவோ எச்சரித்தானே.

முள்ளம்பன்றிகள்... முள் எறிந்தால் கடுப்புத் தாளாது என்றானே, இப்போது ஓடியது, முள்ளம் பன்றியா? சுற்றிலும் இருக்கும் இருளில், எதை என்று கண்டாள்?

எலி, பெருச்சாளி என்றால்கூட, அந்த நேரத்தில் அவளுக்குப் பயமாகத்தான் இருந்தது. எலிக்கடியே விஷம். எலியைப் பிடிக்கப் பாம்புகூட வந்திருக்கலாம்.

சும்மாவே குளிர். இந்தப் பயமும் சேர்ந்து கொள்ள, அவளது விரல்கள் தந்தியடித்தன. அவசரமாக, அது வரை உட்கார்ந்திருந்த பெஞ்சின் மேல் ஏறி நின்று கொண்டாள்.

இங்கேயே இருக்க முடியாது. ஏறிக்கொண்டே வரும் குளிர், நள்ளிரவுக்கு மேல், எலும்பை உறைய வைத்து விடும். கையில் இருக்கும் டவல் அதற்குத் தாங்காது.

ஆனால், எப்படி இறங்கி நடப்பது? முள்ளம்பன்றி? மற்றவை?

இந்தக் குளிரை இனித் தாங்க முடியாது என்று விரைவிலேயே வசுமதி உணர்ந்தாள்.

முள்ளம்பன்றியோ, பெருச்சாளியோ, இன்னும் எது வானாலும் எதிர்கொண்டுதான் ஆக வேண்டும் என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு, அவள் பெஞ்சி லிருந்து இறங்க முற்பட்டபோது, ''வசு...'' என்ற அழைப்பு இன்னிசைக் கீதமாய் அவள் காதுகளில் விழுந்தது.



விபாகரன்தான்.

''விபு, விபு, இதோ இங்கே இருக்கிறேன்!'' என்று அவசரமாகக் குரல் கொடுத்தாள் அவள்.

வீட்டைச் சுற்றிலும் சம தூரத்தில், ஒரு சிமெண்ட் நடை பாதை உண்டு. அதில் டார்ச் விளக்கின் ஒளி தெரிந்தது.

வசுமதி நின்ற பெஞ்சுக்குப் பத்துப் பன்னிரண்டு அடி தள்ளி அந்தப் பாதை செல்லும். முன்பு இருளில் கண் ணில் படாதது, இப்போது விளக்கொளியில் தெரிந்தது.

நடைபாதையில் நேராக வந்து நின்று விளக்கொளியைப் பாய்ச்சி அவளைப் பார்த்தவனுக்குச் சிரிப்பு வந்தது.

''வசுமதி, நீ பள்ளியில் எப்படிப் படித்திருப்பாய் என்று இப்போது தெரிகிறது,'' என்று சிரித்தபடி, பாதை யிலிருந்து, அவளை நோக்கி வரக் காலடி எடுத்து வைத்தான்.

''ஜாக்கிரதை!'' என்று பதறினாள் அவள்.

''என்ன?'' என்று அவன் நிற்கவும், ''கீழே என்னமோ ஓடியது. முள்ளம்பன்றி முள் எறியும் என்று மாரி சொன்னான்,'' என்று அவள் முடிக்கு முன், அவன் மீண்டும் சிரிக்கத் தொடங்கி விட்டான்.

''வசு! வசு! உன்னைப் பார்த்த அன்றே ஒரு குங்ஃபூ அடி. மறுநாள் பிளேடினால் வெட்டு. இன்று ஒன்றையும் காணோமே என்று பார்த்தேன். பன்றி முள்ளா?'' என்றவன், டார்ச்சைத் தரையில் இங்குமங்கும் நன்றாக அடித்துப் பார்த்தவாறு, அவளை நோக்கிச் சென்றான்.

அவளது காலைப் பார்த்துவிட்டு, ''ஹூம். முள்ளம் பன்றிக்குத் தப்பினாலும், பளு தூக்கும் போட்டியில் கலந்து கொண்டே ஆக வேண்டும். இந்தச் செருப்பைப் போட்டுக் கொண்டு இந்த இடத்தில் இப்போது நடப்பது, தப்பு!'' என்று டார்ச்சை அவள் கையில் கொடுத்தான்.

''நாம் போகும் வழியில் வெளிச்சத்தை விழச் செய். சும்மா என்றால், இந்த ஐடியா சொல்லத் தைரியம் இராது. ஆனால், இப்போது வேறு வழியில்லை. நடை பாதை வரை, உன்னைத் தூக்கிக் கொண்டுதான் போக வேண்டும், வா.'' என்று கைகளை ஏந்தினாற்போல நீட்டினான்.

சற்றுத் தயங்கிவிட்டு, மறுப்பதன் அசட்டுத்தனத்தை உணர்ந்து, ''சரி...'' என்றாள் அவள். ''க... கனமா யிருப்பேன்,'' என்றாள் கூச்சத்துடன்.

கைகளில் அவளை வாகாக ஏந்தி நடந்தவாறு, ''அப் படியென்ன கனம்? மிஞ்சி மிஞ்சி ஒரு நூறு...நூற்றிருபது கிலோ இருப்பாயா?... ஊகூமா? குறைவு என்கிறாயா? அப்படியானால் தொண்ணூறேதானா? நம்ப முடிய வில்லையே!'' என்று நகைத்தபடி, அவளைச் சுமந்து சென்றான் விபாகரன்.

''ஐயோ, நான் ஐம்பத்தைந்தே கிலோதான்!'' என்று மறுத்தவள், உடனேயே, ''தூக்க முடியாமல் ரொம்பச் சிரமமாக இருக்கிறதா?'' என்று கவலையுடன் வின வினாள்.

''வேடிக்கையாகச் சொன்னால், அதற்குள் கவலையா? பெண்களையும், குழந்தைகளையும் சுமப்பது, பூச் செண்டைத் தூக்குவது போல என்பார்கள். ஆனால்...'' என்று அவளை நடைபாதையில் இறக்கி விட்டான். ''இவ்வளவு குளிரடித்துப் போயிருக்கிறாய். அது புரியாமல், கேலி பேசிக் கொண்டு நின்றேனே. நீயேனும் சொல்லக்கூடாதா?'' என்று கடிந்தபடி, தன் ஸ்வெட்டரைக் கழற்றி, அவளிடம் கொடுத்தான்.



''உங்களுக்கு...'' என்று தொடங்கியவளை, இடை மறித்து, ''மறுத்துப் பேசி நேரத்தை வீணடிக்காமல், சீக்கிரமாக அணிந்து கொண்டாயானால், அந்த அளவு நாமும் சீக்கிரமாக வீட்டுக்குள் போய், இந்தக் குளிரில் இருந்து தப்பிக்கலாம்,'' என்ற அவன் குரலில், மறுபேச்சின்றி அணிந்து கொண்டாள் அவள்.

அணியும்போதே அவளது கைகள் தடுமாறியதைக் கண்டவன், ''கழுத்தில் ஒரு கராத்தே வெட்டுப் போட்டு விடாதே. சீக்கிரமாக வீடு சேரத்தான் தூக்கிப் போகி றேன்,'' என்றவாறு, அவளை மீண்டும் தூக்கிக் கொண்டு வேகமாக நடந்தான்.

''உன் அறையில் கணப்பு இருக்கிறதா? வாடைக் காற்று வரும் திசையிலே இல்லை என்று அங்கே கணப்பு வைக்கவில்லை என்று ஞாபகம்,'' என்று பேசியபடியே, ஹாலில் இருந்த மின்சாரக் கணப்பின் அருகே அவளை இறக்கிவிட்டு, ஒரு சோஃபாவை இழுத்துப்போட்டு, உட்கார வைத்தான்.

கணப்பை ஓட விட்டுவிட்டு, அவள் அருகே வந்து, கார்ப்பெட்டில் அமர்ந்து, அவளது கைகால்களைத் தொட்டுப் பார்த்தான்.

''இவ்வளவு சில்லிடும் வரையா, அங்கேயே இருப் பது?'' என்று கடிந்து, ''கைகளை இப்படித் தேய்,'' என்ற வன், அவளது கால்களைச் சூடுவர வேகமாகத் தேய்த்து விட்டான்.

தடுப்பது மடத்தனமாகத் தோன்ற, வசுமதியும் அவன் சொன்னபடி செய்தாள்.

''நல்ல வேளை, செல்லோவில் சப்பாத்தி எடுத்து வைக்கச் சொன்னாய். 'நர்சம்மா சாப்பிடலியே, உள்ளார

வந்திட்டாங்களா, இல்லியான்னே தெரியலியே. சாப்பாட்டை என்னய்யா பண்ணட்டும்?' என்று மாரி, என்னிடம் வந்து கேட்கவில்லை என்றால், நீ வெளியே இருப்பது தெரியாமல் போயிருக்கும். இவ்வளவு நேரமா வெளியே இருப்பார்கள்? அதுவும், கம்பளி ஷால், ஷூ, சாக்ஸ் ஒன்றும் இல்லாமல். இந்த நேரத்தில் இது என்ன பைத்தியக்கார வேலை, வசு?'' என்று குரலில் கண்டனம் தொனிக்க வினவினான் விபாகரன்.

என்ன பதில் சொல்வது? அவள் வேண்டும் என்று செய்யவில்லை... அப்போது அவளது மனம் இருந்த நிலையில்...

மனம் இருந்த நிலையும், அதன் காரணமும்...

''நான்... ஏதோ யோசனையில், நான் நேரத்தைக் கவனிக்கவில்லை, விபாகரன்,'' என்றாள் அவள் - சிறு குரலில்.

விபாகரன் அவளது கால்களைத் தேய்த்து விடுவதை நிறுத்திவிட்டு, எழுந்து, இன்னொரு சோஃபாவில் அமர்ந்தான்.

''நீயும் தேய்ப்பதை நிறுத்தி விடு. உடம்பு நன்றாகி விட்டது என்று நினைக்கிறேன். குளிர் நடுக்கும்போது, 'விபு'வாக இருந்தது. மறுபடியும் 'விபாகர்' ஆகிவிட்டதில் இருந்தே, ஆரோக்கியம் திரும்பிவிட்டது புரிகிறது. இப்போது பசியும் தெரியும் என்று நினைக்கிறேன். வா, வந்து சாப்பிடு,'' என்று அழைத்துச் சென்றான்.

சற்றுச் சிரமமாக இருந்தபோதும், கால்களில் முன்னிருந்த நடுக்கம் இல்லாததால், அவனோடு நடந்து செல்ல முடிந்தது.



ஆனால், அவனது குரலில் இருந்த சிறு கோபம் மனதை வாட்ட, ''பயத்தில் அழைத்தது வேறு. மற்றப்படி, உங்களை 'விபு' என்று அழைப்பதற்கு நீங்கள் ஒன்றும் எனக்கு அனுமதி தந்ததில்லையே!'' என்றாள் வசுமதி பதிலுக்கு.

''நீ எனக்கு அனுமதி தந்தா, உன்னை வசு என்கிறேன்?''

''நீங்களும் நானும் ஒன்றா? பெரிய முதலாளி எப்படி வேண்டுமானாலும் பேசலாம். என் ஊதியமே, உங்கள் நிறுவனத்தில் இருந்து வருகிறது. நான் எப்படித் தைரியமாக உரிமை எடுக்க முடியும்?''

''ஆஹா. என்ன பணிவு! என்ன பதவிசு! முதலாளி கையைப் பிடித்து முறுக்கித் தாக்கலாம். சுடுவதற்கும், குத்துவதற்கும் துப்பாக்கியும், கத்தியும் வாங்கிக் கைப்பையில் பத்திரமாக வைத்துக் கொள்ளலாம். இதற்கு மட்டும் தைரியம் வராது. அப்படியா?'' என்று அவன் கேட்டபோது, அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

அவளை ஒரு தரம் பார்த்துவிட்டு, ''போகட்டும். முதலில் நீ சாப்பிடு,'' என்று அவளைச் சாப்பிட வைத்தான்.

அவள் உண்டு முடித்ததும், அவளை நேராகப் பார்த்து, ''என்ன விஷயம், வசு? அழுதிருப்பது போலக் குரல் ஙஞணநமன போடுகிறதே, அழுதாயா? ஏன்? அண்ணன் ஏதாவது சொன்னானா?'' என்று விவரம் கேட்டான்.

உதட்டைக் கடித்துக் கொண்டு, அவள் பேசாதிருக்கவும், ''சும்மா சொல்லு. பயிற்சி பற்றின சந்தேகம் என்று, உன்னை அவன் தனியாகக் கூப்பிட்ட போதே, ஏதோ சொல்லப் போகிறான் என்று நினைத்தேன்.

ஆனால், அதைப் பெரிதாக எண்ணி, நீ இப்படிக் கோழையாக அழுவாய் என்று எதிர்பார்க்கவில்லை. வீரம் எல்லாம் என்னிடம் மட்டும்தானா?'' என்று இலகுவாகவே பேசினான் விபாகரன்.

''சொல்லும்மா, திவாகர் என்ன சொன்னான்? வேலை பற்றிப் பிரச்சினை கிடையாது என்று எனக்கு நிச்சயம். வேறு என்ன?'' என்று வேறு குரலில் மீண்டும் விசாரித்தான்.

வேறு என்ன சொன்னான்?

சற்றுப் பலவீனப்பட்டு இருந்த நிலையாலோ, என்னவோ, அதற்கு மேல், வசுமதி அதிகம் மறைக்கவில்லை.

''திவாகரன் என்னிடம் எனக்காகத்தான் பேசினார்... உங்களோடு பழக வேண்டாம். அது எனக்கு நல்லதில்லை என்றார்.''

''ஏனாம்?'' என்று கேட்டுவிட்டுப் பதிலுக்காக அவள் முகத்தைப் பார்த்தான் அவன்.

''அ... அது... நான் சின்னப் பெண்ணாம். நீங்கள் மணமாகாத வாலிபராம், பார்க்கிறவர்கள் தப்பாக நினைப்பார்களாம்...''

''இது எல்லோரும் சொல்லக் கூடிய புத்திமதிதானே! இதற்காகவா அழுதாய்?'' என்று சந்தேகமாகப் பார்த்தான் விபாகரன்.

''உங்களை ஒருவர் அநியாயமாகக் குற்றம் சொன்னால், அப்போது புரியும். நீங்கள் அவருக்காக நடிக்கச் சொன்னீர்கள். அவரானால், நான் வயதுக் கோளாறால் மயங்கி விட்டது போலப் பேசுகிறார். எனக்கு எப்படி இருக்கும்?''



''ஆனாலும், உன் வேலை காரணமாகச் சில தவறாக நினைக்கக் கூடிய சூழ்நிலைகள், ஏற்கெனவே உனக்கு ஏற்பட்டுத்தானே இருக்கும்! அலட்சியப்படுத்துவதை விட்டுவிட்டு, அழுவார்களா? விடும்மா!'' என்று தேற்றினான், அவன்.

அவள் ஆசுவாசமாய் ஒரு பெருமூச்சு விடவும், ''அப்புறம்?'' என்று கேட்டான். அவள் திகைத்து நோக்கவும், ''திவாகரால் அத்தோடு நிறுத்த முடியாதே. தன் பேச்சுக்கு வலிமை கூட்ட, இன்னும் ஏதாவது சொல்லியிருப்பானே. ஒரு வேளை என்னைப் பற்றியா? என்னிடமே எப்படிச் சொல்வது என்றுதான் தயங்குகிறாயா? சும்மா சொல்லு, வசு. இதனால் ஒன்றும் எங்கள் உறவு கெட்டுவிடாது... நீ சொல்லாவிட்டால், நான் அவனிடமே கேட்பேன்,'' என்று வற்புறுத்திக் கடைசியாக மிரட்டிக் கேட்டான்.

அதற்கு மேல் மறுக்க மாட்டாமல், வசுமதியும் திவாகரன் கூறியவற்றில் 'அந்தப்புரம்' போன்ற விவரங்களைத் தவிர்த்துவிட்டு, மொத்தக் கருத்தைத் தெரிவித்தாள்.

இவன் ஆத்திரப்படப் போகிறான் என்று மடியில் கோத்த கரங்களைப் பார்த்தபடி வசுமதி கவலையுடன் காத்திருந்தபோது, ''ஆஹா, வெற்றி! வெற்றி!'' என்று உற்சாகத்துடன் விபாகரன் கூவவும், அவள் வியப்புடன் நிமிர்ந்து பார்த்தாள்.



## 17

வசுமதிக்கு விபாகரனின் உற்சாகமும் புரியவில்லை. அவனது 'வெற்றி'யும் புரியவில்லை.

அவனது குறிக்கோளுக்குச் சாதகமாக எதுவுமே நடவாதபோது, வெற்றி எங்கிருந்து வரும்?

அவள் மனதில் நினைத்ததை முகத்தில் கண்டு, விபாகரன் விளக்கமாகப் பதில் சொன்னான். ''சுபலா வின் சந்தேகம் சரியென்று நான் சொல்லவரவில்லை, வசு. ஆனால், சாய்ந்து கொள்ள ஓர் ஆதாரம் போல, தன் கஷ்டத்தைச் சொல்லி ஆறுதல் பெற ஒரு துணையாகத் திவா உன்னைக் கருதத் தொடங்கி இருந்தான் என்பது என் கருத்து. சும்மா என்றால், ஒரு மனிதன் இந்தத் துணையை மனைவியிடம் காணுவான். ஆனால், திவாவுக்கு மனைவியிடமே கோபம்.''

''வெறும் கோபம் மட்டுமல்ல, விபு. நிறைய வெறுப் பும் இருக்கிறது. என்னவோ, வெளிநாடு சுற்றுவதற் காகத்தான் சுபலா தன்னை மணந்ததாகவும், இப்போது அது முடியாது என்பதால், வெறுப்பதாகவும் கூறுவார். அப்படி இராது என்பேன் நான். ஆனால், சுபலா கணவர் பக்கத்திலேயே வராததால், என்னால் என் கருத்தை அதிகம் வலியுறுத்த முடியாமல் போயிற்று,'' என்றாள் வசுமதி.

''வந்தால்தான், கண்டபடி திட்டி விரட்டுகிறானே என்கிறாள் சுபலா. என்னைப் பொறுத்தவரையில், திவா அடிபட்டு, நிராசையும் அவநம்பிக்கையுமாகத் தவித்துக் கொண்டு கிடந்தபோது, சுபலா கூட இராமல், எதற்கா கவோ தூரப் போயிருக்கிறாள்... அதுதான் பெரும் பிரச்சினையாகி விட்டது என்று தோன்றும். இனிப் பிரயோஜனம் இல்லை என்று அவள் போனாள் என்பான், அவன். அவள் போனது அவனுக்கு மனதிற்குப் பெரிய அடியாகி விட்டது. சுபலாவிடம் கேட்டால், உடம்பெல்லாம் ரத்தம் வழிய அவன் கிடந்தபோது, தலைசுற்றி என்னமோ பண்ணி விட்டது என்கிறாள்...'' என்று அவன் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, ''ஓ, அதுதானா?'' என்று வியப்புடன் கூறினாள் வசுமதி.



''என்னது, அதுதானா?''

''நான் வந்து இரண்டு நாட்கள் கழித்து, ஒரு நாள் மறைமுகமாகச் சுபலா ஏதோ சொன்னார்கள். உதவியாக உள்ளே வந்தவரை, காயங்களை வேண்டுமென்றே பிய்த்துக் காட்டி, அழுது கொண்டே ஓட வைத்து விட் டார், திவாகர். ஆறி வந்த காயங்களைப் பிய்த்துப் பெரிதாக்கி விட்டாரே என்று, எனக்குக்கூட அன்று ஒரே கோபம். சுபலாவுக்கு ரத்தத்தைப் பார்க்கப் பயம் என்று இப்போது தெரிகிறது. அதுபோலச் சிலருக்கு இருக்கும். ஒரு வகை ஃபோபியா,'' என்றாள் வசுமதி.

''அது, இந்த நர்சம்மாவுக்குத் தெரிகிறது. என் சகோதரனுக்குத் தெரியவில்லை,'' என்று சோகம் காட்டி விட்டு, அவன் தொடர்ந்தான். ''சுபலாவிற்குக் கணவ னோடு இணைந்து விட மிகவும் ஆசை. அண்ணன் வெளியே ஒத்துக் கொள்ளாவிட்டாலும், உள்ளே நேசம் அப்படியே இருக்கிறது.''

''அது சரிதான். நீங்கள் 'மலரும் நினைவுகள்' நடத்தும்போது, நானும் கவனித்திருக்கிறேன்,'' என்று அவள் கூற, அவன் சிரித்து விட்டுத் தொடர்ந்தான்.

''இப்போது, நீ கொடுத்து வரும் தார்மீக ஆதரவு கிடைக்கவில்லை என்றால், திவா அதை எங்கே தேடுவான், சொல்லு? எப்படியும் மனைவியிடம் சாயத் தான் செய்வான். அதுதானே நமக்கு முக்கியம்?''

வசுமதி பதில் சொல்லவில்லை.

ஓரக் கண்ணால் அவளைப் பார்த்துவிட்டு, ''உன் வேலை பற்றிக் கவலை வேண்டாம், வசு. கணவனிடம் நம்பிக்கை வந்துவிட்டால், சுபலா உன் பணிகளை ஆட்சேபிக்கப் போவது இல்லை. திவா முழுவதுமாகக் குணமடைந்து விட்ட பிறகும், தொழிற்சாலைக் காப்ப கத்தில் உன் பொறுப்பு நிரந்தரம்,'' என்று விபாகரன் புன்னகை செய்தான்.

வசுமதியின் முகம் லேசாகக் கன்றிப் போயிற்று.

அவள் தன் நிலைமையைப் பற்றி நினைத்ததை, அவன் அறிந்து கொண்டானே.

இப்படி அறிந்து கொள்வதால்தான், அவரவருக்கு ஏற்ற படி பேசி, அவனது காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடிகிறதோ?

எப்படியோ? இந்தப் பசுமையான மலைச் சாரலி லேயே எப்போதும் இருந்து விடுவது எவ்வளவு பெரிய அதிருஷ்டம்!

அத்தோடு, இவனையும் அவ்வப்போது பார்க்கலாம் என்று நினைத்து விட்டு, அவசரமாகத் தலையைக் குனிந்து கொண்டாள் அவள்.

இந்த எண்ணத்தையும் விபாகர் கண்டுகொண்டால்...?

சிவப்பு மறைந்து, முகம் இயல்பாகி விட்டது என்ற நம்பிக்கை வந்ததும், அவனை நோக்கி, ''அதாவது, நம் பழைய திட்டத்தை அப்படியே வைத்துக் கொள்ளலாம் என்கிறீர்களா?'' என்று வினவினாள்.

''ஆமாம்!'' என்று ஒப்புதலாகத் தலையசைத்தான் விபாகர். ''திவா மனதில் இன்னும் பொறாமையைத் தூண்டுவோம். அவன் சொல்லுக்கு மதிப்பில்லை என்று



காணும்போது, சொல்வதற்கு உரிமை இல்லை என்பதும் தெளிவாகும். நீ அடியோடு கைவிட்ட மாதிரி இருந் தால், நிச்சயம் சுபலாவிடம் சாய்வான். அதுதானே நமக்கு... முக்கியமாக எனக்கு வேண்டியது!'' என்று கண்ணால் சிரித்தான்.

சிரிப்பின் காரணம் புரிந்து, ''எனக்கும் ஒரு குடும்பம் பிரியக் கூடாது என்பதுதான், விபு,'' என்றாள் மெதுவாக.

அவள் கையைப்பற்றி, லேசாக அழுத்தி, ''புரிகிறது. கேலியாகச் சொன்னால், லகுவாக எடுத்துக் கொள்ளவும் பழகிக்கொள்,'' என்றுவிட்டு, விபாகரன் எழுந்தான்.

''ரொம்பவே நேரமாகிவிட்டது. போய்த் தூங்கு. காலை யில் சற்றுத் தாதமாக விழித்தாலும் பரவாயில்லை. காலை உணவுக்குப் பின் நாம் கிளம்புகிறோம்,'' என்றான் விபாகரன்.

விபாகரன் போன பின், அவளது அறைக் கதவைச் சாத்திக் கொண்டு படுக்கும்போது, மீண்டும் வசுமதியின் உள்ளம் சற்றுக் குழம்பத்தான் செய்தது.

அண்ணன் சொன்னதைக் கேட்டதும், இவன் ஒன்றும் ஆத்திரப் படவில்லையே. அப்படி எதுவும் கிடையாது என்று அடித்துப் பேசவும் இல்லை. மறுக்கவும் இல்லை.

ஏன்? அவன் அப்படித்தான் என்று ஒத்துக் கொள் கிறானா? அல்லது எந்த விதமான பதிலுக்கும் தகுதியற்ற குப்பை என்று ஒதுக்கினானா?

அதை விடவும் மோசமாக, இவளுக்கு எதற்காக விளக்கம் கொடுப்பது என்றும் எண்ணியிருக்கலாம்.

இப்படி யெல்லாம் யோசனை ஓடும்போது, அவ னோடு செல்லச் சம்மதித்தோமே என்று வசுமதிக்கு அவ மானமாகக் கூட இருந்தது.

ஆனால், இவை எல்லாமே அவளது ஊகங்கள் தவிர, எதுவுமே உறுதியாக அறியப்பட்ட உண்மை அல்ல. இவை அனைத்துமே தவறாகி, விபாகரன் நல்லவனாகவும் இருக்கலாம். சந்தேகத்தின் பலனைக் குற்றவாளிக்குக் கொடு என்றுதானே சட்டமே சொல்கிறது.

அப்படி அவனை நல்லவனாக நினைப்பதால், வசுமதி அவனிடம் மயங்கி, அவன் காலடியில் விழுந்து, எந்தத் தப்பும் செய்துவிடப் போவது இல்லையே.

பிறகென்ன?

தமையன் குடும்பம் நல்லபடியாக இணைந்து வாழ வேண்டும் என்று விபு விரும்புவது நிச்சயமான உண்மை. ஒரு குடும்பம் பிரியாதிருக்க, அவளும் உதவுகிறாள். விஷயம் அவ்வளவுதான்.

இந்த முடிவுக்கு வந்து, வசுமதிக்கு உறக்கம் பிடிக்க, மேலும் ஒரு மணி நேரம் ஆயிற்று.

மறுநாள் காலை உணவு வேளையில், விபாகரன் எதுவுமே சொன்னானில்லை. அவனைப் பின்பற்றி, வசுமதியும் ஒன்றும் பேசாமலே இருந்து விட்டாள்.

வழக்கம்போலவே, விபாகரனின் 'மலரும் நினைவுகள்' முயற்சியால், சிற்சில வார்த்தைகளால் மட்டுமே என்றாலும், அவனுடைய அண்ணன் குடும்பமே உரையாடலை நடத்தியதால், வசுமதி பேசத் தேவையும் இருக்கவில்லை.

மரியாதைப்பட்ட பணிபுரிகிறவள், அதே சமயம் குடும்ப வட்டத்திற்கு அப்பாற்பட்டவள் என்கிற நிலைக்கு ஏற்றபடியான உபசாரம், கூடச் சேர்ந்து உணவு கொள்வது, அதற்கு மேல், குடும்பப் பிரச்சினைகளில் அவளுக்குப் பங்கில்லை.



வசுமதியும் அதற்கேற்ப நடக்கவே, பிரச்சினையின்றிக் காலை உணவு முடிந்தது.

உணவு முடிந்து, ஹாலுக்கு வந்ததும், கணவன் கோபமற்றுப் பேசுவதை நீட்டிக்கும் ஆவலில், "நாம் மூவரும் சீட்டு விளையாடுவோமா?" என்று சுபலா வினவினாள்.

முகம் சுழித்து, "இவளுக்குக் கொஞ்சம் நாகரீகம் கற்றுக் கொடு, விபு. நாலு பேர் இருக்கும்போது, மூன்று பேர் விளையாடுவோமா என்கிறாளே!" என்றான் திவாகரன்.

"என்னை விடவும், உலக நாகரீகம் முழுவதும் உனக்குத்தான் அண்ணா, அத்துப்படி. நீயே சொல்லிக் கொடு. எனக்கு வேறு வேலை இருக்கிறது இன்று மாரியை நான் அழைத்துப் போகிறேன்," என்ற சின்னவன், உரக்க மாரிக்குக் குரல் கொடுத்தான்.

முன்னேற்பாடு போல, அவன் உடனே வந்து நின்றான்.

"கோவிந்தனிடம் ஜீப்பைத் தயார் பண்ணச் சொல்லியிருந்தேன். எல்லாம் எடுத்து வைத்தாகி விட்டதா என்று பார்த்து வா," என்று அனுப்பினான்.

"இப்பேதே கிளம்புகிறாயா?" என்று கேட்டுவிட்டு, ஓரக்கண்ணால் வசுமதியைப் பார்த்தான், திவாகரன்.

ஒன்றும் கவனியாதது போல, அன்றையப் பத்திரிகையைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

சற்று யோசித்துவிட்டு, "வசுமதி, இன்றைக்கு நம் வீட்டைச் சுற்றி உள்ள நடைபாதை முழுவதும் நடக்க வேண்டும் என்று நினைத்தேன். என்னால் முடியுமா? பாதி தனியாகவே முடியும். மீதிப் பாதிக்கு, நீ துணை வர வேண்டியிருக்கும்," என்றான் அவன்.

வேலையைப் பார்த்துக் கொண்டு வீட்டில் இரு என்று, குறிப்பாகச் சொல்லுகிறான்.

சிரித்த முகமாகக் குதித்துக் கொண்டு திரும்பி வந்து படியேறிய மாரியை வண்டியில் ஏறுமாறு சைகை செய்துவிட்டு, அண்ணனிடம் திரும்பினான் விபாகரன்.

''சாரி, அண்ணா. இன்று நீ அண்ணியைத்தான் உதவிக்கு வைத்துக் கொள்ள வேண்டும். இன்னொன்று, இங்கு வந்ததில் இருந்து, வசு விடுமுறை எடுக்கவே இல்லையாமே. நான் இங்கே இருக்கும்வரை, ஒரு வாரமோ, பத்து நாட்களோ, அவளுக்கு விடுமுறை கொடுத்து விடு. உனக்குத் தேவையானதை அண்ணி செய்யட்டும். வரட்டுமா?'' என்றவன், வசுமதியிடம் திரும்பி, ''என்ன வசு, சும்மா உட்கார்ந்திருக்கிறாய். அது தான் விடுமுறைக்குத் திவாகரிடம் சொல்லிவிட்டேனே. அவன் இனிமேல் ஒன்றும் சொல்லமாட்டான். கிளம்பு,'' என்று வசுமதியின் கையை பற்றி, எழுப்பி விட்டான்.

தயக்கத்துடன் எழுந்தவளை நெருங்கி, மற்றவர் பார்வையிலிருந்து மறைத்து நின்று, ''சரியாக நடி!'' என்று முணுமுணுத்தவன், ''உன் கைப்பையை எடுத்துக் கொண்டு கிளம்புவோம். வா,'' என்று இலகுவாக அவளது தோளில் கை வைத்து, அவளது அறைக்கு நடத்திச் சென்றான்.

அவளது அறைக்குச் சென்றதும், ''என்ன, அசையாமல் உட்கார்ந்திருந்தாயே, அண்ணனிடம் பயமா?'' என்று வினவினான்.

''திவாகரன் சொல்லை நேரடியாக மீறுகிறேன் என்று கொஞ்சம் தயக்கமாகத்தான் இருந்தது,'' என்றபடி, அலமாரியைத் திறந்து கைப்பையை எடுத்தாள் அவள்.



''ஒன்றைச் சாதிக்க வேண்டுமானால், பயம், தயக்கம் எல்லாவற்றையும் அடியோடு விட்டுவிட வேண்டும். துணிந்தால் துக்கமில்லை என்பார்கள்.''

லேசாகத் தலையைத் திருப்பி, அவன் முகத்தைப் பார்த்து, ''எதற்குத் துணிந்தாலாம்?'' என்று கேட்டாள் அவள்.

''அதைச் சொன்னால், அடிக்க வருவாய். அதற்கு மேலாகக் கையில் கத்தி, துப்பாக்கியுடன் பை வேறு இருக்கிறது. எனவே, அந்த விளக்கத்தை இப்போது சொல்லி, அனாவசியமாய் ஆபத்தில் மாட்டிக் கொள்வதா? நான் மாட்டேன்ப்பா!'' என்று அஞ்சினாற்போல அவன் உரைக்க, அவள் சிரிக்க, இருவரும் நகை முகத்துடனேயே கிளம்பிச் சென்றனர்.

திட்டமிட்ட தெல்லாம் நன்றாகத்தான் திட்டமிட்டார்கள். அவர்களால் இயன்றவரை திட்டமிட்டபடியே செயலாற்றவும் செய்தார்கள்.

ஆனால், அது நடைமுறைக்கு வந்தபோது, விளைவு தான் வேறாகி, எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக முடிந்தது.

அவர்கள் திரும்பி வந்து பார்த்தபோது, திவாகரன் பயங்கர வலியுடன், படுக்கையில் கிடந்தான்.



## 18

அன்றையச் சுற்றுலா வசுமதிக்கு ஆனந்தமாக இருந்தது.

வரிசை வரிசையாகக் கண்ணுக்கெட்டிய தூரம் வரை, பல்வேறு பழ மரங்கள்.

சிலவற்றில் பிஞ்சு பிடித்திருந்தன. சிலவற்றில், காய்களின் கனத்தில், கிளைகள் வளைந்து தொங்கின.

சென்னையிலும், புறநகர்ப் பகுதியிலும், மா, கொய்யா, மாதுளை என்று பழ மரங்களை வசுமதி பார்த்ததுண்டு. அவை பழுத்திருக்கும் போதும் பார்த்திருக்கிறாள். ஆனால், இந்த மாதிரிக் கொத்துக் கொத்தாக நிறையக் காய்த்துக் காய்களே கிளைகள் போலப் பார்ப்பதற்குப் பரவசம் அளித்ததில்லை.

அவ்வப்போது உணவுக் கூடையை எடுத்து வந்தது தவிர, மாரிக்கு அதிக வேலை இருக்கவில்லை. இதை அவர்களே கூடச் செய்திருக்கலாம். இன்னோர் ஆள் தேவையே இல்லையே என்று வசுமதிக்குத் தோன்றியது.

ஒருவேளை, திவாகரன் எச்சரித்தது வசுமதி மனதில் இருக்குமோ என்று, அப்படி ஒன்றும் இல்லை என்று காட்டுவதற்காக மாரியை உடன் அழைத்து வந்திருக்கிறானோ என்று ஒருதரம் எண்ணிவிட்டு, அப்படி இராது என்ற முடிவுக்கு அவள் வந்தாள்.

மாரி வீட்டில் இருந்தால், திவாகரன் அந்தப் பையனை வைத்தே, தனது வேலைகளை நடத்திக் கொள்ளக்கூடும். கோவிந்தனால் இயலாது எனும்போது, அவன் சுபலாவின் உதவியைத்தானே நாடியாக வேண்டும்?

வசுமதி தன் கருத்தை விபாகரிடம் கூறியபோது, விழிகள் விரிய, ''சபாஷ்!'' என்றான் அவன்.

''என் திட்டத்தைச் சரியாகக் கண்டுபிடித்துவிட்டாய். ஆனால், இது எனக்கு ஆபத்தாயிற்றே!'' என்று கவலையும் பட்டான்.

''ஏன்? என்ன ஆபத்து?''

''இதே போல, நான், உனக்காக ரகசியமாகப் போட்டு வைத்திருக்கும் திட்டத்தையும், நீ கண்டுபிடித்து விட்டால், அப்புறம் என் திட்டம் வெறும் புஸ்வாணமாகிப் போய்விடாதா?''

விபாகரனின் கேள்வியில், வசுமதி திகைத்துப் போனாள்.

அவளுக்காகப் போட்டு வைத்திருக்கும் ரகசியத் திட்டமா? அது என்ன திட்டம்?

ஐயோ, அப்படியானால், திவாகரன் சொன்னது சரியேதானா? இவன் தப்பானவனேதானா?

கலங்கும்போதே, விபாகரனின் சீண்டல்கள் நினைவு வந்தன.

அன்றுகூட, எதற்குத் துணிவது என்று சொன்னால், அடிக்க வருவாள் என்றானே.

இப்போதும், அப்படித்தான் சும்மா சீண்டுகிறான்.

''அடடே, உங்களுக்குத் தெரியாதா? உங்களது ரகசியத் திட்டங்களைப் புஸ்வாணமாக்கத்தானே, நான் குங்ஃபூ படித்ததே. வருமுன் காப்போம் மாதிரி, ரொம்ப நாளைக்கு முன்பாகவே, சமாளிக்க நான் தயாராகி விட்டேன். உங்களுக்குத் தெரியாதா?'' என்று நகைத்தாள் அவள்.

''குங்ஃபூ இல்லம்மா, குஷ்பூ. அவங்கதான் டீ.வி.யிலே வருகிறவங்க!'' என்று சொல்லி, மாரி இன்னொரு சிரிப்பு மழை பொழியச் செய்தான்.

பண்ணையை ஒட்டிச் சென்ற பாதை வழியே ஜீப்பைச் செலுத்தி, ஒவ்வொரு வகைத் தோப்புகளையும் அங்கங்கே உள்ளே நடந்து சென்று பார்த்து, முடித்தனர்.

வசுமதிக்குச் சந்தோஷமாகத்தான் இருந்தது.

ஆயினும், உள்ளூர ஒரு கலக்கமும் முளை விட்டு வளரலாயிற்று.

''எதற்கும், நேற்றை விடச் சீக்கிரமாகவே வீட்டுக்குத் திரும்பிச் சென்று விடலாம். ரத்தக் கசிவுக்கு இடமே

இல்லை என்றாலும், அன்று போலத் திவாகரே தனக்கு ரத்தக் காயம் எதுவும் ஏற்படுத்திக் கொள்வாரோ என்று கவலையாக இருக்கிறது. அதனால், சீக்கிரம் போவோம்,'' என்று லேசான மன்றாடலுடன் வசுமதி வேண்ட, தோளைக் குலுக்கிவிட்டு, விபாகரன் ஜீப்பை வீடு நோக்கித் திருப்பினான்.

வீடு திரும்பும்போதே, விபாகரனின் செல் கூப்பிடத் தொடங்கி விட்டது.

ஜீப்பை நிறுத்திவிட்டுப் பார்த்தால், சுபலாதான்.

உடனே வரச் சொல்லிப் பதறினாள், கதறினாள்.

வண்டியை வேகமாக ஓட்டியபடி,''திவா விழுந்து விட்டானாம். சுபலாவைக் கிட்டே வர விடாமல் கத்து கிறானாம். அவளுக்கு என்ன செய்வது என்று தெரிய வில்லையாம்,'' என்று விவரம் தெரிவித்தான் விபாகரன்.

அவள் அதிர்வதைக் கவனித்து, ''நீ சொன்னது சரிதானோ என்றிருக்கிறது,'' என்றான் தொடர்ந்து.

வீட்டை நெருங்குகையில் அவள் புறம் திரும்பி, ''வசு, திவா என்ன நிலைமையில் இருக்கிறான் என்று தெரியாது. ஆனால், சுபலாவின் மனநிலை சரியில்லை என்பது, அவளது குரலிலேயே தெரிகிறது. அதாவது, அங்கே பிரச்சினை காத்திருக்கிறது என்பது நிச்சயம். சமயத்துக்கு ஏற்றபடி, நான் ஏதாவது சொன்னால், அவசரப்பட்டு மறுத்துவிட வேண்டாம். எதையும், நாம் பிறகு தனியாக இருந்து விவாதித்துக் கொள்ளலாம். நினைவு வைத்துக் கொள்,'' என்று மாரிக்குப் புரியாதவாறு ஆங்கிலத்தில் உரைத்தான்.

''என்ன சொல்வது என்று எண்ணியிருக்கிறீர்கள்?'' என்று அவனைப் போலவே வினவினாள் அவள்.



''அதுதான், சமயத்துக்கு ஏற்றபடி என்றேனே,'' என்று அவன் கூற, அத்தோடு வசுமதி திருப்தி அடைய வேண்டியிருந்தது.

வீட்டை அடைகையில், கோவிந்தன் வாசலிலேயே காத்திருந்தார்.

ஜீப்பை நிறுத்தியதும், அவசரமாக அருகில் ஓடி வந்தார்.

''சார், அம்மாவும், சாரும் நடக்கக் கிளம்பினாங்க. எப்படியோ தப்பாகப் பிடித்து, சார் கீழே விழுந்திட்டார். அவர் திட்ட, அம்மா அழ... எங்களாலே தூக்க முடி யலை. பின்னாடி வேலை செய்கிற பசங்களை விட்டுத் தூக்கிக் கட்டிலிலே கிடத்தினோம். சுத்தபத்தம் இல்லாத வங்க என்று, அவனுங்க உள்ளார வரதே அவருக்குப் பிடிக்காது. வலி வேறே அதிகம் போல. எல்லாமா, அவரை எட்டிப் பார்க்கக் கூடப் பயமாக இருக்கிறது,'' என்று மடமடவென்று ஒப்பித்து முடித்தார்.

இறங்கி வீட்டுப் படியேறியவாறே, ''அண்ணி எங்கே?'' என்று கேட்டான் விபாகரன்.

''அவங்க அறையிலேன்னு நினைக்கிறேன், சார். ஆனால், அவங்களும் ரொம்பக் கோபமாக இருக்கிற மாதிரிதான் தெரியுது. ராத்திரிக்கு என்ன பண்ண என்று கேட்கப் போன சமையல்காரம்மா, காதைப் பொத்திக் கிட்டு ஓடியாந்திட்டாங்க.'' என்று விவரம் சொன்னவர், கண்கள் வட்டமாய் விரிய, மாரி கேட்டுக் கொண்டு நிற்பதைக் கவனித்து, ''என்னடா, வாய் பார்க்கிறே, கொண்டு போன சாமான் எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு உள்ளே ஓடு,'' என்று, அவனை விரட்டினார்.

விபாகரன், வசுமதியைத் திரும்பிப் பார்த்துவிட்டு, ''நீ நினைத்ததோ, அன்றித் தானாக நடந்ததோ, எப்படியும் பிரச்சினை தலை தூக்கியிருக்கிறது. என்னவென்று பார்ப்போம், வா. ஆனால், நான் சொன்னதை மறக்க வேண்டாம்,'' என்றுரைத்து முன்னே சென்றான்.

திவாகரன் முகத்தைச் சுழித்துக் கொண்டு, படுத்துக் கிடந்தான்.

அவர்கள் உள்ளே சென்றதும், அவன் திரும்பிப் படுத்துப் பார்த்த விதத்தில், அவனுக்கு எலும்பில் முறிவு ஏதும் இல்லை என்று, வசுமதிக்கு நிச்சயம் ஆயிற்று.

பெரிதாக எங்கும் மூட்டுப் பிசகவும் இல்லை.

நிம்மதி யுற்றவளாக, ''என்ன மாதிரி விழுந்தீர்கள், திவாகரன்? விழுந்ததில், எங்கேயும் வலி அதிகப் பட்டிருக்கிறதா?'' என்று விசாரித்தாள்.

''பின்னே வலிக்காதா?'' என்று எரிச்சலை வெளிப்படை யாகக் காட்டினான், திவாகரன். ''ஒரு நாளும் அடுத்த வர்களுக்கு உதவி அறியாதவர்களிடம் பொறுப்பைத் தள்ளிவிட்டுப் போனாயல்லவா? பலன் என் தலையில் விடிந்தது. எவ்வளவு நன்றாகக் கவனித்தாய்! வந்தனா சொன்னதற்கு, ஒரு வார்த்தை பிசகாமல் அப்படியே நன்றாக வேலை செய்கிறாய் என்று சந்தோஷமாக நினைத்தேனே. இன்னமும் இரண்டு மூன்று மாதங்கள் உன் கவனிப்பில் இருந்தால், பழையபடி விளையாடக் கூடப் போகலாம் என்று எண்ணினேனே. தேசீய அள வில் முடியாவிட்டாலும், தமிழ்நாட்டுக் குழுவிலாவது இடம் பெறலாம் என்று கனவு கண்டேனே!''என்று கிட்டத்தட்டப் புலம்பினான் அவன்.



''திவா!'' என்றான் விபாகரன், எச்சரிப்பது போல.

''ஆமாம், உனக்கென்ன தெரியும், என் வலியும், வேதனையும்? எல்லாம், தனக்கு வந்தால்தான், தலை வலியும் காய்ச்சலும் எப்படி இருக்கும் என்று நன்றாகப் புரியும்,'' என்று இப்போது தம்பியிடம் எரிச்சல் பட்டான், திவாகரன்.

''உனக்கு வலி இல்லை என்று, இங்கு யாரும் சொல்லவில்லை. ஆனால், முதலில் அடிபட்ட அன்றே, மருத்துவமனையில் வைத்து, என்னிடம் என்ன ஒப்புக் கொண்டாய், நினைவிருக்கிறதா? இப்படி யெல்லாம் புலம்ப மாட்டேன், எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர் கொள்வேன் என்று சொல்லவில்லையா?'' என்று நினைவூட்டினான், இளையவன்.

ஆனால், திவாகரனுக்குச் சினம்தான் ஏறிக்கொண்டே போயிற்று.

''ஆமாம்பா. சொன்னேன். குணமாகிவிடும் என்று, எனக்குள்ளும் ஒரு சிறு நம்பிக்கை இருந்ததால், அப் படிச் சொன்னேன். ஆனால், வேலைக்கு வந்த நர்ஸ், குணமாகி வருகிற சமயத்தில், அதுவும் மிகவும் முக்கிய மான தருணத்தில், கைவிட்டுவிட்டுப் போய்விடுவாள் என்று எனக்குத் தெரியாதே. அதற்கு, என் அருமைத் தம்பியே காரணம் ஆவான் என்றும் தெரியாது, சாமி. இப்படி அடுத்தவர் செய்த தப்பு என் மேலேயே விடியும் என்பதும் தெரியாமல், அன்றைக்குச் சொல்லி விட்டேன் எல்லாம், இப்படி விழுந்து கிடக்கிற போதுதானே தெரிகிறது.''

''என்னண்ணா, நீ என்னவோ, வசு ஒரு நாள் விட்டுவிட்டுப் போனதால்தான், எல்லாக் கஷ்டமும்

வந்தது போலப் பேசுகிறாயே. இது கொஞ்சமும் நியாய மில்லை, தெரிந்து கொள்.'' என்றான் விபாகரனும், லேசாகக் குரலை உயர்த்தி.

ஆத்திரத்துடன் எழுந்து அமர்ந்தான், திவாகரன்.

தானாகவே எழுந்து உட்கார முடிகிறது என்று எண் ணினாள் வசுமதி.

''என்னடா, பெரிய நியாயம்? என்னைப் பார்த்துக் கொள்ள வந்த நர்ஸ், என்னை விட்டு விட்டுத் தினம் தினம் உன்னோடு ஊர் சுற்றுகிறாளே, அதுதான் நீ கண்ட நியாயமா?'' என்று கோபமாகக் கேட்டான், திவாகரன்.

''திவா, இரண்டு மாதங்களாக, வசு விடுமுறையே எடுக்கவில்லை. நீயாகவும் இரண்டு நாள் லீவு கொடுத்து, எங்கேனும் போய்விட்டு வா என்று அனுப்பியதாகவும் தெரியவில்லை. பாவம், வசு!'' என்று விபாகரன் பரிதாபப்பட்டது, எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுகிற மாதிரி, அவன் அண்ணனின் கோபத்தை அதிகப்படுத்தியது.

எல்லாமே விபாகரன் வேண்டும் என்று செய்வது போலத் தோன்ற, வசுமதி இந்தப் பேச்சில் தலை யிடாமல், தன் நோயாளியின் ஆரோக்கியக் குறிப்புகளை மட்டும் கவனித்தபடி நின்றாள்.

முகம் லேசாகச் சிவந்து தெரிவது தவிர, உடம்பில் அடிபட்ட கன்றலோ, காயமோ எதுவும் தெரியவில்லை. உதடுகளும் வெளுப்பின்றி, ஆரோக்கியமான நிறத்தி லேயே இருந்தன.

பேச்சுக்கேற்பக் கை கால்களை அசைப்பதும், அதற்கு ஏற்றவாறு உடம்பின் அசைவுகளும் இயல்பாக இருக் கின்றன. குரலிலும் வலி தெரியவில்லை.



முகச் சிவப்பு, இந்தக் கோபத்தினால் மட்டுமே ஏற் பட்டிருக்கலாம்.

ஆகப், பயப்படும்படியாகத் திவாகரனுக்கு ஒன்றும் இல்லை.

பிறகு எதற்கு இந்த அலட்டல்?

விபாகரும், ஏன்தான் விடாமல் கிளப்பி விடு கிறானோ? ஏற்கெனவே எச்சரித்து விட்டதால், குறுக் கிட்டு எதுவும் சொல்லவும் முடியவில்லை.

ஒன்றும் பேசவும் முடியாமல், அங்கிருந்து ஒதுங்கிப் போகவும் முடியாமல், வசுமதி திணறுகையில், சகோதரர் களின் பேச்சு தொடர்ந்தது.

''லீவு என்ன, லீவு? இதுபோலத் தனிப்பட்ட வேலைக் கென்று வரும்போது, லீவெல்லாம் கொடுக்கமாட்டார்கள்.''

''ரொம்பக் கறாராகப் பேசுகிறாயே, திவா! சரி, லீவு வேண்டாம். பதில் ஆள் வைத்து விட்டுப் போகலாம் அல்லவா? அண்ணியிடம் பொறுப்பை விட்டு விட்டுத் தானே வசு வந்தாள்.''

''ரொம்பப் பொருத்தமான ஆள்!'' என்றான் திவா கரன் ஏளனமாக. ''அவள் என்ன செய்தாள், தெரியுமா? ஊன்றுகோல் இல்லாமல் நான் நடக்கிறேனா என்று சோதித்தாள். கோல் இருக்கும் பக்கம் வந்து, எனக்கு உதவுகிற சாக்கில், அதைப் பிடித்துக் கொண்டாள். அப்புறம், அதை நான் எங்கே நகர்த்த முடியும்? விழுந்து விட்டேன். நானாக விழுந்தேனா, அவளாகத் தள்ளி விட்டாளா என்று அதில்கூட எனக்குச் சந்தேகம்...'' என்ற திவாகரனின் பேச்சில் குறுக்கிட்டு, ''ஐயோ, என்ன அநியாயமாகப் பேசுகிறார், பாருங்கள் விபாகர். நான் அப்படிப்பட்டவளா? அவரை விழ வைப்பேனா? எல்லாம் பொய்!'' கத்திக் கூச்சலிட்டாள் சுபலா.

மைத்துனன் வந்து விட்டது தெரிந்து, அவனிடம் சொல்லும்போதேனும் கணவன் உடல் நிலையைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ளலாம் என்று அவள் வந்திருந்தாள். ஆனால், கணவன் சொன்ன பழி, அவளைக் கொதிக்க வைத்து விட்டது போலும்..

''எல்லாம் செய்வாய்!'' என்றான், திவாகரனும் வெறுப்பாக. ''என்ன மாதிரி நிலையில், முகத்தைத் திருப்பிக் கொண்டு போனவள் நீ! இப்போது என்னதான் செய்ய மாட்டாய்? தயவு பண்ணி, இனியேனும் என் கண்ணில் படாமல், எங்கேனும் போய்த் தொலைந்தால் சரி!'' என்றவன், மனைவி ஏதோ சொல்ல முயல்வதைக் காதிலேயே வாங்காமல், ''யார், எப்படியோ? இனி நர்ஸ் தான் வசுமதிதான் நடப்பதற்கு எனக்கு உதவி செய்ய வேண்டும்,'' என்று முடிவாகச் சொன்னான் திவாகரன்.

''ஆமாம், ஆமாம். அவளேதான் வர வேண்டும். அப்போதுதானே, நடக்கிற சாக்கில், வெகுநேரம், அவளைக் கட்டிப் பிடிக்க முடியும். நர்சாக வந்து வீட்டுக்கா...'' என்று கோபமும் கொதிப்புமாக, கேவலமாகப் பேசலானாள் சுபலா.

ஆனால், அவளது வாய் வார்த்தை முடியும் முன்னரே, ''அண்ணி, வாயை மூடு. இன்னொரு தரம், வசுமதியைத் தரக்குறைவாகப் பேசினால், நான் பொறுத்துக் கொண்டு இருக்க மாட்டேன். ஏனென்றால்... இரண்டு பேருமே நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்க. வசுமதி என் வருங்கால மனைவி!'' என்று அறிவித்து, வசுமதி உட்பட, அங்கிருந்த எல்லோரையுமே, விபாகரன் அதிர வைத்தான்.

சற்று நேரம் அங்கே நிசப்தம் நிலவியது.

ஊசி விழுந்தால் கேட்கும் என்பார்களே, அது போன்ற ஓசையற்ற நிலை.





# 19

நல்ல வேளையாக, விபாகரனின் அறிவிப்பினால் அதிர்ந்து போன மற்ற இருவரும், தங்களை அதிர வைத்தவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்ததால், வசுமதிக்கும், அதே அளவு அதிர்ச்சியே என்பது, அவர்களுக்குத் தெரியாது போயிற்று.

மறுத்துப் பேச வேண்டாம் என்றால், இதையுமா?

நெஞ்சு படபடவென்று, கட்டுக்கடங்காமல் அடித்துக் கொண்டது.

விபாகரன் கேட்டுக் கொண்டதையும் மீறாமல், அதே சமயம் இந்த அறிவிப்பையும் ஒத்துக் கொள்ளாத விதமாக, வார்த்தைகளை மனதுள் அமைத்தபடி, வசுமதி அவனைப் பார்த்தால், அவன் அவளது பக்கமே திரும்பவில்லை.

மாறாக, ஒரு தீவிரத்துடன் அவனுடைய அண்ணனையும், அவன் மனைவியையுமே பார்த்துக் கொண்டிருந்தான்.

இவர்களுக்காகத்தானே என்று அவளிடம் சொல்லாமல் சொல்லுகிறானோ?

ஆனாலும் மனைவி என்பது மிகவும் அதிகப்படி அல்லவா?

நம்புவார்களா?

இந்தக் கேள்வி தோன்றியதும், அவளது பார்வையும் சுபலா, திவாகரனைக் கூர்ந்து ஆராயத் தொடங்கியது.

திவாகரன் முகத்தில் அவநம்பிக்கைதான் தெரிந்தது. 'என்னிடமே என்னடா கதை சொல்லுகிறாய்!' என்பது போன்ற தோற்றம். ஊடே ஒரு திகைப்பும் - தைரியமாகச் சொல்லுகிறானே... எப்படி?

அவர்கள் இருவரில், சுபலாவின் முகத் தோற்றம் தான், வசுமதியைச் சும்மா இருக்கச் செய்தது எனலாம்.

ஆவல், ஆனந்தம், அப்பாடி என்கிற மாதிரி நிம்மதி. கூடவே லேசான அச்சம் கலந்த நம்பிக்கை. இவன் சொன்னது நிஜம்தானே! இல்லை என்று சொல்லிவிட மாட்டானே... என்பதுபோல,

பாவம், கணவன் நர்சிடம் சாயத் தொடங்கி விட்டானோ என்று ரொம்பவே பயந்திருந்தாள் போல.

போல என்ன? அப்படி எண்ணித்தானே, விபா கரனை அவள் வரவழைத்ததே.

இப்போது, நர்ஸ் விலகிவிட்டால், கணவனின் அன்பு மீண்டும் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பு. பாவம், பார்க் கலாம்!

சரியாகச் சொல்லப் போனால், விபாகரின் திட்டமும் அதுவேதானே! திட்டத்தின் ஒரு பகுதிதான் இந்த அறிவிப்பும். நினைத்தது நடக்கிறதா என்று பார்க்கலாம்.

மற்றப்படி, நெருப்பு என்று சொன்னால் வாய் வெந்துவிடப் போவது இல்லையே.

இந்த எண்ணம் வந்ததும், வசுமதியின் முகத்தில் தெளிவு வந்தது.

மருத்துவ மனையில், சர்ஜிகல் வார்டுப் பணி நாட் களில், அறுவைச் சிகிச்சை நடக்கும்போது, கண்களில் காட்டும் தெளிவு.

என்னை நீ நம்பிச் செயல் படலாம் என்று சொல்லாமல் சொல்வது.

முதலில் மௌனத்தைக் கலைத்தது, திவாகரன்தான். "நீ சொல்வது பொய்!" என்றான், நிச்சயமான குரலில்.

"பொய்யா? அப்படியில்லையே, விபா?" என்று கலக்கத்தை மறைக்க முயன்றபடி கேட்டாள் சுபலா.

"பொய்யா?" என்று வியப்புக் காட்டினான் விபாகரன். "நான் ஏன் பொய் சொல்லப் போகிறேன்?"

"நிச்சயமாகப் பொய்தான். என்னவோ, யாருக்கோ உதவி செய்வதாக எண்ணிக் கொண்டு, நாடகம் ஆடுகிறான். அப்படித்தானே, விபு? உன்னை எனக்குத் தெரியாதா? அனாவசியமாக நடிக்காதே!" என்றான் மூத்தவன், அலட்சியமாக.

"விபா..." என்று கவலையுடன் மைத்துனன் முகத்தைப் பார்த்தாள், முன்னவன் மனைவி.

"திவா என்ன பேசுகிறான் என்றே புரியவில்லை," என்று தோளைக் குலுக்கினான் விபாகரன்.

"எல்லாம் புரிகிறது. ஆனால் தூங்குகிறவனைத் தானே எழுப்ப முடியும்? பார்த்து மூன்றே நாட்களில், வருங்கால மனைவி என்றால், யார் நம்புவது?" என்று ஆத்திரத்துடன் கேட்டான், அண்ணன். "யார் நம்பினா லும், நம்பாவிட்டாலும், நீ நம்பியாக வேண்டும். திவா. சந்தித்து இரண்டே நாட்களில் திருமணம் ஆகிவிட்டது போலப் பழகி, அதன்பின் அப்பாவிடம் என்னைக் காவடி எடுக்கச் சொன்னவன் நீதானே!" என்று தம்பி மடக்கிவிட, சில கணங்கள், அண்ணனுக்கு வாயடைத்துப் போயிற்று.

பிறகு, "அந்த அவசரம் எவ்வளவு தப்பாகிப் போயிற்று என்று எனக்கல்லவா தெரியும்," என்று இறங்கிய குரலில் அவன் கூற, சுபலாவின் முகம் வாடியது.

உடனே, "தப்பா, இல்லையா என்று அவ்வளவு அவசரப் பட்டு முடிவெடுக்கக் கூடாது," என்றான், விபாகரன்.

தம்பியின் அவசரமான பதில் அண்ணனின் சந்தேகத்தை அதிகப்படுத்தியது.

"அதுதான் விஷயம். இல்லையா? இவள் முட்டாள்தனமாகச் சந்தேகப்பட்டதைப் பொய்யாக்கி, நான் மடத்தனமாகச் செய்த திருமணத்தைக் காப்பாற்ற நடிக்கும் நாடகம் இது. அப்படித்தானே? உன் திருமணம் பற்றி, நீ சொன்னது பொய்தானே?"

விபாகரனுடைய அண்ணனும் கெட்டிக்காரன்தான் என்று எண்ணினாள் வசுமதி. உடனே பாயின்டைப் பிடித்து விட்டானே.

"எத்தனை தரம், திரும்பத் திரும்ப, இப்படியே கேட்டுக் கொண்டே இருக்கப் போகிறாய்?" என்று சலிப்புக் காட்டிக் கேட்டான், விபாகர்.

"இனி உன்னைக் கேட்கவில்லை," என்று வசுமதியிடம் திரும்பினான் திவாகரன். "சொல், வசுமதி. விபு சொன்னது பொய்தானே?" என்று அவளிடம் கேட்டான்.

ஓரளவு வசுமதி இதை எதிர்பார்த்திருந்ததால், உரிய பதிலையும் அவள் யோசித்து வைத்திருந்தாள்.

"உங்கள் தம்பி சொன்னதைப் பற்றி என்னிடம் கேட்கிறீர்களே, நான் அதை மறுத்தேனா?" என்று அவள் தயங்காமல் பதிலிறுத்ததும், திவாகரன் சற்றுத் திகைத்தான்.

"அப்படியானால், மெய்யாகவே நீங்கள் இருவரும் மணந்து கொள்ளப் போகிறீர்கள் என்கிறாயா?"

"இதே கேள்வியை என்னிடமும் பல முறை கேட்பீர்கள் போலிருக்கிறதே."



"எனக்கு நம்பிக்கை வந்துவிட்டால், அதற்குப் பிறகு, ஒரு தரம் கூடக் கேட்க மாட்டேன்," என்ற திவாகரன், தம்பியின் பக்கம் திரும்பினான். "வசுமதி உன் வருங்கால மனைவி என்றாயே, அது நிகழ்காலம் ஆவது எப்போது?" என்று வினவினான்.

உள்ளூரத் திடுக்குற்ற போதும், உதட்டுப் புன்னகை வாடாமல் காத்து, வசுமதி விபாகரனைப் பார்த்தாள்.

இதற்கு என்ன சொல்லப் போகிறான்?

நெருப்பு சுடும் என்று சொன்னால், வாய் வெந்து விடாதுதானே என்று சொல்லப்போக, அதை நிருபித்துக் காட்டு என்றால் எப்படிச் சமாளிப்பது?

விபாகரனாலும், இதற்கு உடனடியாகப் பதில் சொல்ல முடியவில்லை போலும். "திருமணம் நடக்கும்போது!" என்று சிரித்துச் சமாளித்தான்.

"ரொம்ப நகைச்சுவையாகப் பதில் சொல்லிச் சமாளித்துவிட்டதாக எண்ணமா? திருமணத்தை எப்போது நடத்துவதாக இருக்கிறீர்கள்? தேதியைச் சொல்லு," என்று கறாராகக் கேட்டான் மூத்தவன்.

"என்னண்ணா ஒரேயடியாக விரட்டுகிறாய். அதெல்லாம் நிதானமாக யோசித்து, அதன் பிறகுதானே செய்ய வேண்டும்?" என்று சமாளிக்க முயன்றான் தம்பி.

ஏளனமாகச் சிரித்தான் திவாகரன். "இந்தக் கதை என்னிடம் வேண்டாம், தம்பி. சந்தித்து மூன்று நாட்களுக்குள்ளாக, வருங்கால மனைவி என்கிறவரை தீர்மானித்து ஆயிற்று. ஆனால், திருமணத்தை மெல்ல, நிதானமாக யோசித்துச் செய்வதாம். எனக்கா காது குத்துகிறாய்? இந்த நிலையெல்லாம் நானும் கடந்து

வந்திருக்கிறேன் என்பதை மறந்து பேசாதே,'' என்றான் அவன்.

இளையவனுக்குப் பேச இடம் கொடாமல், ''ஒன்று, நீங்கள் இருவரும் மெய்யாகவே காதலிக்கிறீர்கள் என்றால், திருமணம் எப்போது... எவ்வளவு சீக்கிரம் என்று சொல்லு. அல்லது, முழுக்க முழுக்க, இது ஒரு நாடகம் என்று ஒத்துக்கொள்,'' என்று முடித்தான்.

திவாகரன் சொன்ன 'கடந்து வந்த நிலை'யின் ஞாபகத் தாலோ, என்னவோ, இப்போது சுபலாவும் சந்தேக மாகப் பார்த்தாள். பழைய நினைவில், வருத்தமாகவும்.

விபாகரன் மாட்டிக் கொண்டான் என்று புரிந்து, ''உங்கள் தந்தையின் சம்மதம் பெற்ற பிறகு, அதை முடிவு செய்வதாக இருக்கிறோம்,'' என்றாள் வசுமதி.

''இது அடுத்த காது குத்தா? பிள்ளைகளின் திருமண விஷயத்தில் தலையிட்டு அப்பா குட்டை குழப்பமாட் டார் என்பது, எங்கள் திருமணத்தில் இருந்தே உனக்குத் தெரிந்திருக்கும். உனக்கு வந்தனாவின் சிபாரிசு வேறு இருக்கும்போது, அப்பாவின் சம்மதத்துக்காகக் காத் திருப்பது என்றால், அது சும்மா கதை. அடியோடு நம்ப முடியாது,'' என்றான் திவாகரன், தீர்மானமாக.

''எப்படியும் வசுவுடைய உறவினர்...''

''வசுமதி நம் அப்பாவைச் சொல்லுகிறாள். நீ அவ ளுடைய சொந்தக்காரர்களைச் சாக்குக் காட்டுகிறாயா? வந்தனாவின் கடிதம் நினைவில்லையா? சொல்லிக் கொள்கிற மாதிரி, வசுமதிக்கு உறவினர் கிடையாது. இருவரும் மாற்றி மாற்றித் தள்ளிப் போட முயற்சிப் பதைப் பார்த்தால், என் சந்தேகம் சரியென்றுதான் தோன்றுகிறது. எல்லாம் நடிப்புதானே? காரணம் நான் சொன்னதுதானே?''

அலுப்புடன் சத்தமாக உச்சுக் கொட்டினான், விபா கரன். ''ஒரு சந்தோஷமான சேதி சொன்னால், வாழ்த்து வீர்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் நம்ப முடி யாது, பொய் என்று கீறல் விழுந்த பழைய கால கிராமஃபோன் ரிக்கார்டு மாதிரி, அதையே சொல்லி, எரிச்சல் மூட்டுகிறாய். இருவருமேதான். மற்ற எதில் ஒற்றுமை இருக்கிறதோ, இல்லையோ, இந்த ஒன்றில், கணவன், மனைவி இருவருமே, ரொம்பவே ஒத்..துப் போகிறீர்கள். நியாயமான காரணங்களைக்கூட நம்ப முடியாது என்கிறீர்கள். போகட்டும், இப்போது உங் களை நம்ப வைக்க, நான் என்ன செய்ய வேண்டும்? இன்ன தேதியில் திருமணம் என்று சொல்ல வேண்டும் என்கிறீர்களா? அதுதானே? சொல்லுங்கள். உங்களில் யாருக்குத் திருமணத்துக்கான நல்ல நாள் பார்க்கத் தெரியும்? எவ்வளவு சீக்கிரமாக முகூர்த்தம் கிடைக் கிறதோ, அன்றே திருமணத்தை வைத்துக் கொள்ள லாம்,'' என்று கூறியவன், கையை நீட்டி, வசுமதியைத் தன் அருகே இழுத்துக் கொண்டான்.

உடனடியாக உற்சாகத்துடன் நிமிர்ந்து, ''இந்தப் பக்கம் ஒரு பிள்ளையார் கோயில் இருக்கிறது. அதன் அர்ச்சகர்தான் இங்கு நடக்கும் திருமணங்களை நடத்தி வைக்கிறவர் என்று, கோவிந்தன் கூறுவார். அவரை அழைத்து வரச் சொல்லுகிறேன்,'' என்று கூறிவிட்டுச் சுபலா வேகமாக வெளியே சென்றாள்.

என்னவோ, திருமணத்தையே அவள்தான் நடத்தப் போவது போல.

''என்ன... நிம்மதிதானா?'' என்று அண்ணனைப் பார்த்து முறுவலித்தான், விபாகரன்.

பதிலாகத் திவாகரனின் முகமும் மலர்ந்தது.

''வந்து அன்று, சுபிக்காகப் பெரிதாக வக்காலத்து வாங்கிப் பேசினாயா, தொடர்ந்து நடந்ததைப் பார்த்ததும், சந்தேகமாகி விட்டது. அத்தோடு...'' என்றவனின் முறுவல் சட்டென மறைந்தது.

வசுமதியின் முகத்தைப் பார்த்துவிட்டு, ''அதைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறாயா, வசுமதி? சாரி விபா. உள்ளூர, என் திருமண வாழ்வு நிலைப்பதற்காக, நீ எதுவும் செய்வாய் என்ற எண்ணம் எனக்கு. அத்தோடு, சுபலாவின் தப்பான சந்தேகத்தை நம்பி, அவளுக்காக, இந்த அறியாப் பெண்ணின் மனதைக் கலைக்கிறாயோ என்று தோன்றியதா, அந்த ஆத்திரத்தில், நீ மோசமானவன், ஆசைகாட்டிப் பெண்களை அழ வைப்பவன், கேட்டால், அப்படி அழுகிற பெண்களை எல்லாம் மணப்பதானால், அந்தப்புரம் கட்ட வேண்டும் என்றாய் என்று... என்று கண்டபடி, கதை கட்டிவிட்டேன். எல்லாம் வெறும் கதை,வசுமதி. அதை முழுக்க மறந்துவிடு. எல்லாம் பொய்,'' என்றான் திவாகரன்.

விபாகரன் சிரித்தான்.

வசுமதியின் தோளைச் சுற்றியிருந்த கையால், அணைப்பை ஒரு தரம் லேசாக இறுக்கிவிட்டு, ''எல்லாமே பொய் அல்ல, வசு. என்னைத் தப்பாக நினைப்பாயோ என்று அண்ணன் முழுப் பழியையும் தன் மீது ஏற்கிறான். அவன் சொன்ன மாதிரி அழுத பெண்கள் உண்டு. அவர்கள் எல்லோரையும் மணப்பது என்றால், அந்தப்புரம் அமைத்தாக வேண்டும் என்று நான் சொன்னதும் மெய்யே. ஆனால், உண்மை என்னவென்றால், அவர்களில் யாருக்குமே நான் ஆசை காட்டியதில்லை. திவா விளையாட்டில் போய் விடுவான். அப்பாவின் திரண்ட தொழில் சாம்ராஜ்யத் தலைமை என்னதாக ஆகும். மகாராணியாகக் கோலோச்சலாம் என்று, அவரவர்களாகவோ, பெற்றோரால் உந்தப்பட்டோ, வந்தவர்கள், அவர்கள். கண்ணைக் காட்டினால், நான் காலடியில் விழுந்து விடுவேன் என்று எதிர்பார்த்தார்கள். நினைத்தது நடக்கவில்லை என்றால், அடுத்த ஆயுதம் அழுகைதானே! சில பேர் அண்ணனிடம் போயிருக்கிறார்கள். இவன் உபதேசம் போலத் தொடங்கவும், எனக்கு எரிச்சல் வந்து விட்டது. 'அந்தப்புரம்' என்று அலட்சியமாகக் கிண்டலடித்துவிட்டுப் போய்விட்டேன். நடந்தது இதுதான்.

''அண்ணனிடம் போனது போல, அப்பாவிடம் போனவர்களும் உண்டு. அவரும், ஏற்கெனவே எங்கள் இருவரிடமும் திருமணம் செய்து கொள்ளச் சொல்லி அலுத்தவர்.

''அண்ணன் திருமணத்துக்கு, அவர் சட்டென ஒத்துக் கொண்டதற்கு, ஓரளவு அதுவும் காரணம். அத்தோடு, அப்பா எதிலும் தலையிடுகிறவரும் அல்ல...'' என்று சொல்லிக் கொண்டே வந்த விபாகரன் மறுபடியும் சிரித்தான்.

''இந்த மூன்று நாட்களும் நாம் என்னதான் பேசினோமோ, இதெல்லாம் உன்னிடம் சொல்லவே மறந்து விட்டேனே, வசு!'' என்று வியந்தான்.

''ஆமாமடா. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருப்பதிலும், நீ அழகு, நான் ஏங்கினேன் என்று பிதற்றுவதிலுமே, பொழுது மாயமாய் மறைந்து விடும். உருப்படியான விஷயங்கள் நினைவு கூட வராது,'' என்று திவாகரன் ஒத்துப் பேசிச் சிரித்த போதுதான், விபாகர் சொன்னது வெறும் சமாளிப்பு மட்டுமின்றி, அவனுடைய அண்ணனுக்காகவும் என்று வசுமதி உணர்ந்தாள்.

சொல்லப் போனால், எல்லாமே அண்ணனுக்காகத் தொடங்கியதுதானே.

இரவானாலும் காத்திருந்து, அர்ச்சகரைக் கூட்டி வருவதாகக் கோவிந்தன் சென்றிருப்பதைச் சொல்ல வந்த சுபலாவிடம், இது மறுபடி சொல்லப்பட, பழைய நினைவுகளோடு மூத்த ஜோடி, ஆத்திரமோ, வருத்தமோ இன்றி, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டது, ஓர் ஊக்க போனசாக அமைந்தது.

ஆனால், இதுவே முடிவு அல்ல. முக்கால் கிணறு தாண்டிய கதைதான். இதற்கு மேல் விபாகரனின் திட்டம் என்னவாக இருக்கும்? என்ன யோசித்தும் வசுமதிக்குப் புரியவில்லை.



20

அந்தப் பகுதியில் பண்ணை வைத்திருப்பவர்கள் எல்லோருமே வசதி படைத்தவர்கள். அவர்களது உபயத்தால்தான் கோவில் பணிகள் நல்ல விதமாக நடந்து வந்தன. ஒவ்வொருவர் வீட்டு நல்லது கெட்டதிலும், அர்ச்சகரின் பணி நிச்சயம் இருக்கும்.

அத்தோடு, கோவிந்தனும் வீட்டிலேயே காத்திருக்கவும், வெளிச்சம் மங்கி வந்த நேரத்திலும், அர்ச்சகர் கம்பளியும் கையுமாகக் கிளம்பி வந்து விட்டார்.

அவராவது, எங்கேனும் வெளியூர் போயிருக்கக் கூடாதா என்று உள்ளூர வேண்டிக் கொண்டிருந்த வசுமதிக்கு, அவரைப் பார்த்ததும், இன்னமும் மனம் கலங்கிப் போயிற்று.

ஆனால், அதை மற்றவர்களுக்கு மறைத்து, உற்சாகமாகக் காட்டிக் கொள்ளவும் வேண்டியிருந்தது.

அவளாகக் கொஞ்சம் மறந்தாலும், விபாகரனின் கை அழுத்தம், அவ்வப்போது அவளுக்கு நடிப்பை நினைவுபடுத்தியதுதான் அவளுக்கு ஆத்திரமூட்டியது.

மறுத்துப் பேசாதே என்றால், எதையெல்லாம் என்று இல்லையா? எல்லை மீறிப் போய் விட்டு, இளித்துக் கொண்டும் இரு என்றால், அவளுக்கு எவ்வளவு சிரமமாக இருக்கும் என்று யோசிக்க வேண்டாமா?

இருக்கட்டும். வாய்ப்புக் கிடைத்ததும் நன்றாகக் கேட்க வேண்டும்.

உள்ளூரக் கறுவியபோதும், வசுமதி வெளியே எதையும் காட்டாமல், விபாகரனின் குறிப்புகளுக்கேற்பவே நடந்து கொண்டாள்.

அர்ச்சகர் வந்தது மட்டுமின்றி, பதினைந்து நாட்களில், ஒரு நல்ல முகூர்த்தம் இருப்பதாகச் சொல்லி, நேரத்தையும் குறித்துவிட்டுப் போக, மூத்த ஜோடிக்கு மிகுந்த ஆனந்தம்.

''பதினைந்து நாட்களுக்கு முன்னதாக நாள் இல்லையா?'' என்று மட்டும் குறைப்பட்டுக் கொண்டார்கள்.

''உங்கள் திருமணம் நிச்சயித்தபோது, பன்னிரண்டு நாட்கள் இருந்தன. நினைவிருக்கிறதா?'' என்று விபாகர் எடுத்துக் கொடுத்தான்.

முகம் மலர, '''பன்..னிரண்டு நாட்களா? இடையில் நல்ல நாள் இல்லவே இல்லையா?' என்று உன் அண்ணி புலம்பித் தள்ளினாள், தெரியுமா?'' என்று சிரித்தான் திவாகரன். ''கேட்டுக் கேட்டு, என் காதே ரிப்பேராகி விட்டது.''

உற்சாகத்துடன் திருப்பினாள் மனைவி. ''என்னைச் சொல்கிறாரே. என்னவோ, பாரதியார் பாட்டாமே, 'ஆத்திரம் கொண்டவர்க்கே சாத்திரம் ஏதுக்கடி' என்று? அந்தப் பாட்டைக் கேட்டே, என் காது ஓட்டை விழுந்து விட்டது. தெரியுமா, வசுமதி?'' என்று முதல் முறையாக வசுமதியிடம் கலகலப்பாகப் பேசினாள் சுபலா.

''ஓகோ! நான் மட்டும்தான் பாடினேனாக்கும்!'' என்று திவாகரனும் விடாது தொடர்ந்தான்.

திவாகரன் ஜோடியின் முன் கதை தெரிந்ததால், வசுமதியின் முகம்தான் சிவந்து போயிற்று.

இந்த வகையில் தொடர்ந்து பேச இயலாததோடு, திருமண நாளைத் தள்ளிப் போடும் முயற்சியாக, ''பெரிய தொழில் சாம்ராஜ்யம் என்கிறீர்கள். அது தொடர்பாக எல்லோரையும் கூப்பிட வேண்டாமா? அதற்கு இந்த அவகாசம் போதுமா?'' என்று கவலை காட்டினாள், அவள்.

''ஆ...'' என்று விபாகர் தொடங்கு முன், அவன் அண்ணன் குறுக்கிட்டு, ''அவர்களைத் திருமணத்துக்கே அழைத்தாக வேண்டும் என்று இல்லை, வசும்மா! நீங்கள் தேனிலவெல்லாம் சுற்றிவிட்டு வந்து, ஒரு வரவேற்பைச் சிறப்பாக வைத்து விட்டால் போதும். திருமணத்துக்கே கூப்பிட்டால்கூடப் பெரும்பாலும் அந்தக் கூட்டம் வரவேற்புக்குத்தான் வருவார்கள். அவர்களுக்குத் திருமணம் நடந்ததை அறிவிக்கும்



விதமாகப் பெரிய விருந்து வைக்க வேண்டும், வெகு சிறப்பாக. அதுதான் முக்கியம்,'' என்று விவரித்தான்.

''ஆனால் சொந்...'' என்று அவள் மீண்டும் தொடங்கியபோது, அவள் கையை அழுத்தி, விபாகரன் அவளது பேச்சை நிறுத்தினான்.

''அண்ணா, நீங்கள் இருவரும் மற்ற ஏற்பாடுகளைக் கவனியுங்கள். நான் போய், அப்பாவிடம் நேரில் சொல்லி, அவர் வருவதற்கு ஏற்பாடு செய்கிறேன். இயந்திரத் தொழிற்சாலையை மேற்பார்வையிடச் சரியான ஆள் இல்லாமல் விட்டு விட்டு அப்பாவும், நானும் சேர்ந்து இங்கே இருக்க முடியாது என்று உனக்கே தெரியும்,'' என்று அவன் கூற, மூத்தவனும் தலையாட்டினான்.

வசுமதி சட்டெனப் பயந்து விட்டாள்.

பிரச்சினையை இந்த அளவுக்குக் கொண்டு வந்து விட்டு, அவளைத் தனியே இங்கே இருக்க வைத்து, இவன் போய் விடுவதா?

என்னென்ன தகராறு வருமோ? அவள் தனியாக எப்படிச் சமாளிப்பாள்?

ஒன்றும் முடியாது என்று உதறிவிட்டுப் போய் ஒளிவதற்கு அவளுக்கு வேறு இடமும் இல்லை. ஒரேயடியாக அப்படிப் போய்விட அவளுக்கு மனமும் வரவில்லை.

அதுவும், எலியும் பூனையுமாக இருந்தவர்கள் சிரித்துப் பேசத் தொடங்கும் இந்த நேரத்தில், அதை எப்படிக் கலைப்பது?

ஆனால், எவ்வளவு காலம் இந்த நாடகத்தைத் தொடர்ந்து நடத்த முடியும்?

காலம் யாருக்காகவும் நிற்பதில்லை. இந்த இடைப்பட்ட நாட்களும் கூடக் கடந்து சென்று விடும். அந்தப்

பதினைந்தாவது நாளும் விடியும். அப்போது என்ன செய்வதாக அவனது உத்தேசம்?

அதை அவளுக்கும் விபாகர் தெரிவித்தாக வேண்டும் அல்லவா?

மற்ற இருவர் முன்னிலையில் எதையும் அவளால் பேசவும் முடியவில்லை.

எதையும் சொல்லாமல், விபாகர் கிளம்பி விடக் கூடாதே என்ற பயத்தில், ''எப்போது கிளம்ப வேண்டும்? கிளம்புமுன், உங்களிடம் பேச வேண்டுமே,'' என்று கவலையுடன் கேட்டாள்.

மற்ற இருவரும் சிரிக்கவும், முகம் சிவந்து, ''சென்னையில் சில சாமான்கள் வாங்க வேண்டும். அதைச் சொல்லத்தான்,'' என்று வசுமதி சமாளித்ததை, அவர்கள் நம்பத் தயாரில்லை என்பது நன்றாகவே புரிந்தது.

அதற்குச் சரியாக, விபாகரன் எழுந்து, அவளைக் கையைப் பற்றி எழுப்பிவிட்டு, ''மேலிடத்துக் கட்டளை. என்னவென்று கேட்டு வருகிறேன், அண்ணா. வாங்கம்மா,'' என்று பணிவாகச் சொல்லி, அவளது கையைப் பற்றி நடக்கவும், பின்னிருந்து ஒலித்த சிரிப்பொலி அவளது ஆத்திரத்தை அதிகப்படுத்தியது.

அறையில் இருந்தவர்களின் கண் மறைந்ததும், வெடுக்கெனக் கையை இழுத்து விடுவித்துக் கொண்டாள்.

அறைக்குள் சென்றதுமே, ''என்ன இது? மனைவி, அது இது என்று. போதாததற்குப் பதினைந்து நாட்களில் திருமணம் என்று, அது வேறு கூத்து!'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

அவன் நிதானமாகவே பதில் சொன்னான். ''நீதான் பார்த்தாயல்லவா? வேறு எந்த வார்த்தைக்கும் மதிப்பே இல்லை. வேறு வழி இல்லாமல்தான்.''



''ஆனால், நீங்கள் இதை எதிர்பார்த்துத்தானே, மறுத்துப் பேச வேண்டாம் என்று என்னிடம் கேட்டீர்கள்.''

''நம்பு, வசு. அப்போது, இந்த அளவுக்கு நான் எதிர்பார்க்கவில்லை., வருங்கால மனைவி என்பதிலேயே சமாளித்து விடலாம் என்று நினைத்தேன். ஆனால், அவர்கள் இரண்டு பேரும் பேசிய விதத்துக்கு, வேறு என்ன சொல்லிச் சமாளித்திருக்க முடியும்? நீயே சொல்லு,'' என்றான் விபாகரன்.

''என்னத்தைச் சமாளித்தீர்கள்? பதினைந்து நாட்களில் திருமணம் என்கிற வரையில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறீர்கள். பதினைந்து நாட்களில் என்ன அதிசயம் நிகழப் போகிறது என்கிறீர்கள்?''

''பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும், வசுமதி.''

''எதைப் பொறுத்திருந்து பார்ப்பது? நான் கல்யாண அலங்காரத்தில், மணவறையில், தன்னந்தனியே அவமானப் பட்டு நிற்பதையா? என்னை இங்கே நன்றாக மாட்டி வைத்துவிட்டு, நீங்கள் பாட்டில் நிம்மதியாகக் கிளம்பி விட்டீர்களே!'' என்று குற்றம் சாட்டிப் பொருமினாள், வசுமதி.

''அப்படியெல்லாம் நிற்க மாட்டாய். நான் சீக்கிரமே வந்து விடுவேன், வசு,'' என்றான் அவன்.

''எப்படி நம்புவது?'' என்று பெரிய விழிகளால் அவனை உற்றுப் பார்த்துக் கேட்டாள் அவள்.

''இதே கேள்வியை முன்பும் கேட்டிருக்கிறாய். மூன்று பகல்கள் கிட்டத்தட்டச் சேர்ந்தே கழித்திருக்கிறோம். அருகருகே இருந்திருக்கிறோம். இன்னமும் அதே கேள்வியா? என் மேல் நம்பிக்கை இல்லை என்றால்,

நீயும் என்னோடு சென்னைக்கு வா,'' என்றான் விபாகரன்.

''நான் அங்கே வர மாட்டேன்,'' என்ற பதில், கணம் தாமதியாமல் வந்தது.

அவன் விழியிடுக்கி நோக்குகையில், அவளே தொடர்ந்து பேசினாள்.

''இந்த வருங்கால மனைவி கதையெல்லாம் சரிப் பட்டு வராது, விபாகர். இது எனக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது என்று, உங்களுக்குப் புரிய வில்லையே. ப்ளீஸ், நிறுத்தி விடுங்கள். உங்கள் அண்ணனிடம் உட்கார்ந்து பேசி, அவர்களுக்கு என்ன பிரச்சினை என்று கண்டுபிடித்துப் பிரச்சினையைத் தீருங்கள். அதுதான் நல்லது,'' என்றாள் வசுமதி.

''அந்த வழி சரிப்படவில்லை என்றுதானே, இந்த நாடகம் தொடங்கியதே.''

''இருக்கலாம். ஆனால், இந்தப் பதினைந்து நாட்களுக்குள் பிரச்சினை சரியாகவில்லை என்றால் என்ன செய்வது? அதை முதலில் சொல்லுங்கள்,'' என்று பிடிவாதமான குரலில் கேட்டாள் அவள்.

சற்று யோசித்துவிட்டு, லேசாக முறுவலித்து, ''என்ன செய்யலாம், வசு? சொன்னால் அடிக்க வரமாட்டாயே. பேசாமல் நாம் இருவருமே திருமணமே செய்து கொள்ளலாமா? நாமும் வாழ்க்கையில், என்றைக்கோ, திருமணம் செய்துதான் ஆக வேண்டும். உன் தோற றத்தை, பழக்க வழக்கங்களை எனக்குப் பிடித்திருக்கிறது. என்னிடம் உனக்கு வெறுப்பில்லை என்று தெரிகிறது. பண்ணிக் கொள்வோமே. அவர்களது சந்தேகத்தையும் முழுசாகத் தீர்த்த மாதிரி இருக்கும்,'' என்றான் விபாகரன்.

சற்று நேரம் திகைத்துப் போனாள், வசுமதி.

பேச வாயைத் திறந்தால், வார்த்தை மறந்த மாதிரித் திகைப்பு.

இவன் என்ன, புரிந்துதான் சொல்லுகிறானா?

இவனுடைய அண்ணன் குடும்பத்தின் சந்தேகம் தீர் வதற்காகவும், அவர்கள் இணைந்து வாழ்வதற்காகவும், அவளை மணக்கிற தியாகத்தைச் செய்கிறானாமா?

கேட்பதற்கு அவளுக்கு எவ்வளவு வேதனையாக இருக்கிறது என்று அவனுக்குத் தெரியவில்லையே.

''திருமணம் என்பது, இரு மனங்கள் இணைவது என்பார்கள்.''

''அப்படி மனங்கள் இணைந்த பிறகுதான் திருமணம் நடக்கலாம் என்றால், உலகில் விரல் விட்டு எண்ணுகிற அளவு திருமணங்கள்தான் நடக்கும். ஏன், அதுவுமே நடக்காது என்றுகூடச் சொல்லலாம். வேண்டுமானால், உலக ஜனத்தொகையைக் குறைக்க அருமையான வழி சொன்னாய் என்று உனக்குப் பாராட்டுக் கிடைக்கலாம். அவ்வளவுதான்.''

''ஆனாலும், இந்த மாதிரிக் காரணங்களுக்காகவா, திருமணம் செய்வது? கேட்கவே சகிக்கவில்லை.''

''எல்லாம் சகிக்கும். சற்று அமைதியாக இருந்து யோசித்துப் பார். உனக்கே, இது... இதுதான் சரியென்று தோன்றிவிடும்.''

இதெல்லாம் ஒன்றுமே இல்லை என்று காட்டுகிற அளவு பெரிய காரணம் ஒன்று வசுமதிக்கு இருந்தது.

ஆனால், அதை விபாகரிடம் சொல்வதும் முடியாத காரியமே.

எனவே, சட்டென முகத்தைத் திருப்பிக் கொண்டு, ''அத்தோடு, என்னை இந்த அளவு ஆட்டி வைத்திருக்கிறீர்கள். உங்கள் மேல் வெறுப்பு இராமல் போவானேன்?'' என்று கேட்டாள், வசுமதி.

''ஒரு சின்ன டெஸ்ட் வைத்தால், வெறுப்பா, விருப்பா என்று உண்மை தெரிந்து விடும். தெரிந்து கொள்வோமா?'' என்று சிறு நகையுடன் கூறி, அந்தக் குரலில் திரும்பியவளை மெல்லப் பற்றித் தன் அருகே இழுத்தான் விபாகர்.

விபாகர் அவளைத் தொட்டதே இல்லை என்று சொல்ல முடியாது. சற்று முன்கூட, அவளைத் தோளோடு பற்றித் தன் கைப்பிடியுள்தான் வைத்திருந்தான்.

ஆனால், நடிப்பின் ஒரு பகுதி என்று நிச்சயமாகத் தெரிந்ததால், சிறு குறுகுறுப்பு தவிர, அது அவளை அதிகம் பாதிக்கவில்லை.

ஆனால் இப்போது...

திமிறி விடுவித்துக் கொள்ளச் சக்தியே இல்லாது போய்விட, பெரிய விழிகளால் அவனைப் பார்த்தபடி, ''வேண்டாம், ப்ளீஸ்...'' என்று முணுமுணுத்தாள் அவள்.

அவளது கோரிக்கை காதிலேயே விழாதவன் போல, நிதானமாக அவளைத் தன் கைகளுக்குள் கொண்டு வந்தான் விபாகரன்.



## 21

**வி**ழிகள் விரிய, விபாகரனின் முகத்தையே பார்த்தபடி, அவனது அணைப்பில் வசுமதி எவ்வளவு நேரம் நின்றிருப்பாளோ, அவள் அறியாள்.

சில கணங்களோ? பல நிமிஷங்களோ?

அதன் பிறகும், அவனாக அவளை விடுவித்தானே தவிர, விடுபட அவளாக ஒரு முயற்சியும் எடுத்தாளில்லை. எடுக்கத் தோன்றவில்லை.

ஏன் தோன்றவில்லை என்று அவனுக்கும் புரிந்திருக்குமோ என்று எண்ணும்போதே, அவளுக்குக் கண் கலங்கி, முகம் சிவந்து விட்டது.

அவள்தான் பைத்தியக்காரி என்றால், அதை அவனுக்கும் தெரிய விடுவதா?

உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் இறுகிப்போய் நிற்கையில், விபாகரன் பேசலானான். ''இப்போது உன்னை நான் வற்புறுத்தப் போவதில்லை. வசு, நீ நிதானமாக யோசி. இடையில் இருக்கும் பதினான்கு நாட்களும் நன்றாக யோசி. மூளையால் மட்டுமின்றி மனதாலும் யோசித்துவிட்டு அதன் பிறகு முடிவு செய். அப்போது, உன் முடிவு என்னவாக இருந்தாலும், திருமணத்தை ஏற்பதோ, மறுப்பதோ, எதுவானாலும், அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். இப்போது அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க வேண்டாம். சரிதானா?''

''திருமணம் நடக்கப் போவதாக, இங்கே எல்லா ஏற்பாடுகளும் நடந்து விடுமே.''

''நடந்தால் என்ன? நான் வந்து தாலி கட்டினால் தானே திருமணம் நடந்ததாக ஆகும்? உன் சம்மதம் இன்றி நடக்காது. இந்தப் பதினைந்து நாட்களும் வேறு குழப்பம் இன்றி அண்ணனும், சுபலாவும் சேர்ந்து பழகட்டும். அவர்கள் பிரச்சினை எப்படி முடிந்தாலும், பதினைந்தாவது நாள், உன் விருப்பம்தான் நடக்கும். இது என் வாக்குறுதி...'' என்றவன், அவள் முகம் தெளியாதது கண்டு, ''எதற்கும் நீ வந்தனாவிடம் பேசிப்

பாரேன், வசு. வந்தனா உன் நன்மை விரும்பி என்பது, உனக்கு நிச்சயம்தானே? இந்தா, இந்த செல்போனில் அறைக்குள் தனித்திருந்தே டாக்டருடன் பேசு. அப்புறமும் செல் உன்னிடமே இருக்கட்டும். நான் சென்னைக்குச் சென்ற பிறகு, உன்னோடு தனியாகப் பேச வசதியாக இருக்கும்... வந்தனாவோடு, இப்போதே பேசிவிடு, வசு. போன் நம்பர் இருக்கிறதல்லவா? நான் வெளியே இருக்கிறேன். பேசி முடித்ததும் கூப்பிடு,'' என்று சொல்லி, அவள் கையில் போன் கருவியைக் கொடுத்துவிட்டு, அறையை விட்டுக் கதவைச் சாத்திக் கொண்டு வெளியே போனான்.

சிநேகிதியுடன் தனியே பேச இடம் கொடுத்து வெளியே போகிறானாம். நாகரீகம்.

முதல் நாள், அவளைத் தவறாகக் கருதி அத்து மீறியது தவிர, அவன் நாகரீகமற்று நடந்து கொண்டதாக ஒரு போதும் சொல்ல முடியாதுதான். ஆயினும்...

வந்தனாவுடன் பேசியது, வசுமதிக்கு மிகவும் இதமாகவே இருந்தது.

விபாகரனின் யோசனைப்படி நடந்தால், யாருக்கும் ஒரு கெடுதலும் வராதாம். அதிலும் அவளுடைய தோழிக்குத் துன்பம் நேர, அவன் விடவே மாட்டானாம். அதனால் அவன் என்ன சொன்னாலும், கண்ணை மூடிக் கொண்டு ஏற்கலாமாம்.

விபாகரனுக்குக் கதவைத் திறந்து விட்டவளின் முகம் பெரிதும் தெளிந்திருந்தது.

''வந்தனா உங்களுடைய பயங்கர விசிறி என்று, எனக்கு இவ்வளவு நாள் தெரியவே தெரியாதே!'' என்று புன்னகையோடு கேலி பேசக்கூட, வசுமதியால் முடிந்தது.



டீ ஷர்ட்டில் இல்லாத காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு, ''ஒருவரது அருமை பெருமை எல்லாம், பலருக்கு உடனே புரிந்து விடுகிறது. சில பேருக்கு ரொம்...பத் தாமதம் ஆகிறது. என்ன செய்வது? ஒரொருவர் மூளைத் திறன் அப்படி!'' என்று சிரியாமல் சீண்டினான் விபாகர்.

சீண்டலைக் கவனியாததுபோல, ''மூன்றே நாட்களில் ஒருவரை அறிந்து கொள்வது எப்படி முடியும்? வந்தனா கூட, அதைச் சொல்லித்தான் ஆச்சரியப்பட்டார்கள்.

''பார்த்து மூன்றே நாட்களில், திருமணம் என்கிறவரை போய் விட்டதா, நம்பவே முடியவில்லையே என்றார்கள்,'' என்று விளக்கம் கொடுத்தாள் வசுமதி.

அவன் கோலத்தில் புகுந்து, ''விமானம் ஓட்டியாகத் தகுதி பெறுவதற்கு, இத்தனை மணி நேரம் விமானத்தை ஓட்டிப் பழக வேண்டும் என்பதுதான் விதி முறை. இத்தனை மணி நேரம் ஓட்டும்போது, விமானத்தை ஓட்டும் கலை கை வந்துவிடும் என்பது கணக்கு. அந்த நேரத்தை, இத்தனை ஆண்டோ, மாதமோ ஓட்டித்தான் முடிக்க வேண்டும் என்று கிடையாது. நாம் இருவரும் இந்த மூன்று நாட்களில், ஆறேழு மணி நேரம், அருகருகேயே இருந்திருக்கிறோம். மற்ற சமயத்திலும், ஒரே வீட்டிலேயே இருக்கிறோம். அவ்வப்போது சந்தித்து, அரை மணி நேரம், ஒரு மணி நேரமாய், ஓர் ஆண்டு பழகியவர்களைவிட, நாம் அதிகமாகப் பழகியவர்கள்தானே? அப்புறம் என்ன, 'மூன்றே' நாட்கள்?'' என்று கேட்கவும், வசுமதியின் விழிகள் அகன்றன.

அவளோடு வேலை செய்த மந்தாகினியின் கதை இதேதான்.

வெளியூரில் வேலை செய்கிறவன், அவளுடைய காதலன். வாராவாரம் பெற்றோரிடம் வந்து போகிறவன்

மந்தாகினி வேலை முடிந்து போகிறபோது மின்சார ரயிலில் முதலில் சந்தித்தார்களாம். அரை மணி நேரப் பயணம். அப்புறம் வாராவாரம் அதே நேரச் சந்திப்பு. ஓர் ஆண்டுக் காதல் என்று பெயர். இப்போது திருமணம் ஆகிவிட்டது. ஆனால், காதலிக்கும்போது இருவரும் ஒரு வரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்த நேரத்தைக் கணக்கிட்டால், இந்த மூன்று நாட்களைவிட, அது மிகவும் குறைவுதான். திருமணமே பண்ணிக் கொண்டார்களே.

விபாகரன் சென்னைக்குக் கிளம்பிச் சென்ற பிறகு, அவனைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற முடிவுக்கு வர, வசுமதிக்கு ஒரு முழு நாள் கூடத் தேவையிருக்கவில்லை.

அவனுக்குக் கையை ஆட்டி விடை கொடுத்து, கண் மறையும் தூரத்துக்குக் கார் செல்லும் வரை பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு, மறுபடி வீட்டுக்குள் செல்லவே மனம் வரவில்லை.

வீட்டின் ஒவ்வோர் இடத்திலும், அவனது ஒவ்வொரு தோற்றம், அவள் மனதில் ஆழப் பதிந்திருந்தது. வீட்டினுள் சென்றால், அவை நினைவு வந்து வாட்டக் கூடும் என்று அஞ்சிப் பக்கவாட்டில் திரும்பித் தோட்டத்துக்குள் சென்றாள்.

ஆனால், அது இன்னமும் துன்பமாகி விட்டது.

அந்த நடைபாதை, அன்று இரவில் அவன் தூக்கிக் கொண்டு வந்தது, கேலி பேசியது... என்று ஒவ் வொன்றாக நினைவு வரலாயிற்று.

ஆனால், அதுவே அவளுக்கு ஒரு தெளிவையும் ஏற்படுத்தியது.

அந்த உதவி, அவன் அவளுக்காக மட்டுமே செய்தது.



வெறுமனே அவளைக் கூட்டி வந்தது மட்டும் அல்ல. அவளது சுகம், இதம் என்று கடைசி வரை கவனித்தான்.

அது மட்டுமின்றி, மற்றவர்கள் அறியக் குறிப்பான சில வார்த்தைகள்கூட, அன்றைய இரவைப் பற்றி, அவன் சொன்னதில்லை. தப்பாக எதுவும் நடக்கவில்லை என்றாலும், அதைப் பற்றி விளக்குவது அவளுக்குக் கடினம்தானே?

இவை அனைத்துமே விபாகர் அவள் மீது உள்ள அக்கறையால் செய்தவையே தவிர, ஒரு விரலின் அசைவுகூட, அவனுடைய அண்ணனின் திருமணத்தைக் காப்பதற்காகச் செய்யப்பட்டது அல்ல.

அந்தக் குளிரில், அவனது ஸ்வெட்டரைக் கழற்றி, அவளிடம் கொடுத்தானே. அவனுக்குக் குளிர் நடுக்கும் தானே? அப்போது, அவன் தன் சுகம் பற்றி நினையாமல், அவளது இதம் பற்றி மட்டும்தானே எண்ணியிருக்க வேண்டும்?

அதற்குப் பிறகும் என்ன கவலை?

விபுவின் இந்த அக்கறையும், அவளது அன்பும் சேர்ந்து, திருமணத்தின் பின்பும் அவனுள்ளும் நேசத்தை வளர்த்து விடாதா?

இவை எல்லாவற்றையும் விட, வசுமதிக்கு இன் னொரு முக்கியமான காரணமும் இருந்தது.

விபு கிளம்பி, இன்னமும் ஒரு மணி நேரம் ஆகவில்லை. அதுவே அவளுக்குத் தாங்கவில்லை. இன்னும் வாழ்நாள் முழுவதும் அவனைப் பிரிந்து எப்படி வாழ்வாள்?

சாத்தியமே கிடையாது.

சென்னையில் இருந்து, விபாகர் டெலிஃபோன் செய்து கேட்கும்போது, திருமணத்துக்குச் சம்மதம் என்று சொல்லிவிட வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு வசுமதி காத்திருந்தால், அவன் அந்தக் கேள்வியை மட்டும் கேட்கவே இல்லை.

அன்று மட்டுமல்ல.

அவன் சென்னையில் இருந்து பேசிய பல தடவைகளில், ஒரு தரம் கூட, அதைக் கேட்டானில்லை.

முதல் இரண்டு மூன்று முறை, வசுமதி அதைப் பெரிதாக நினைக்காவிட்டாலும், அதற்குப் பிறகு, அவள் மனம் தவிக்கத் தொடங்கி விட்டது.

ஏன்? இந்தத் திருமண விஷயம், அவனுக்கே பிடிக்காமல் போய்விட்டதா?

அவன் மீண்டும் பண்ணைக்குத் திரும்பி வருவானா என்றுகூட வசுமதி கலங்கினாள்.

ஆனால், இங்கோ, திருமண வேலைகள் ஜரூராக நடைபெற்று வந்தன.

''மதுரைக்குப் போய், உனக்குக் கல்யாணப் பட்டு வாங்கி வருவோமா?'' என்று சுபலா உற்சாகமாகக் கேட்டபோது, பதில் சொல்ல முடியாமல், அவளுக்குத் தொண்டையே அடைத்துக் கொண்டது.

ஆனால் திருமணமே நடக்குமா என்கிற தன் கவலையை அவளிடம் எப்படிச் சொல்வது? ''அது... அது... பட்டுச் சேலை பற்றி யெல்லாம் எனக்கு என்ன தெரியும், சுபலா? நீங்களே ஏதாவது பார்த்து வாங்குங்களேன்...'' என்று தட்டுத்தடுமாறி, எப்படியோ சொல்லி முடித்தாள்.



சொல்லி முடித்ததும், சுபலா அவளை ஏற இறங்கப் பார்த்த விதத்தில், வசுமதி பயந்தே போனாள். சந்தேகம் உண்டாகி விட்டதா?

ஆனால், ''உன் நிறத்துக்கும், உயரத்துக்கும், எந்த வண்ணமும் ஜரிகை வேலையும் நன்றாகத்தான் இருக்கும். வாங்கி வருகிறேன், பாரேன். பிடிக்கவில்லை என்றால், மாற்றுவோம் என்று சொல்லி எடுத்து வருகிறேனே,'' என்று சுபலா கூறியபோது, அப்பாடா என்றிருந்தது அவளுக்கு.

அன்றே சென்று, சுபலா வாங்கி வந்த சேலையின் எழில் கண்ணைப் பறிக்க, இதை அணியும் பாக்கியம் கிடைக்குமா என்று வசுமதி உள்ளூர ஏங்கலானாள்.

செய்வதற்கு ஒன்றுமில்லாமல் போனது வேறு, அவளது தவிப்பைக் கூட்டியது.

''தம்பி மனைவி ஆகப் போகிறவள், அம்மா. அத்தோடு, கல்யாணப் பெண். இந்த வேலையெல்லாம் இனி, சுபலாவும் மாரியும் செய்யட்டும்,'' என்று திவாகரன் கூறிவிடவே, உண்டு உறங்குவது தவிர, வசுமதிக்கு வேறு வேலையே இல்லாது போயிற்று.

ஆனால், இந்தச் சில நாட்களில், சுபலா பம்பரமாகச் சுழல்வதைக் கண்டு, அவள் மிகவும் அதிசயித்துப் போனாள்.

ஆட்களை ஏவி, வீட்டைச் சுத்தம் செய்து, ஹாலைத் திருமணக் கூடமாக்கி, அதில் மணமேடை அமைக்க ஏற்பாடு செய்தாள். திருமணச் சேலையோடு, இன்னும் இரண்டு சேலைகள் வாங்கி, எல்லாவற்றுக்கும் சட்டை தைத்து வந்தது. வரக்கூடியவர்களுக்குச் சாப்பாட்டுக்கு ஏற்பாடு நடந்தது. அர்ச்சகர் சொன்ன திருமணச் சாமான்களோடு, மற்றவர்களிடம் கேட்டு, அவளும் சிலது வாங்கி வைத்தாள்.

இது எல்லாமே ஒன்றுமில்லாமல் போய்விடுமோ என்று உள்ளூர அஞ்சிய போதும், சுபலாவின் திறமையைப் பாராட்டாமல் இருக்க வசுமதியால் முடியவில்லை.

திவாகரனே மெச்சத்தான் செய்தான். கூடவே, "ஆனால்..." என்று அவன் தோளைக் குலுக்கிவிட்டுப் போனதுதான் வசுமதிக்கு வருத்தம் அளித்தது.

அவர்களாவது இணைந்து விட்டால், அந்தக் குறிக் கோளாவது நிறைவேறின மாதிரி ஆகும்.

அதை விடவும் வருத்தம், திரும்பி வரும் நாளையும் விபாகரன் தள்ளிப் போட்டது. வேலை இருப்பதாகச் சொல்லி, அவன் பேசுகிற நேரமும் குறைந்து போயிற்று.

அன்று பதினாலாவது நாள்.

அன்றாவது அவன் வருவானா என்று, வசுமதி ஏங்கிக் கொண்டு இருந்தபோது, ஏதோ கார் வருகிற ஓசை கேட்கவே, வசுமதி ஆவலோடு வாயிலுக்கு ஓடிச் சென்றாள்.

வந்து நின்றவை இரண்டு கார்கள்.

கார்களில் இருந்து இறங்கியவர்கள், சிற்றம்பலமும், இளம்பிறையனும்.

செய்வதறியாது, வசுமதி திகைத்து நின்றாள்.



## 22

**யா**ர் யார் கண்களில் பட்டுவிடக் கூடாது என்று, சென்னையிலிருந்து இவ்வளவு தூரத்தில் ஒதுங்கி அவள் வாழ்ந்து கொண்டிருந்தாளோ, அந்த இருவரையும் பார்த்ததே வசுமதிக்கு அதிர்ச்சி.

அவர்கள் இன்னும் சிலருடன் சேர்ந்து வந்திருப்பது, அவளுக்குக் கலக்கத்தை அளித்தது. இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?



எதுவானாலும், சாதாரணமாகப் பேசிச் சமாளிக்க முயற்சி செய்ய வேண்டும்.

"இதோ இருக்கிறாளே, எங்கள் வசுமதி..." என்று சிற்றம்பலம் முன்னே வர, உள்ளிருந்த பயத்தை வெளிக் காட்டாமல், "பெரியம்மா நன்றாக இருக்கிறார்களா, பெரியப்பா?" என்று வசுமதி இயல்பாகப் பேச முயன்றாள்.

"அதை, எங்கள் கூட வந்து, நீயே தெரிந்து கொள்வாயாம். வா, கண்ணு. வந்து காரில் ஏறு," என்று இளம்பிறையன் சொன்ன விதத்திலேயே, வசுமதி இடிந்து போனாள்.

"எங்களிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் வந்து விட்டுப் பெரிதாகக் குசலம் விசாரிக்கிறாயே. வயதுப் பெண் செய்கிற வேலையா, இது? தப்பில்லை? ஐயாவோட ஆள், இங்கே சொந்தக்காரர் வீட்டுக்கு வந்தவன் கண்டிராவிட்டால், இப்போதும் நீ இருக்கிற இடமே தெரியாமல் போயிருக்குமே!" என்று குற்றப் பத்திரிகை படித்தார் சிற்றம்பலம்.

"சரிசரி. வா. உடனே வந்து மரியாதையாகக் காரில் ஏறு. ஒழுங்காக வந்துவிட்டால், ஐயா மன்னித்து விடுவார். வா, சீக்கிரம். இல்லையானால், எல்லோருக்குமே ஆபத்து!" என்று அதட்டலாகக் கூறிக் கையால் காட்டினார்.

அங்கே, அடியாட்கள் போலத் தோன்றிய மூன்று பேர் நின்றனர்.

வலுக் கட்டாயமாக அவளைப் பிடித்துக் கொண்டு போய்விடப் போகிறார்களா! அந்த ஆள் இந்த அளவு போகிறவன் இல்லை என்று முன்பு நினைத்தாளே!

விபாகரன் தந்த துப்பாக்கியும், கத்தியும் நினைவுக்கு வரக் கொஞ்சம் திடமுற்று, "இ... இந்த வீட்டில், நான் வேலை பார்க்கிறேன், பெரியப்பா. அவர்களிடம்

சொல்லாமல் வர முடியாது. வேலை நடுவில், அவர்களும் அனுப்ப மாட்டார்கள். சில நாட்களில் அவர்களிடம் கேட்டுக் கொண்டு...'' என்று அவள் துணிவை வரவழைத்துக் கொண்டு சொல்லும்போதே, ''அடச்சீ! என்னடி கதை கட்டுறே. என்னய்யா, இரண்டு லட்சம் வாங்கினேல்ல? இழுத்துக் கிட்டு வா!'' என்று சிற்றம்பலத்தை அதட்டினான் இந்த இளம்பிறையன்.

''ஆமாம், வசுமதி. நீ சொல்லாமல் கொள்ளாமல் வந்ததில், ஐயா ரொம்பக் கோபத்தில் இருக்கிறார். அதை அதிகப் படுத்தாமல், நீயே வந்துவிடு. இல்லாவிட்டால் உனக்கு நல்லதில்லை. நானே உன்னை அடி பின்னி விடு வேன்...'' என்று அவளை நோக்கி வந்தார் சிற்றம்பலம்.

அப்போது, ''என்ன வசுமதி, யார் வந்திருப்பது? உனக்குத் தெரிந்தவர்களா?'' என்று கேட்டபடி, திவாகரன் வந்தான். அவனோடு சுபலாவும்.

பின்புறப் பண்ணையில் வேலை செய்கிறவர்களும், வரிசையாய் வரத் தொடங்கவும், இளம்பிறையனின் உந்து தலில், வசுமதியை நெருங்கிய சிற்றம்பலம் தயங்கி நின்றார்.

''நீயெல்லாம் ஆண் பிள்ளை!'' என்று எரிந்து விழுந்துவிட்டு, கார் அருகே குனிந்து, ''என்ன சோமய்யா, இப்படி சொகுசா உட்கார்ந்துகிட்டு இருக்கிறதுக்கா, உன்னைக் கூட்டியாந்தேன்? இறங்கி, இவங்க கிட்ட விஷயத்தைச் சொல்லி, நல்லபடியாப் பேசி முடிச்சுக் கொடு,'' என்று இளம்பிறையன் அதட்டவும், காரினுள் ளிருந்து பட்டு வேட்டிக்காரர் ஒருவர் இறங்கினார்.

அவர் திவாகரனை நெருங்கி, ''தம்பி, நீங்கதானே பந்து விளையாடிக் காலை உடைத்துக் கொண்டது? நல்லாயிட்டுதா? பாருங்க, நான் இந்தப் பக்கத்து வட்டத் தலைவரு. அவரு மெட்ராசிலே பெரிய செல்வாக் குள்ளவரு. மேல் மட்டம். அது பொண்ணோட பெரியப் பாரு. அவங்களுக்குள்ளே ஏதோ ஏற்பாடு. அந்தப் பெண்ணை, அவங்களோட அனுப்பி விட்டிங்கன்னா, ஒரு தகராறும் இல்லை. இல்லையானா.. எதுக்கு தம்பி, அடுத்த காலாச்சும் நல்லா இருக்க வேணாமா?'' என்று மெல்ல, நிதானமாகப் பேசியே மிரட்டினார்.

''இதோ பாருங்கள், நீங்கள் இந்தப் பக்கம் முக்கிய மான ஆள் என்றீர்கள். சரி, உங்களுக்கும் ஒரு அழைப்புத் தருகிறேன். நாளைக்கு, என் தம்பிக்கும் அவளுக்கும் திருமணம். வந்து, இருந்து சாப்பிட்டுவிட்டுப் போங்கள். இப்போது மரியாதையாக என் இடத்தை விட்டு, இவர்களைப் போகச் சொல்லுங்கள். அல்லது, போலீஸ் வந்து இவர்களை வெளியேற்றும்!'' என்று கோபமாகக் கூறினான் திவாகரன்.

''அதில்லை தம்பி...'' என்று சோமய்யா சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, இளம்பிறையன் பொறுமை இழந்தான். ''என்னய்யா, தம்பி கம்பின்னு கொஞ்சு கிறே. எனக்கு இன்றைக்கு இருக்கிற செல்வாக்குத் தெரி யாமல், பயப்படுகிறியே. போலீசாம், போலீசு. என்கிட்ட வருமா? சீ, நீ போ. என் வேலையை நானே பார்த்துக் கிடுறேன். டேய், அரிவாளுங்களை எடுங்கடா. குறுக்கே வரவனுங்களை வெட்டிச் சாய்ச்சிட்டு, அந்தப் பொண்ணை இழுத்தாங்கடா!...'' என்று தன் ஆட்களை ஏவினான்.

தோட்ட வேலைக்காரர்கள், கட்டளையை எதிர் நோக்கிக் கடப்பாரையோடு நின்றார்கள்.

தன்னால், இங்கே ரத்தம் சிந்தப் போகிறார்கள் என்று உணர்ந்த வசுமதி, ''ஐயோ, சண்டை வேண்டாம். நான்..

நானே வருகிறேன்!'' என்று உரத்த குரலில் கூறி, இரு பிரிவினரையும் நிறுத்தினாள்..

அவள் கையைப் பற்றி, ''ஒன்றும் பயமில்லை, வசு. போலீசுக்கும் போன் பண்ணி விட்டேன். இதோ வந்து விடுவார்கள்,'' என்று மெல்லச் சொன்னாள் சுபலா.

''எனக்கு நம்பிக்கை இல்லை, சுபலா. இந்த ஆளுக்குப் போலீசில்கூட எவ்வளவு செல்வாக்கு இருக்கிறதோ? என் கைப்பையை மட்டும் எடுத்துத் தந்தால், நான்..'' என்று வசுமதி சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, இன்னொரு கார் வரும் சத்தம் கேட்டது.

அவளுடைய விபாகரன் சொன்னபடி வந்து விட்டான். ஆனால்... இப்போது, இவர்களிடம் அவன் மாட்டிக் கொள்ளக் கூடாதே.

அவனிடம் ஓட முயன்றவளைப் பற்றியிருந்த கையை இறுகப் பிடித்துத் தடுத்து நிறுத்தி, ''பொறு!'' என்றாள் சுபலா.

வசுமதி தவிப்புடன் பார்த்தாள், ''என்ன சோமய்யா, சுகமா?'' என்று வட்டத் தலைவருடன் பேசிக் கொண்டிருந்தான் அவன். ''இருந்திருந்து, இந்த ஆளுடன் வந்திருக்கிறீர்களே? ஆபத்தில் மாட்டிக் கொள்ளாதீர்கள், சார்! இவர் பயங்கரமாய் மேலிடத்துக் கோபத்துக்கு ஆளாகி இருப்பவர். அடிப்படை உறுப்பினர் பதவியைக் கூடப் பறித்து விட்டார்கள். கட்சியில் இருந்தே விலக்கி விட்டார்கள். இதோ பாருங்கள்!'' என்று ஒரு பத்திரிகையைப் பிரித்துக் காட்டினான்.

பத்திரிகையில் என்ன இருந்ததோ?

சோமய்யா, துள்ளி நகர்ந்து, இளம்பிறையனிட மிருந்து நாலடி தள்ளி நின்று கொண்டார். ''தங்கச்சியைத் தான் கட்டிக்கிடப் போகிறீர்கள் போல் பெரிய தம்பி சொல்லிச்சு. நாளைக்குக் கல்யாணத்துக்கு வந்திடறேன். இப்ப வரட்டுமா?'' என்று கும்பிடு போட்டார்.

பத்திரிகையை இளம்பிறையன் மேல் வீசி எறிந்து விட்டு, ''இனிமே, தெரியாமல்கூட, என் வீட்டுப் பக்கம் வந்து விடாதேய்யா. என் பிழைப்பும் நாறிப் போகும். டேய், நீங்களும் என்னோட வரதுன்னா வாங்கடா. கீழே கொண்டு விட்டிடுறேன். அநியாயமா இந்த ஆள் கூடச் சேர்ந்து, நீங்களும் சாவாதீங்க!'' என்று ஒரு காரில் சோமய்யா ஏற, அடியாட்களும், ஓடிப்போய், அந்தக் காரின் பின்புறம் ஏறி, நெருக்கியடித்து உட்கார்ந்து கொள்ள, கார் பறந்தது.

பத்திரிகையைப் பார்த்த இளம்பிறையன், அப்படியே அரை ஆளாய்த் தொய்ந்து போய்விட்டார். பெண்ணாவது, இன்னொன்றாவது? மேலிடத்தின் கோபத்தைப் பார்த்தால், வழக்கு, சிறைக்குத் தப்ப முடியுமா என்கிற கவலை அவனுக்கு!

சிற்றம்பலமோ அதற்கு மேல் நடுங்கிக் கொண்டு நின்றார். அவருக்கு முழு ஆளாய் வீடு போய்ச் சேருவோமா என்ற சந்தேகம். இங்கேயும் கடப்பாரையோடு, ஒரு கூட்டம் நிற்கிறதே! அவர்கள் முன்னால், வாயை வேறு விட்டு விட்டார். வீட்டுக்குப் போய் விட்டால், கோதையின் பின்னே ஒளிந்து கொள்ளலாம்.

செய்வது அறியாது நடுங்கிக் கொண்டு நின்ற காரோட்டியை அருகில் அழைத்து, அந்த இருவரையும் காரில் ஏற்றிக் கொண்டு, உடனே போய் விடுமாறு விபாகரன் கூற, இவனும் தப்பினேன் பிழைத்தேன் என்று இளம்பிறையனையும், சிற்றம்பலத்தையும் ஏற்றிக் கொண்டு விரைந்தான்.

தோட்ட வேலைக்காரர்கள் அனைவருக்கும், கல்யாணத்துக்குத் துணிமணி வாங்கியிருப்பதைச் சொல்லி, அவர்களை மகிழ வைத்தாள் சுபலா. பலகாரமும், பணமும் கொடுத்து அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டு, எல்லோரும் உள்ளே சென்றனர்.

விபாகரன் அவள் புறம் திரும்பு முன்னரே, அவனிடம் போய்த் தோளோடு முகத்தை ஒட்டிக் கொண்டு நின்றாள், வசுமதி.

ஈரத்தை உணர்ந்து, "ஏய், என்னது? அதுதான் சரியான நேரத்தில் வந்து விட்டேனே! அப்புறமென்ன? ம்...?" என்று அவளை அழைத்துப் போய், சோஃபாவில் அமர்த்தி, தானும் அமர்ந்து, அவளைத் தன் தோள் வளைவில் இழுத்துக் கொண்டான் அவன்.

"நல்லவேளை! பத்திரிகைக் காப்பி கிடைத்ததுமே, நான் முதலில் ஒரு காரில் வேகமாக வந்துவிட்டேன். என்ன அண்ணா, பயங்கரமாய், சினிமா க்ளைமாக்ஸ் காட்சி மாதிரி, எல்லோரும் போஸ் கொடுத்து நின்றீர்கள்? என்ன நடந்தது?" என்று விவரம் கேட்டான்.

"எனக்கும் சரியாகத் தெரியாது, விபா. நான் கொஞ்சம் நடந்துவிட்டு ஓய்வாய் டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தேன். சுபலாதான் வந்து, யாரோ ரௌடிகள் மாதிரி வந்திருக்கிறார்கள். வசுவுக்கு ஆபத்து. தோட்ட வேலையாட்களுக்குச் சொல்லி விட்டிருக்கிறேன். போலீசுக்கும் சொல்லி விட்டேன். நீங்கள் ஏதாவது பேசிப் பாருங்கள், என்றாள். வந்து பார்த்தால், அடியாட்கள் சகிதம், அந்த அயோக்கியன் வந்து நிற்கிறான்!

"அவனுக்குப் பயந்துதான், வசுமதி சென்னையிலிருந்து, இங்கே ஓடி வந்தாள் போல! நல்ல வேளை,



சுபலா சட்டென்று செயல்பட்டதால், சமாளிக்க முடிந்தது. அல்லது, அப்போதே வசுமதியைக் கொண்டே போயிருப்பார்கள்," என்றான் திவாகரன்.

தன்னையறியாமல் உடல் சிலிர்த்துவிட்டு, வசுமதியும் சுபலாவைப் பாராட்டினாள். "இந்த மாதிரி சமயத்தில், வேகமாகவும், விவேகத்துடனும் செயல்படுவது, எல்லோராலும் முடியாது. சுபலா, உங்களது சமயோசித புத்தியால் என் உயிரையே காப்பாற்றி இருக்கிறீர்களே!" என்றாள் வசுமதி.

ஆனால், அவள் அப்படிச் சொல்லும்போதே, திவாகரனின் முகம் லேசாகக் கடினமுறக் கண்டு, வசுமதி நிமிர்ந்து அமர்ந்தாள். "நீங்கள் இருவருமே, சமயத்தில் வந்து, என்னைக் காத்திருக்கிறீர்கள். என் நன்றியைச் செலுத்த, எனக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. சொல்லுங்கள், திவாகரன். இந்த இரண்டரை மாதத்தில், என்னை எப்போதும் வீட்டுப் பெண் போலவே நடத்தியிருக்கிறீர்கள். அந்த உரிமை"யில் கேட்கிறேன். சுபலாவிடம் உங்களுக்கு என்ன கோபம்?" என்று வினவினாள்.

அவன் தலையைத் திருப்பவும், விபாகரும் வசுமதியோடு சேர்ந்து கொண்டான்.

"சும்மா சொல்லு, அண்ணா. அண்ணி அப்படி என்ன உலக மகாப் பாதகத்தைச் செய்து விட்டாள்?" என்று அண்ணனிடம் அதட்டிக் கேட்டான்.

வேதனையால் முகம் வாடி அமர்ந்திருந்தாள், சுபலா.

அவளை ஆத்திரத்துடன் பார்த்துவிட்டு, "பாதகமேதான். அன்று நான் அடிபட்டுக் கிடக்கிறேன். காதல் மனைவியாக இவளும் ஓடி வந்தாள். 'பயங்கரமாய் அடிபட்டு விட்டது. இனித் திவாகர் ஹாக்கி விளையாடவே முடியாது!' என்று ஒலிபெருக்கியில்

கத்திக் கொண்டு இருக்கிறார்கள். வலியும் தவிப்புமாக, வாய்விட்டு அழாத குறையாக நான் இவளைப் பார்த்தபோது, என் அருமை மனைவியான இவள் என்ன செய்தாள் தெரியுமா? அருவருப்போடு, முகத்தைத் திருப்பிக் கொண்டு அங்கிருந்து போய்விட்டாள்.

''அப்புறமும், மற்றவர்களாக என்னைத் தூக்கிப்போய்க் கட்டுப் போட்டு முடிக்கிறவரை, அம்மணி அருகிலேயே வரவில்லை. இதுதான் நடந்தது. அருவருப்புக் காட்டிய இவள் முகம், என் மனதில் அப்படியே பதிந்து விட்டது...'' என்று முடித்தான் திவாகரன்.

ஓசையற்று அழுதாள், சுபலா.

விபாகரும் வசுமதியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

சற்று யோசித்துவிட்டு, ''அருவருப்புக் காட்டியதாகச் சொன்னீர்களே, அப்போது சுபலாவின் முகம். வாந்தி எடுக்கிற மாதிரி இருந்ததா?'' என்று வசுமதி வினவினாள்.

''ஆமாம். ஆமாம்,'' என்றான் திவாகரன் எரிச்சலோடு. ''அசிங்கத்தைப் பார்த்தால், உவ்வே என்று வாந்தி போலப் பண்ணுவோமே, அதுபோல அவள் முகம் இருந்தது.''

''அதுபோல அல்ல, திவாகரன். வாந்தியேதான். இது ஒரு வகைப் பயநோய். ஃபோபியா என்பார்களே, அதுதான். சுபலாவால் வலியை, ரத்தத்தைக் கண்டு சகிக்க முடியாது. வாந்தி, தலை சுற்றல், மயக்கம்கூட வரும். அவர்களுக்கும், அந்த நேரம் அதிர்ச்சி என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். சுபலாவும், அங்கேயே இருந்து, வாந்தி எடுத்துவிட்டு, மயங்கி விழுந்திருந்தால், ஆஹா, என்ன அன்பு என்று கொண்டாடி யிருப்பீர்கள் போல. மற்றவர்களுக்குக் கஷ்டம் தராதபடி, வாந்தி பண்ண



வெளியே ஓடினால், தப்பா? எல்லோருக்கும், எல்லாத் திறமையும் இராது, திவாகரன். சிலருக்குத் தனிப்பட்ட சில திறமைகள். எனக்கு நோயாளிகளுக்குப் பணி புரிவதில். உங்கள் மனைவிக்கு, இந்த மாதிரி நிகழ்ச்சி களைக் குறைவின்றி நடத்துவதில். இதை என்னிடம் செய்யச் சொன்னால், ஙே என்று விழிப்பேன். ஒன்று தெரியுமா, உங்களுக்கு? சில பெண்கள், அவர்கள் பெற்ற பிள்ளைகளின் அசுத்தத்தைக் கண்டாலே தூர ஓடி விடுவார்கள். அதற்காகப் பாசமற்ற தாய் என்று சொல்ல முடியுமா? ஆராய்ந்து பார்த்தால், அவர்கள்தான், அடுத்தவரை அடித்து, அமுக்கித் தன் பிள்ளைகளை மட்டமாக உயரே கொண்டு வருவதை, நானே பார்த்திருக்கிறேன். ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு பலம் போலப் பலவீனமும் உண்டு. எத்தனையோ சிறப்புகள் இருந்தும், ஒரு சிறு பலவீனத்துக்காக, இத்தனை நாள் சுபலாவை அழ வைத்து விட்டீர்களே, திவாகரன்...'' என்று வருத்தத்துடன் முடித்தாள் வசுமதி.

சிறு யோசனையின் பின், சற்றுச் சிரமத்துடன் எழுந்து, மனைவியின் அருகில் போய் அமர்ந்தான் திவாகரன்.

''சுபி, என்னை மன்னிப்பாயா?''

அவர்கள் இருவரும் ஒருவரில் ஒருவர் மூழ்கிவிட, வசுமதியும் விபாகரனும் பக்கவாட்டுத் தோட்டத்துப் படிக்கட்டில் அமர்ந்தனர்.

''என்னவோ, பத்திரிகைக் காப்பி கிடைத்ததும் கிளம்பி வந்ததாகச் சொன்னீர்களே, இந்தச் செய்தி பத்திரிகையில் வரப் போவது, உங்களுக்கு முன்பே தெரியுமா?'' என்று கேட்டாள் வசுமதி.

''ஓரளவு!'' என்றான் அவன். ''இங்கிருந்து சென்று, விஷயம் அறிந்து, முழு மூச்சுடன் வேலை செய்த போதும், இந்த அளவுக்குப் பலனை நானே எதிர் பார்க்கவில்லை, வசு. எப்படியும், பணமும் பதவியும் வந்த திமிரில், இளம்பிறையன் ஏதாவது செய்திருப்பான். அதைப் பயன்படுத்தி ஏதாவது பண்ண வேண்டும் என்று எண்ணித்தான் முதலில் விசாரித்தேன். ஆனால், இந்தச் சில மாதங்களில், இவன் பேயாட்டம் ஆடியிருக்கிறான். ஏகப்பட்ட லஞ்சம் வாங்கி, எல்லாம் தன் பைக் குள்ளேயே போட்டிருக்கிறான். ஏதேனும் கேட்டால் அடியாளை அனுப்புவது. ஏற்கெனவே, இவனை எதிர்த்துக் கட்சியில் உள் தகராறே ஏற்பட்டிருந்தது. ஒரு மந்திரியை எனக்குத் தெரியும். அவரை வைத்து, இதை ஊதிவிட்டேன். ஏற்கெனவே புகைந்திருந்தது, பெரு நெருப்பாகி விட்டது. இலகுவாக அவனைச் செல்லாக் காசாக்க முடிந்தது,'' என்று விளக்கினான்.

மலையையே புரட்டுவது போல, இவ்வளவு வேலை செய்திருக்கிறானே! யாருக்காக? ஏன்?

தன்னையறியாமல் வாய்விட்டுக் கேட்டுவிட, அவன் அவளை முறைத்தான். ''மெய்யாகவே, இது உனக்கு இன்னமும் புரியவில்லை என்றால், இந்த அழகான தலைக்குள் ஒன்றுமே இல்லை என்றுதான் அர்த்தம். என் அண்ணனுக்காக நான் என்னென்னவோ செய்வேன்தான் என்றாலும், மனதில் விருப்பம் இல்லாமல் ஒருத்தியை மணப்பேன் என்றா எண்ணினாய்?''

''அதேதான் என் சந்தேகமும்,'' என்று பல நாட்களாக, மனதைப் பெரிதும் பாதித்த விஷயத்துக்கு வசுமதி வந்தாள்.

''அங்கே போன பிறகு, திருமணத்துக்கு என் சம்மதம் பற்றி நீங்கள் கேட்கவே இல்லையே, விபு. உங்கள் மனம் மாறி விட்டதோ, நீங்கள் விரும்பவே இல்லையோ என்று ரொம்பத் தவித்துப் போனேன், தெரியுமா?'' என்றாள் வருத்தத்துடன்.

முறுவலித்து, ''ஒரு சிறு ஊகம் உண்டும்மா. ஆனால், வெளிப்படையாகக் கேட்க எனக்குமே பயம். ஏதாவது வேண்டாததை நினைத்து, மறுத்துப் பேசி விட்டாய் என்று வை. அப்புறம், அதை மாற்றுவது கடினம் அல்லவா? திருமணப் பேச்சு வந்த அன்றுகூடப் பதிலுக்காக நான் வற்புறுத்தவில்லை. நினைவிருக்கிறதா? யோசிக்கத்தான் சொன்னேன். சும்மா கொஞ்சம் அப்படி இப்படி என்றாலும், நீ யோசித்தால், நல்ல முடிவு எடுப்பாய் என்று, எனக்கு நம்பிக்கை,'' என்று, கண் சிமிட்டிச் சிரித்தான், அவன்.

''ஆனால், எனக்கு ஒரு வியப்பு. கையில் தொழில் இருக்கிறது திருப்பியடிக்கப் போர்க் கலை இருக்கிறது. படித்தவள். அந்த வில்லனுக்குப் பயந்து ஓடி வந்திருக் கிறாயே!'' என்று ஆச்சரியப்பட்டான்.

''அவன் எங்கே தட்டினால், எங்கே வலிக்கும் என்று அறிந்தவன், விபு. என்னால் பெரியம்மா கஷ்டப்பட்டு விடக் கூடாது என்றுதான்... சும்மாவே, என்னால் எவ்வளவோ அனுபவித்து விட்டார்கள்.''

''அது சரிதான். அன்பு வைத்துவிட்டால், அவர்கள் வருந்துவது, தாங்காதுதான்,'' என்று ஒத்துக் கொண்டான், அவனும். ''அப்புறம்... சற்று முன் என் விருப்பம் பற்றி ஏதோ சொன்னாயே. அன்று முதல் நாள் இரவில் குங்ஃபூ முறையில் என்னைக் கீழே தள்ள முயன்றாயே. அந்த வினாடியில் இருந்து, நூறு சதவிகித விருப்பம்தான். சிறு மாற்றம்கூட, எனக்கு வந்ததில்லை,'' என்றான் அவன் தெளிவாக. ''ஆனால், உனக்கு இரண்டே நாள் பழக்கம், மூன்றே நாள்... என்று குழப்பம். மாதக் கணக்கில், இங்கேயே இருந்து காதலை வளர்க்க, எனக்கு அவகாசம்

இல்லை. அன்று அண்ணன் நம்பாமல் பேசவும், நல்ல வாய்ப்பு என்று தோன்றிவிட்டது. மணமாகி விட்டால், அப்புறம் என் அன்பில் மாறி விடுவாய் என்று... என்ன?'' என்று, அவளது விழிகள் விரிந்த விதத்தில் கேட்டான் அவன்.

''நான்கூட, மணமாகிவிட்டால், என் அன்பில் நீங்களும் அன்பு செலுத்தத் தொடங்கி விடுவீர்கள் என்றுதான்...'' என்று இழுக்க, இருவருக்கும் சிரிப்பு வந்தது.

''அப்புறம் இன்னும் ஒன்று...'' என்று வசுமதி தொடங்க, ''இன்னுமா...'' என்று விபாகரன் கேலியாக இழுக்கையில், வாயிலில் கார் வந்து நிற்கும் ஓசையில் தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு எழுந்தாள், அவள்.

வில்லன் திரும்பி வந்து விட்டானோ என்ற பயம்.

''என்ன பயம்? நான்தான் அருகிலேயே இருக் கிறேனே!'' என்று தானும் எழுந்து, ''அப்பாவை அழைத்து வருவதாகச் சொன்னேனே, கூட யார் வருவது என்று பார்,'' என்று அவளை அழைத்துச் சென்றான்.

வந்தனாவைப் பார்த்ததும், வசுவுக்கு ஒரே சந்தோஷம். அவளுக்கும் அப்படியே.

வசுமதியைக் கட்டி அணைத்துத் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தாள்.

பிறகு, அவளை விபாகருடைய தந்தைக்கு அறிமுகப் படுத்தினாள்.

''என் இரண்டு மருமகள்களும் அழகிகள். பேரப் பிள்ளைகள் அழகு அழகாகப் பிறப்பார்கள்!'' என்றார், அவர் மகிழ்ச்சியோடு.

''ஓகோ. ஆனால், பேரப் பிள்ளைகள், உங்கள் பிள்ளைகளைக் கொண்டு பிறந்தால் என்ன செய்வது?'' என்று கிண்டலடித்தாள், வந்தனா.



''அப்போதும் அழகாகத்தான் இருப்பார்கள். ஏனென்றால், என் பிள்ளைகள், என்னைக் கொண்டு பிறந்தவர்கள் ஆயிற்றே!'' என்று எல்லோரையும் சிரிக்க வைத்தார், பெரியவர்.

திருமண இரவில், ''அந்த இன்னொரு சந்தேகத்தை இப்போது கேட்கலாமா?'' என்று வசுமதி வினவ, ''கடவுளே. இப்போதா?'' என்று, சோகமாக முனகினான், விபாகரன்.

ஒரு பெருமூச்சுடன், ''தயவு பண்ணிக் கொஞ்சம் சீ...க்கிரமாகக் கேட்டு முடித்து விடும்மா...'' என்று அவன் கெஞ்சுதலாகக் கேட்கவும், சிரித்துவிட்டு, ''திருமணம் பிடிக்கவில்லை என்ற முடிவுக்கு வந்தால், எப்படியும் நிறுத்தி விடுவேன் என்று சொன்னீர்களே, இத்தனை ஏற்பாடுகளுக்குப் பின், எப்படி நிறுத்த முடியும்?'' என்று கேட்டாள் அவள்.

''அந்த முடிவுக்கு நீ வர மாட்டாய் என்று எனக்கு நம்பிக்கை. ஆனாலும்... வந்தனாவை அழைத்து வந்திருந்தேனே, ஏன் என்று தெரிகிறதா? ஒரு முக்கியமான தருணத்தில், திடீர் என்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விழுந்திருப்பேன். வந்தனாவும், என்னை 'நன்கு' பரிசோதித்துவிட்டு, இப்போதைக்குத் திருமணம் கூடாது என்று சொல்லியிருப்பார்கள்.''

''ஓ! அப்படியானால், வந்தனாவுக்கு இங்கே நடந்தது எல்லாம் தெரியும்.''

''அதைச் சொல்லாமல், கடமை உணர்ச்சி மிகுந்த அந்த டாக்டரம்மா, அவர்களுடைய உயிர்த் தோழியான உன்னைப் பற்றிய விவரங்களை எனக்குத் தந் திருப்பார்களா? என் மனம் வரை வெளிப்படையாகக் காட்டிய பிறகுதான், அவர்களும், உன் பிரச்சினை களைப் பற்றித் தெரிவித்தது. இளம்பிறையனை மாட்டி

வைக்க ஏற்பாடு செய்ய முடிந்ததும் அதற்குப் பிறகு தான்,'' என்றான், அவன்.

''ஓகோ. அந்த வில்லன் பற்றி எப்படித் தெரிந்தது என்று யோசித்தேன். நல்லவேளை, என் ரகசியம் என்று, வந்தனா உங்களிடம் சொல்லாமல் இருந்து விடவில்லை. எனக்கு நல்லது என்று யோசித்து, உங்களிடம் சொல்லியிருக்கிறார்கள். என்மேல் அவ்வளவு அன்பு அவர்களுக்கு!'' என்று உரைத்து மகிழ்ந்தாள் வசுமதி.

''உண்மை. அது மட்டுமின்றி, நான் என் மனதை அவர்களிடம் திறந்து காட்டினேன் என்றேனே, அதுவும் காரணம். நம் இருவர் மீதும் வந்தனாவுக்கு...'' என்றவ னின் பேச்சு, திடுமென நின்று, வேறு திசைக்கு மாறியது.

மனைவியாகி விட்டவளின் கைகளைப் பற்றி, ''பாரம்மா, வந்தனா ரொம்ப நல்லவர்கள்தான். நம் இருவருக்குமே ரொம்ப ரொம்பவுமே நல்லது செய்த வர்கள்தான். ஆனாலும், முதல் இரவில் அவர்களைப் பற்றி, இதற்கு மேலும் பேசுவது, மிகவும் அதிகப்படி. ஏன், பேசுவதே அதிகப்படி என்பது என் அபிப்பிராயம். நீ என்ன சொல்லுகிறாய்?'' என்று கெஞ்சலும், கொஞ்சலுமாக வினவினான்.

அவள் பதில் கூறாதிருக்கவும், ''என்ன சொல்லு கிறாய், வசு?'' என்று மீண்டும் கேட்டான் விபாகர்.

''ம்ம்... பேசுவதே அதிகப்படி என்று விட்டுக் கேள்வி மேல் கேள்வி கேட்டால் எப்படி?'' என்று கிளுக்கிச் சிரித்தாள், வசுமதி.

அப்புறம், அங்கே வாய்ச் சொற்கள் பயனின்றிப் போயின.